திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"

GAZETTEER UNIT
4/12/60
17 JUN 1965
MADRAS RECORD OFFICE BUILDINGS, MADRAS-8

மாலை 2] சார்வரி ஆனி [மணி 10
ஜூலை 1960

சென்னை அரசாங்க அறநிலையப்
பாதுகாப்புத் துறை வெளியீடு



அழகர் கோயில் தந்தப்பதுமைகள்

திருக்கோயில்

ஆண்டுக் கையொப்பம் : ரூபாய் பத்து
அறநிலையப் பாதுகாப்பு ஆட்சி அலுவலகம்,
நுங்கம்பாக்கம் ஹைரோடு,
சென்னை -6.

பொருளடக்கம்

1. திருவிடைவாய்
2. விசுவரூபம்
3. குங்கிலியக்கலய நாயனர்
4. மணவில் கூத்தன் திருப்பணிகள்
5. திருநீர்மலை
6. நவதிருப்பதியநுபவம்
7. வையை
8. ஆழ்வார்கள்பாடும் ஜகன்மோகன பாலன்
9. கங்கைகொண்டசோழபுரம்
10. மலைநாட்டுத் திருப்பதியநுபவம்
11. திருஆப்பனூர்
12. செருத்துணைநாயனர் திருப்பதி
13. திருக்களிற்றுப்படியார்
14. திருவிசயமங்கை
15. பிரதோஷம்

திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 2] சார்வரி ஆனி - 1960 ஜூலை [மணி 10

GAZETTEER UNIT
4/12/65
17 JUN 1965
MADRAS RECORD OFFICE BUILDINGS, MADRAS-8

திருவிடைவாய்

உ

திருச்சிற்றம்பலம்

மறியார் கரத்தெந் தையம்மா துமையோடும்
பிரியா தபெம்மா னுறையுமிட மென்பர்
பொறிவாய் வரிவண் டுதன்பூம் பெடைபுல்கி
வெறியார் மலரிற் றுயிலும் விடைவாயே. (1)

ஒவ்வாத வென்பே யிழையா வொளிமௌலிச்
செவ்வான் மதிவைத் தவர்சேர் விடமென்பர்
எவ்வா யிலுமே டலர்கோட லம்போது
வெவ்வா யரவம் மலரும் விடைவாயே. (2)

கரையார் கடனஞ் சமுதுண் டவர்கங்கைத்
திரையார் சடைத்தீ வண்ணர்சேர் விடமென்பர்
குரையார் மணியுங் குளிர்சந் தமுங்கொண்டு
விரைவார் புனல்வந் திழியும் விடைவாயே. (3)

கூசத் தழல்போல் விழியா வருகூற்றைப்
பாசத் தொடும்வீ ழவுதைத் தவர்பற்றும்
வாசக் கதிர்ச்சா லிவெண்சா மரையேபோல்
வீசக் களியன் னமல்கும் விடைவாயே. (4)

திரியும் புரமூன் றையுஞ்செந் தழலுண்ண
வெரியம் பெய்தகுன் றவில்லி யிடமென்பர்
கிரியுந் தருமாளி கைச்சூ ளிகைதன்மேல்
விரியுங் கொடிவான் விளிசெய் விடைவாயே. (5)

கிள்ளை மொழியா ளைக்கெழுவ வாழ்த்திப்
தள்ளித் தலைதக்கனைக் கொண்டவர் சார்வாம்
மள்ளல் நெருங்கு மழலைச் செவ்வாய்
வெள்ளைந் நகையார் விளிசெய் விடைவாயே. (6)

பாதத் தொலிபா ரிடம்பா டநடஞ்செய்
நாதத் தொலியர் நவிலும் மிடமென்பர்
கீதத் தொலியுங் கெழுமும் முழவொடு
வேதத் தொலியும் பயிலும் விடைவாயே. (7)

எண்ணு தவரக் கனுரத் தைநெரித்துப்
பண்ணுர் தருபா டலுகந் தவர்பற்றும்
கண்ணுர் விழவிற் கடிவீதிக டோறும்
விண்ணோர் களும்வந் திறைஞ்சும் விடைவாயே.

புள்வாய் பிளந்தா னயன்பூ முடிபாதம்
ஒள்வா னிலந்தே டுமொரு வர்க்கிடமாந்
தெள்வார் புனற்செங் கழுநீர் முகைதன்னில்
விள்வாய் நறவுண் டுவண்டார் விடைவாயே. (9)

உடையே துமிலார் துவராடை யுடுப்போர்
கிடையா நெறியான் கெழுமிம் மிடமென்பர்
அடையார் புரம்வே வமூவர்க் கருள்செய்த
விடையார் கொடியா னழகார் விடைவாயே. (10)

ஆறும் மதியும் பொதிவே ணியனூர்
மாறில் பெருஞ்செல் வமலி விடைவாயை
நாறும் பொழிற் காழியர்ஞா னசம்பந்தன்
கூறுந் தமிழ்வல் லவர்குற்ற மற்றோரே. (11)

திருச்சிற்றம்பலம்.

வடக்கே இமயமலையாலும் மற்ற மூன்று திசைகளிலும் கடல்களாலும் சூழப்பெற்ற நமது பாரத நாட்டில் ஆயிரக்கணக்கான சிவாலயங்களும் வைண ஆலயங்களும், தேவி ஆலயங்கள், முருகன் விநாயகர் இவர்களின் கோயில்களும் உள்ளன. இவற்றுள் பெரும்பகுதி தென்னுட்டில் உள்ளன. சைவ சமய குரவர்கள் திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள், திருநாவுக்கரசு நாயனர், சுந்தரமூர்த்தி நாயனர் இம்மூவரும் திருவாய்மலர்ந்தருளிய தேவாரத்திருப்பதிகங்கள் பெற்ற தலங்கள் தனிச் சிறப்புள்ளவை. அவைகள் 274 என்று கீழ்க் கண்ட பாடலில் சொல்லப்பெற்றிருக்கிறது:—

JL
O2m211,N58
N60 . 2.10
158341



திருவிடைவாய்க் கோயில்
சுவாமி விமானம் கும்பாபிஷேகம்

(கீழே)

அதே கோயிலில்
முருகன், இலட்சுமி சந்நிதிகள்



துங்கவட கயிலாய முதலா வைந்து
துளு வொன்று தொண்டை வளநாட்
டெண்ணுன்கு
தங்குநடு நாட்டிருபத் திரண்டு பொன்னித்
தலநூற்றுத் தொண்ணூறு மலைநாட் டொன்
கொங்கேழு சிங்களத்தி லிரண்டு வையை [று
கொழி தமிழ்நாட் டீரேழு முதலாஞ் சூலச்
செங்கையார் தலமிருநூற் றெழுபா னுன்கிற்
றெக்கிணபாற் கயிலாயந் திருக்குற்றுலம்.

திங்களூர் அப்பூதியடிகள் இல்லத்துக்கு அப்பர் சுவாமிகள் சென்றிருந்தபோது அன்னுர் மூத்தமகன் மூத்த திருநாவுக்கரசு அரவம் தீண்டி இறந்த செய்தியறிந்து திருநாவுக்கரசுசுவாமிகள் அப் பையனின் உடலை அவ்வூர்த்திருக்கோயில் முன்பு கொண்டுபோய், 'ஒன்றுகொலாம்' என்று தொடங் கும் பதிகம் பாடியதாகப் பெரியபுராணத்தில் சேக் கிழார் பெருமான் அருளிச்செய்திருக்கிருர். அந்த தலமும் பாடல்பெற்ற தலங்களோடு சேர்க்கப்பட வேண்டுமென்று கோவை சிவக்கவிமணி சி. கே. சுப்பிரமணிய முதலியாா (சம்பந்தசரணுலயத்தம்பி ரான்) அவர்கள் தங்களுடைய பெரியபுராண விரி வுரையில் குறிப்பிட்டுள்ளார்கள். திங்களூருக்குச் செல்லும் வழியில் திருவையாறு, திருப்பழனம் நெடுஞ்சாலைக்கருகேயுள்ள திருநாவுக்கரசர் தண் ணீர்ப்பந்தலும் அப்பூதியடிகளின் நினைவுச் சின்ன மாக திங்களூர்த்திருக்கோயிலோடு இணைக்கப் பெற்றிருக்கிறது.

1917-ஆம் ஆண்டு திருக்களர் திரு. மு. சுவாமிநாத உபாத்தியாயர் என்ற சிவனடியார் பாடல்பெற்ற தலங்களைத் தரிசித்துக்கொண்டு சென்றபோது திருவிடைவாசல் என்ற தலத்தைப் பற்றிக் கேள்விப்பட்டு, தஞ்சைமாவட்டம் கொர டாச்சேரிக்குத் தென்கிழக்கே சுமார் இரண்டுகல் தொலைவில் பாண்டவாயாற்றின் கீழ்கரையில் இருந்த சிதைவுற்றிருந்த சிவாலயத்தைக்கண்டார். அவர்கண்ட காட்சியைக் கீழ்க்காணுமாறு விளக்கி யுள்ளார் :—

"கோயில் காடுமூடப்பெற்று வெடித்துச் சரிந்து விழுந்துகொண்டு, கதவுகளின்றி, ஜனப் புழக்கம் பூசனையில்லாமல் திறந்திருந்தது. சில மூர்த்திகளின் திருவுருவங்கள் மாத்திரமிருந்தன. காட்டுப்பூனை, மரநாய், கீரிப்பிள்ளை, பாம்பு, வௌவால் முதலியவை பூசை செய்துகொண்டிருந் தன. தேவியார் கர்ப்பக்கிரகம் வாயிற்படி அடைக் கப்பட்டும், விமானம் மேலே இடிக்கப்பட்டும் இருந்தது. பிரகாரத்திலிருந்த காட்டினுள் புகுந்து சுற்றிவந்தேன். பல கல்வெட்டுக்கள் இருந்தன. அவற்றுள் திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர் திருவாய்மலர்ந்தருளிய தேவாரப்பதிகமொன்று அர்த்தமண்டபத் தென்புறத்திலும் மகாமண்டபம் மேல்புறத்திலும் வெட்டப்பட்டிருந்தது. நீராழி மண்டபம் செங்கற்சுவர் சம்பந்தமிருந்ததாலும் செடிகள் மறைத்துக்கொண்டிருந்ததாலும் அதை எடுப்பதற்கு இயலவில்லை. அவ்வூரில் உதவி செய்யக்கூடியவர்களும் இல்லை.''

பின்பு அவர் திருக்களர்க்குச்சென்று சில நண்பர்களை அழைத்துக்கொண்டுபோய் வெகு சிரமப்பட்டு அப்பாடல்களை எடுத்தார். அவற்றுள் சில எழுத்துச் சிதைவுகள் இடையிடையே இருந் தன. கரம்பைக்குடி திரு. குமாரசுவாமிப் பிள்ளை அவர்களைக் கலந்துகொண்டு அப்பாடல்களை வெளி யிட ஏற்பாடு செய்தார். அக்காலத்திலிருந்த திருவா வடுதுறை ஆதீனகர்த்தர் இதையறிந்து மிக்க மகிழ்ச்சியடைந்து திருக்கோயிலைக் கட்டுவதற்கும், பூசனை நடைபெறுவதற்கும் விருப்பம் கொண்டிருப் பதாகவும் தெரிவித்தார். அவர் காலம்வரை பூசைக்குப் பொருளுதவி கிடைத்தது. திருப்பணி யொன்றும் நடைபெறவில்லை. மேலே சொன்ன ஒரு பாடலில் கண்டபடி பாடல்பெற்ற சோழநாட் டுத் தலங்கள் 190. அவைகளுடன் தேவாரப் பாடல்களுடைய திங்களூர், திருவிடைவாய் இவை களையும் சேர்க்க 192 ஆகும்.

1956—57-ஆம் ஆண்டில் அரசாங்க அற நிலையத்துறையார் பதினைந்தாயிரம் ரூபாய் கோயில் திருப்பணிக்காக வழங்கினர். இடிந்துகிடந்த கோயிலைக்கட்ட முதலில் முயற்சி செய்தவர்கள் கொரடாச்சேரி சைவ சித்தாந்த நிலையத்தலைவரான தவத்திரு வாலையானந்த சுவாமிகள் ஆவார்கள். அவர் காலஞ்சென்றபின் அந்த மடத்திற்குத் தலைவ ராகவந்த தவத்திரு ஆறுமுக சுவாமிகள், பூவனூர் திரு. பி. சுப்பையா முதலியார், வடகால் திரு. சிங்கப்பெருமாள் நாட்டார், மன்னுர்குடி திரு. சுவாமிநாத உடையார், எம். எல். ஏ., கொரடாச் சேரி திரு. தண்டபாணி செட்டியார் இவர்கள் அடங்கிய குழு ஒன்று திருப்பணியைச் செய்து வந்தது. அரசாங்க உதவித்தொகை ரூ. 15.000த் துடன், உபரிவருமானமுடைய சில கோயில்களின் உதவித்தொகை, இரட்டை அரு. முதலியவர்கள் நன்கொடை எல்லாமாக சுமார் ரூ 65,000 செல வில் திருப்பணி நிறைவேறியது. திரு. சுவாமிநாத உடையார், எம். எல். ஏ., அவர்கள் திருக்குளப் படித்துறையைக் கட்டினுர்கள். திருப்பணி நன்கு நிறைவேற திருப்பணிக் குழுவினரின் சிறந்த முயற்சியும், சலியாத உழைப்பும் பெரிதும் பாராட் டத்தக்கது. சமயத்தொண்டரான திருக்கருகாவூர் திரு. கோ. சிவஞானம் அவர்கள் தன் செலவில் திருஞானசம்பந்தர் பதிகத்தை கல்லில் பொறித்து கோயிலில் அமைத்தது பெரிதும் போற்றத்தக்கது. 12—6—1960 மகாகும்பாபிஷேகமும் இனிது நடைபெற்றது. கும்பாபிஷேகத்திற்காக திரு. சுப்பையா முதலியார் அவர்கள் செய்த உதவி மிகவும் பாராட்டுதற்குரியது. இவ்வூரிலுள்ள அரங்கநாதப்பெருமாள் கோயிலுக்கும் திருப்பணி செய்யப்பெற்று அதே நாளில் மகாசம்ப்ரோக்ட் சணம் நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான மக்கள் கண்டு களித்தனர். அன்றிரவு சிவன்

கோயில் மூர்த்திகள் புஷ்ப விமானத்திலும், விஷ்ணு கோயில் மூர்த்தி கருடவாகனத்திலும் வீதியுலாக் காட்சியளித்தனர்.

திருவிடைவாய் என்ற தலம் விடையன் என்ற சூரிய குலத்தரசன் உண்டுபண்ணியதென்றும் இறைவனை இடபதேவர், ஆதிசேடன், அகத்தியர், அத்திரி முதலியோர் வழிபட்டனர்என்றும் கூறப்படுகிறது. இத்தலத்தின் தீர்த்தங்கள் இடபதீர்த்தம், ஆதிசேட தீர்த்தம், அத்திரி தீர்த்தம், அகத்தியதீர்த்தம் பாண்டவாய் ஆறு முதலியன. கோயிலில் மகாலிங்கம், தேவியார், விநாயகர், தாண்டவவிநாயகர், ஆதிசேடன், பைரவர், சூரியன், சம்பந்தர் முதலியயவர்களின் திருவுருவங்கள் பாலாலயத்தில் இருந்தன. அவைகளுடன் ஸ்ரீசுப்பிரமணியர், நடராஜப் பெருமான், சிவகாமியம்மை, அப்பர், சுந்தரர் மாணிக்கவாசகர், இலக்குமியம்மை உருவங்களும் அமைக்கப்பெற்றுள்ளன. விநாயகர், சுவாமி, அம்பாள், நடராஜர், சுப்பிரமணியர், இலக்குமி ஆலயங்களுக்கு விமானங்களும் முறைப்படி அமைக்கப்பட்டுள்ளன. இறைவனின் திருப்பெயர் புண்ணியகோடிநாதர்; தேவியாரின் திருநாமம் அபிராமியம்மை.

திருஞானசம்பந்தர் அருளிய பதினெரு பாடல்களையுடைய பதிகம் ஒன்று இத்தலத்துக்குண்டு என்பதைக் கல்வெட்டால் கண்டறிந்தோம். திருநாவுக்கரசர் திருவாய்மலர்ந்த அடைவுத்திருத் தாண்டகம் மூன்றும் பாசுரத்தில் "விடைவாய்க் குடி" என்று குறிக்கிறார். அறுபான்மும்மை நாயன்மார்களில் ஒருவரான ஐயடிகள் காடவர் கோன் நாயனர் தாம் பாடிய க்ஷேத்திரத்திருவெண் பாவில் கீழ்க்காணும் பாடலால் இந்த தலத்தைச் சிறப்பித்திருக்கிறார் :—

மாண்டுவாய் அங்காவா முன்னம்மட நெஞ்சே
வேண்டுவா யாகி விரைந்தொல்லைப்—பாண்ட
வாய்த்
தென்னிடைவாய் மேய சிவனர் திருநாமம்
நின்னிடைவாய் வைத்து நினை.

திருவிடைவாய்க்கோயிலுக்கு நித்திய நைமித்திகபூசைகள் செய்வதற்குப் போதிய வருவாய் இல்லை. பாடல்பெற்ற பழம்பதியான இங்கே எழுந்தருளியுள்ள இறைவனுக்கு இவை நடைபெற சைவ மக்கள் பூதானம், சொர்ணதானம் முதலிய நன்கொடைகள் வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

செய்திகள்

மாடவிளாகம்: திருக்கள்ளீசுவரர் கோயிலுக்கு 6-3-60-ல் சென்னையிலிருந்து தருமபுரஆதீன சைவப்பிரசார சபையினர் சுமார் 60பேர் வந்திருந்து வழிபாடு நடாத்தினார்கள். கிராமத்தார் பலர் வந்திருந்து சைவ விளக்கங்களை கேட்டார்கள். ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகளால் புத்தாண்டின் பஞ்சாங்கம் இலவசமாக வழங்கப்பட்டது. 31-3-60 கிருத்திகையன்று திரு வி. ஆர். துரைசாமி முதலியார் தன் குடும்பத்தினர் சிவனடியார்களோடு வந்து மேற்படி ஆலயத்திலுள்ள பாலசுப்ரமண்ய சுவாமிக்கு விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனை செய்து "வெற்றிவேல்" சாத்துப்படி செய்யப்பட்டது.

சென்னை: கந்தகோட்டம்—கந்தசாமி கோயில் வசந்தோற்சவம் 31-5-60 முதல் 18-6-60 வரையில் 19 நாட்கள் தொடர்ச்சியாக கூனம்பட்டி, மாணிக்கவாசக சுவாமிகள் மடாலய இளவரசு திரு நா. சரவண மாணிக்கவாசக சுவாமிகள் அவர்களால் பெரிய புராணமெனும் திருத்தொண்டர் புராண விரிவுரைகள் மாலை 6 முதல் 8 மணிவரையில் நடைபெற்றது. அறநிலையத்துறை ஆணையர் திரு அ. உத்தண்டராமன், ஐ. ஏ. எஸ்., அவர்கள் தொடங்கிவைத்தார்கள். 2-6-60-ல் அறநிலையத் துறைத்துணை ஆணையர் திரு எம். எஸ். சாரங்கபாணி முதலியார், பி. ஏ. பி. எல்., அவர்களும் கலந்துகொண்டார்கள். அன்று இரவு 9-மணிக்கு நூதன புஷ்பஸ்கந்த கிரி விமானம் பெரிய வீதி மகோற்சவம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

திருவிடைமருதூர்: திரு மகாலிங்க சுவாமி கோயிலில் திருக்கல்யாண மகோற்சவம் 29-5-60 ஆரம்பித்து 7-6-60 வரை நடைபெற்றது.

ஆச்சாள்புரம்: சிவலோக தியாகராய சுவாமி கோயிலில் பிரமோற்சவம் 28-5-60 முதல் 10-6-60 வரை நடைபெற்றது. சமயச் சொற்பொழிவுகளும் நடைபெற்றன,

விசுவரூபம் – 4

ஸ்ரீமத் பகவத் கீதையில்

(பி. ஸ்ரீ.)

கண்ணனுடைய விசுவரூபதரிசனம் பகவத்கீதையின் பதினோராம் அத்தியாயத்தின் விஷயமாகும் என்பதைப் பலரும் அறிவர். வடமொழியில் இந்த நூலை வாசித்திராதவர்களும் மொழிபெயர்ப்பு மூலமாக அறிந்திருப்பார்கள். நமது இரண்டு இதிகாசங்களில் மகாபாரதத்தின் பகுதியாக அமைந்திருக்கிறது கீதை. பீஷ்மபர்வத்தில் 25-ம் அத்தியாயத்திலிருந்து 42-ம் அத்தியாயம் வரையில் 700 சுலோகங்களும் பகவத்கீதையின் பதினெட்டு அத்தியாயங்களாக அமைந்திருக்கின்றன.

பாலும் வெண்ணெயும்

மகாபாரதம் பால் என்றால், அதன் வெண்ணெய் கீதை என்பர். மகாபாரதத்தின் சாரம் பகவத்கீதை என்பது கருத்து, மகாபாரதம் என்ற உடம்பிற்குப் பகவத்கீதை இதயம் என்று கூறுவதும் உண்டு. விசுவரூப தரிசனத்தை மகாபாரதக் கதைப் போக்கிலும் காண்கிறோம்; அதன் உட்பிரிவும் இதயமும் ஆகிய கீதா சாஸ்திரத்திலும் காண்கிறோம்.

தன்னை வஞ்சித்துச் சிறைப்படுத்த முயன்ற துரியோதனின் இராஜசபையில் விசுவரூபம் காட்டினான் கண்ணன். அது கண்டும் துரியோதனன் அஞ்சவில்லை; கண்ணனை மதிக்கவும் இல்லை. நாட்டின் சிறு பகுதியையும் திருப்பித்தர மாட்டோம் என்று அறவே மறுத்துவிடுகிறான். எனினும் கண்ணனைப் படைத்துணையாகப் பெறவேண்டுமென்று அர்ச்சுனன் சென்றதுபோல் துரியோதனனும் துவாரகைக்குச் செல்லுகிறான். ஏன்?

கண்ணன் கண்வளர்ந்த நிலையில்காணப்படுகிறான். அர்ச்சுனன் மரியாதையாகக் கால்மாட்டில் வந்து நின்றுகொண்டிருக்கிறான். துரியோதனனோ தலைப்பக்கத்தில் வந்து இறுமாந்து உட்கார்ந்திருக்கிறான். கண்விழித்ததும் கண்ணன் பார்வை அர்ச்சுனன் மீது விழுகிறது. அர்ச்சுனன் வேண்டுகோளுக்கு இணங்க ஐவர்க்குத் துணைபுரிய இணங்குகிறான் கண்ணன். 'நான் வந்த காரியமும் அதுதான்' என்று துரியோதனன் சொல்லக் கண்ணன் சிரித்துக்கொண்டே, 'நான் அர்ச்சுனனுக்குப் படைத்துணை யாவதாக ஏற்கெனவே சொல்லிவிட்டேன். என் படைத்துணை வேண்டும் உனக்கு என் படைகளையெல்லாம் துணையாக அனுப்பிவைக்கிறேன்' என்று முடிவு கட்டுகிறான். துரியோதனனுக்குத் திருப்திதான், மகிழ்ச்சிதான். இப்போது விளங்கிவிடுகிறதல்லவா துலாம்பரமாகத் துரியோதனன் வந்த காரியம்?

கண்ணனை மதித்தா வந்தான் கௌரவர் தலைவன்? சேனையின் பலத்தைத் தான் நம்பினான். 'பழம் நழுவிப் பாலில் விழுந்தது!' என்று ஊருக்குத் திரும்பினான். பாண்டவர்களோ துரியோதனனுக்குப் படைப்பெருக்கம் ஏற்படுகிறதே என்று கவலைப்படவில்லை. 'பகவான் துணை செய்வான்; கிருஷ்ண சகாயம் கிடைத்துவிட்டது.' என்று மகிழ்ந்து போகிறார்கள்.

தானும் ஆயுதம் எடுத்துப் போர்புரிவதில்லை என்று இசைந்திருந்தான் கண்ணன். பழம் நழுவிப் பாலில் விழுந்து அதுவும் வாயில் விழுந்துவிட்டதாகவே கருதினான் துரியோதனன். அர்ச்சுனனோ நிராயுதபாணியான கண்ணனை நம்பினான்; அருளின் சக்தியை நம்பினான்; ஸ்தூலசக்தியை மட்டும் நம்பவில்லை. எனினும், இந்த மனநிலை நிலைத்திருக்க வேண்டாமா? இதற்குச் சோதனை ஏற்படுகிறது.

போர்க்களம் செல்லும் வரை ஒரே துணிச்சல்தான் அர்ச்சுனனுக்கு. ஆனல் அங்கே பீஷ்மன் துரோணன் முதலியவர்களைப் பார்த்ததும் இதயதுர்ப்பலம் வந்துவிடுகிறது. போரிடுவதா, புறங்காட்டுவதா,— எது சரி? ஒன்றும் விளங்கவில்லை. அர்ச்சுனனது மயக்கத்தைப் போக்கி உண்மையை உணர்த்தவே கீதை உபதேசிக்கப்படுகிறது. இதற்காகவே கண்ணன் அர்ச்சுனனுக்குத் தன் விசுவரூபத்தையும் காட்டுகிருன். மகாபாரதமாகிய பாலில் வெண்ணெய்போலிருக்கும் பகவத்கீதையில் 'விசுவரூப தரிசன யோகம்' என்ற தலைப்பெயருள்ள பதினோராவது அத்தியாயம் ஒரு நெய் விளக்கைப்போல் அர்ச்சுனனின் உள்ளத்திலுள்ள மயக்க இருளை அகற்றுகிறது என்று சொல்லலாம்.

பார், பார் இந்த உருவத்தை!

'பரமேசுவரா! உன்னுடைய ஈசுவரஉருவத்தை நான் பார்க்க விரும்புகிறேன்' என்று அர்ச்சுனன் தன் ஆசையை அறிவித்துக் கொள்கிருன். ஆசை போதுமா? அதைப் பார்க்க ஆற்றலும் வேண்டுமே. காண முடியாத பேரொளிக்குக் கண் குருடுதானே! அந்தப் பேருருவத்தைப் பார்க்கத் தனக்கு இயலும் என்று கண்ணன் எண்ணினல் காட்டியருளவேண்டும் என்பது அர்ச்சுனன்வேண்டுகோள்.

ஆனல் அர்ச்சுனனல் பார்க்க இயலுமா என்பது முக்கியம் அல்ல. விசுவரூபம் காட்டித் தரிசனமும் கொடுத்தருள எல்லாம்வல்ல இறைவனுக்கு இயலும் என்பதுதான்இங்கே நாம் முக்கியமாகத் தெரிந்துகொள்ளவேண்டியது.

அர்ச்சுனன் விண்ணப்பித்துக்கொண்டதும், 'இனிப் பார் அப்பா, பல நிறங்களும் வடிவங்களும் உடைய எனது விசுவரூபக் காட்சிகளை; நூற்றுக்கணக்கிலும் ஆயிரக்கணக்கிலும் பார்ப்பாய்!' என்கிருன் கண்ணன். அர்ச்சுனன் பார்க்கிருன்.

'பார் சூரியர்களை, வசுக்களை, உருத்திரர்களை ...' என்று கண்ணன், குழந்தைக்குப் படங்கள் காட்டுகிறவனைப்போல் அடுக்கிக் கொண்டே போகிருன். முன்பு கண்டிராத பல அதிசயங்களையும் பார்க்கிருன் அர்ச்சுனன்.

'எனது இவ்வுடம்பிலே ஒன்றுசேர்ந்துள்ள சராசரங்களாகிய உலகம் முழுவதையும், மேலும் நீ பார்க்க விரும்பும் வேறுஎதையும், இப்போது காண்பாய்!' என்கிருன் கண்ணன். விசுவரூபக் காட்சியில் அண்டங்களின் அமைப்பு, நடை முறை எல்லாம் விளங்கிவிடும் என்பது குறிப்பு.

அகக்கண் பார்க்கிறது

ஆனல் அர்ச்சுனன் பார்த்தது எப்படி? ஆசைக்கு இவ்வளவு ஆற்றல் முளைத்துவிட்ட அதிசயம்தான் என்ன? 'உனதுஊனக் கண்ணல் என்னை நீகாண இயலாது; உனக்கு ஞானககண் தருகிறேன்' என்கிருன் கண்ணன்.

அர்ச்சுனனுடைய அகக்கண்ணனுக்கு இலக்காகின்றன பல முகங்கள், பலகண்கள், பல தெய்விக அணிகள், ஆயுதங்கள். எத்தனை அதிசயக் காட்சிகள்! திவ்யமான ஆடைகள், திவ்யமான மாலைகள் எத்தனை! திவ்ய வாசனைதான் எப்படிக் கமழ்கிறது! பெருவியப்பு, பேரொளி: முடிவற்றதும் எங்கும் முகம் உடையதுமான பேருருவத்தைக் காண்கிருன் அர்ச்சுனன்.

இந்த ஒளிக்கு ஒப்பும் உண்டோ? ஆயிரம் சூரியர்கள் வானத்தில் ஒரே காலத்தில் உதித்துவிட்டனவா? 'இந்த மகாத்மாவின் ஒளியை என்னென்பது?' என்று பிரமிக்கிறது உள்ளம்.

பலவாய்ப் பிரிந்திருக்கும் உலகங்களெல்லாம் தேவ தேவனுடைய திருமேனியில் ஒன்றுகூடி இசைந்திருப்பதைப் பார்க்கிருன் அர்ச்சுனன், பன்மையில் ஒருமை; ஓ, ஒருமையில் பன்மை!

அர்ச்சுனனுக்கு உரோமம் சிலிர்க்கிறது; கைகள் கூம்புகின்றன; தலை வணங்குகிறது. பேசத்தொடங்குகிருன்:

'தேவா! உன்னுடைய இந்த மேனியில் உயிர்த்தொகுதிகள் அனைத்தும் காணப்படுகின்றன. விண்ணவர்கள் அனைவரும் படைப்புக்கடவுளான பிரமதேவனும் காணப்படுகிருர்கள். எல்லா முனிவர்களும் தோற்றம் அளிக்கிருர்கள். வாசுகி முதலான திவ்ய சர்ப்பங்களும் காணப்படுகின்றன.

இப்படிக் கூறியபின் அர்ச்சுனன் இந்த உலக நாயகனுக்கு உலகமெல்லாம் வடிவு என்ற கருத்துடன் 'அகிலாண்ட உருவினனே!' என்று அழைக்கிறான். எண்ணிறந்த கைகளும் வயிறுகளும் முகங்களும் கண்களும் உடைய அளவில்லாத இவ்வுருவத்தை எங்கும் பார்ப்பதாகச் சொல்லுகிறான். இவ்வுருவத்தின் தொடக்கத்தையோ முடிவையோ இடையையோ காண்பதும் சாத்தியமில்லையே என்கிறான்.

விசுவரூபம் முடிதரித்து, சக்கரம், கதை என்ற ஆயுதங்களும் தரித்து, எங்கும் ஒரே ஒளிப்பிழம்பாய்க் காண்கின்றதாம். கொளுத்துகிற தீயும் சூரியனும் போல ஜொலிக்கிறதாம். அளவிட முடியாது, காண்பதும் அரிது!-எனினும் இக்காட்சியை அர்ச்சுனன் எங்கும் காண்பதற்குக் காரணம் கண்ணன் அருளால் இப்போது ஞானக்கண் பெற்றிருப்பதுதான்.

அர்ச்சுனன் வாக்கு

வருணிக்க முடியாத அந்தக் காட்சியை வருணித்துப் பார்க்கிறான். சித்தாந்தப்படுத்தியும் தன் கருத்தை வெளியிடுகிறான்.

உலகுக்கு உறைவிடமான பரம் பொருளை என்றென்றும் உள்ள பரமாத்மாவாக அறிவதாய்ச் சொல்லுகிறான். முடிவில்லாத சக்தியையும், எல்லையற்ற செயல்-திறனுக்கு அறிகுறியான எண்ணிறந்த கைகளையும் கண்டு, 'விண், மண், இடைவெளி எல்லாம் உன்னாலே நிரம்பப்பெற்றிருக்கின்றன' என்கிறான். அற்புத உக்கிர வடிவம் என்கிறான் இந்த விசுவரூபத்தை. சரி; நீக்கமற எங்கும் நிறைந்திருக்கும் வியாபகசக்தியைத்தான் அர்ச்சுனன் இப்போது காண்கிறானா?—கண்டதாய்ப் பேசுகிறானா? அப்படியானால் உலகத்தை நடுங்கச் செய்யும் பயங்கரக்காட்சிதானா இந்த விசுவரூபம்? இனிமை, அழகு, அன்பு—இவை எங்கே?

பேச்சும் பொருளும்

அர்ச்சுனனுடைய மனப்பான்மையைக் கவனிக்கவேண்டும். யுத்த பயங்கரங்களே இவன் உள்ளத்தில் இடம் பெற்றிருந்தன. அத்தகைய பயங்கரங்களை உண்டாக்கப் போவது தன்னுடைய சக்தி என்று தான் முதல் முதல் எண்ணமிட்டான். ஆனால் ஆணவத்திரை விலக, அதற்குப் பின், உலகத்தைத் திருத்தியமைக்கப் பிறந்திருக்கும் தெய்வ சக்தியைக் காண்கிறான். இந்தத் தெய்வசக்தி அற்புத உக்கிரமானது என்பது புலனாகிறது.

விண்ணவர்கள் அஞ்சிக் கைகூப்புவதையும், முனிவர் சித்தர் குழாங்கள் வாழ்த்துவதையும், துதிப்பதையும் கண்டு குறிப்பிட்டுப்பேசுகிறான். வியந்து வியந்து பார்த்துக் கொண்டிருக்கும் வானவர் கூட்டங்களையும் குறிப்பிடுகிறான்.

விசுவரூப முகங்களில் பயமுறுத்தும் வளைந்த பற்கள் பல இருக்கின்றனவே!—என்றும் பதறிப் பேசுகிறான்.' 'உலகங்கள் நடுங்குகின்றன; நானும் அப்படியே!' என்கிறான். இனிமை, அன்பு, அழகு முதலான தெய்வ அம்சங்களும் இப்போது ஒரே பயங்கரமாய்த் தோன்றுகின்றன.

'வானளாவிப் பல நிறங்களுடன் ஒளிர்கின்ற பிளந்த வாய்களும், கனல் வீசும் விசாலக்கண்களும் உடைய உன்னைக் கண்டு கலங்கிய நான் தைரியத்தையும், அமைதியையும் காண்கிறேனில்லை' என்கிறான். ஊழித்தீக்கு ஒப்பான முகங்களைக் கோரப் பற்களுடன் கண்டதும் தனக்குத் திசைகள் தெரியவில்லை என்கிறான். 'உலகத்தின் ஆதார நிலயமே! அருள்புரிக' என்று பிரார்த்திக்கிறான்.

இறுதிக்காட்சி

'யுத்த பயங்கரங்களை நான் ஏன் விளைவித்துப் பீஷ்மன் துரோணன் முதலான பெரியோர்களையும் உறவினர்களையும் கொல்ல வேண்டும்?' என்ற ஐயத்துடன் 'வெற்றி யாருக்கோ?' என்ற ஐயமும் அர்ச்சுனனுக்கு இருக்கத்தான் செய்தது. இதற்குப் பகவத் கீதையின் இரண்டாம் அத்தியாயத்தில் ஆறும் சுலோகத்தில் ஆதாரம் உண்டு. இப்போது ஐயப்பாடுகளுக்கெல்லாம் ஒரே விடையாக விசுவரூபத்தின் இறுதிக்காட்சி நிகழ்கிறது.

என்ன கோரமான காட்சி! பாராளும் வேந்தர் கூட்டமல்லவா அது? அதோ துரியோதனன் முதலிய கௌரவர்கள்! அதோ முக்கியமான வீரர்கள்! அதோ வீரவீரனான

கர்ணன்! அவர்களுக்குத்தான் என்ன ஆத்திரம்! ஐயோ, பீஷ்மர் துரோணர் முதலானவர்களும் பயங்கரமான கோரப் பற்களுக்கிடையே பரபரப்புடன் பிரவேசிக்கிறார்கள்.

'சிலர் பொடிபட்ட தலைகளுடன் உன்னுடைய பல் இடுக்குகளில் சிக்கிக்கொண்டிருக்கிறார்களே!' என்று கதறுகிறான் அர்ச்சுனன். கர்ணனைக் கண்டதும் 'தேரோட்டி மகன்' என்றான், பெரும் பகைமையுணர்வு தோன்ற.

'வெள்ளமிட்டு விரைந்தோடும் ஆறுகள் பல கடலையே நோக்கிப் பாய்வதுபோல், எங்கும் வெந்தழல் கக்கும் வாய்களுக்குள் பூலோக வீரர்கள் புகுகின்றனரே!' என்கிறான் அர்ச்சுனன். விட்டிற் பூச்சிகள் சுடர் விட்டெரியும் தீயில் பாய்ந்து மாய்வதுபோல் மாய்கின்றனரே வீரர்கள்!—என்கிறான்.

ஆம்; பகைவர்கள் மட்டுமா மடிகிறார்கள்? அர்ச்சுனன் பக்கத்திலும் பெரிய வீரர்கள் மடியப்போகிறார்களே. 'ஜொலிக்கின்ற வாய்கள் இப்படி விழுங்க, நாக்கு எப்புறமும் நக்கி ருசி பார்க்கின்றதாம். கொடுமைக்கு மேல் கொடுமையாக நிகழ்கின்றது காட்சி.

'பயங்கர மூர்த்தியே நீ யார்? உன் செயல் எனக்கு விளங்கவில்லையே; அருள் புரிக' என்று கேட்கிறான் அர்ச்சுனன். அதற்குக் கண்ணன் 'உலகங்களை அழிக்கவல்ல காலம் நான்!' என்று பதில் சொல்லுகிறான்.

விடையின் கருத்து

தன்னை மகா காலமாக அறிவித்துக் கொள்ளும் கண்ணன் 'நான் கொல்லத் தலைப்பட்டிருக்கிறேன்' என்கிறான். காலத்திலே தோன்றும் பொருள்கள் சிறிது சிறிதாகக் காலத்தால் விழுங்கப்படுகிறது. சில வேளைகளில் பெருவாரியாக விழுங்கவும் அவசியம் நேர்ந்து விடுகிறது. 'இந்த மகாபாரத யுத்தத்திலே நான் பெருவாரியாக விழுங்கப் போகிறேன்' என்கிறது காலம் கண்ணனது கோர விசுவரூப வடிவிலே.

பாட்டனாரைக் கொல்லலாமோ? ஆசாரியரையும் கொல்லத்தகுமோ? இப்படித் தயங்கிய அர்ச்சுனனை நோக்கி, 'அந்தச் செயல் உன்னுடையதல்ல' என்கிறது காலம். அர்ச்சுனன் போரிட மறுத்துவிட்டாலும் அவர்கள் அழியப்போகிறார்கள் என்று காலம் அறிவித்து விடுகிறது, சோதிடம் கூறுவதுபோல.

'அவர்கள் ஏற்கெனவே என்னால் கொல்லப்பட்டிருக்கிறார்கள்!' என்கிறான் கண்ணன். அதர்மத்தில் மூழ்கிப்போனவர்கள் போனவர்களே! இது தெய்வத்தின் திட்டம். தெய்வத்தின் கையில் கருவியாக இருப்பது தான் அர்ச்சுனன் கடமை.

'உனக்குப் பன்முறை வணக்கம்; ஆயிரம் தடவையும் அதற்கு மேலும் வணக்கம். முன்புறத்திலும் பின்புறத்திலும் வணக்கம். எல்லா மானவனே! எல்லாப் பக்கங்களிலும் உனக்கு வணக்கம்' என்று திகைத்துத் தடுமாறி வணக்கம் தெரிவித்துக்கொள்கிறான் அர்ச்சுனன்.

'காணாததைக் கண்டு மகிழ்ந்தவனாயிருக்கிறேன்' என்று நடுங்கிக்கொண்டே சொல்லுகிறான். ஆம்; உள்ளம் நடுங்குகிறது அச்சத்தால் என்பதையும் ஒப்புக்கொள்ளுகிறான்.

தான் ஏற்கெனவே பழகியிருந்த இனிய கண்ணன்-வடிவத்தையே பார்க்க விரும்புகிறான். போரைப்பற்றிய மயக்கம் ஒழிந்தும் விசுவரூபம் கண்ட நடுக்கம் இன்னும் ஒழிந்தபாடில்லை. விசுவரூபம் மறைந்து போகிறது; கண்ணன் பழைய தோழனாக நின்று ஆறுதல் அளிக்கிறான்.

அர்ச்சுனன் கண்ட விசுவரூபம்

'உன்னைத் தவிர வேறு யாரும் இதை முன்பு கண்டதில்லை' என்கிறான் கண்ணன் அர்ச்சுனனை நோக்கி, அதனால், துரியோதன ராஜ சபையில் கண்ணன் காட்டிய அந்த விசுவரூபம் வேறு, இது வேறு என்று ஊகம் செய்துகொள்ளலாம். மகாபாரத நெருக்கடியில் தெய்வத்தின் திட்டத்தை ஒருவாறு புரிந்துகொண்டு அர்ச்சுனன் தன் கடமையைச் செய்யவேண்டும் என்பதற்காகவே ஏற்படுகிறது இந்த விசுவரூபக் காட்சி. அர்ச்சுனன் பலனைக் கருதாது மகாபாரதயுத்தத்தில் ஈடுபட்டுத் தெய்வத்தின் திட்டத்தை நிறைவேற்றி வைக்கவேண்டும் என்பது இப்போது கண்ணன் விசுவரூபம் காட்டியதன்நோக்கம்.

விசுவரூபக் காட்சி அர்ச்சுனனைச் சோதித்துக் கடவுளின் கருவியாகத் தேர்ந்தெடுத்துத் தொழிற்படுத்துவதைப் பாரத யுத்தத்திலே காணப்போகிறோம். அர்ச்சுனன் மக்களின் பிரதிநிதி. எனவே கீதையிலுள்ள 'விசுவரூப தரிசன யோகம்' நம் உள்ளத்தை பண்படுத்த உதவும்.

குங்கிலியக்கலய நாயனர்

கடவூரிற் கலயன்ற னடியார்க்கு மடியேன்
—சுந்தரர்.

ஏய்ந்த கயிறுதன் கண்டத்திற் பூட்டி
யெழிற் பனந்தாள்
சாய்ந்த சிவனிலேத் தானென்பர்
காதலி தாலி கொடுத்(து)
ஆய்ந்தநற் குங்கிலியங் கொண்
டனற்புகை காலனைமுன்
காய்ந்த வரற்கிட்ட தென்கட
வூரிற் கலயனையே

—நம்பியாண்டார் நம்பி.

பாடல் பெற்ற சிவத்தலங்களைப் பிரித்த ஆன்றோர் சோழ நாடு, ஈழநாடு, பாண்டி நாடு, சேர நாடு, கொங்குநாடு, நடுநாடு, தொண்டை நாடு, துளுவ நாடு, வடநாடு என்று பொது வகையாற் பிரித்தனர். சிறப்பு வகையாலும் சில பகுதிகளைச் சேர்த்தும் வகைப்படுத்திக் கூறியுள்ளனர். அவை பஞ்ச பூதத்தலங்கள், அட்ட வீரத் தலங்கள், முத்தித்தலங்கள், சப்தவிடங்கத்தலங்கள், பஞ்ச சபைகள் முதலியன. சிவபெருமான் வீரச் செயல் நிகழ்த்திய இடத்தை வீரட்டம் என்பர். அவை எட்டு என்பதை,

பூமன்சிரங்கண்டி, அந்தகன் கோவல்,
புரம்அதிகை,
மாமன் பறியல், சலந்தரன்விற்குடி,
மா வழுவூர்,
காமன் குறுக்கை, யமன்கடவூர்,
இந்தக் காசினியில்
தேமன்னு கொன்றையுந்
திங்களுஞ்சூடிதன் சேவகமே

என்ற பாடலால் அறியலாம். அட்ட வீரட்டங்களில் ஒன்று திருக்கடவூர். மார்க்கண்டனுக்காக சிவபெருமான் காலனைக் காலால் உதைத்த இடம். இத்திருத்தலம் சோழ வள நாட்டில் காவிரிக்குத் தென்கரையிலுள்ள பாடல் பெற்ற சிவப்பதிகளில் ஒன்று. இவ்வூரின் பெருமையைக் கூறும் சேக்கிழார் பாடல் ஒன்று பின் வருமாறு :—

வயலெலாம் விளைசெஞ் சாலிவரம்பெலாம்
வளையின் முத்தம்
அயலெலாம் வேள்விச் சாலை
அணையெலாம் கழுநீர்க் கற்றை
புயலெலாங் கமுகின் காடப்
புறமெலா மதன்சீர் போற்றல்
செயலெலாந் தொழில்க ளாரே
செழுந்திருக் கடவூ ரென்றும்.

இத்தகைய திருவின்மிக்க வளம்பதியில் கலயர் என்ற அந்தணப் பெரியார் வாழ்ந்து வந்தார்; சிவனடிபேணும் சிந்தையர்; ஒழுக்கம் மிக்கவர்: அத்தலத்தில் கோயில்கொண்டெழுந்தருளியுள்ள அமிர்தகடேசுவரருக்கு குங்கிலியத் தூபம் இடும் திருப்பணியை முறைப்படி செய்து வந்தார். இவ்வாறு ஒழுகி வந்த அவருக்கு வறுமை வந்தது. அப்படியிருந்தும் தமது திருப்பணியை வழுவாது செய்து வந்தார். நிலம், அடிமைகள் முதலியவற்றை விற்றும் தொண்டை நடத்தினர். வறுமை மிகவும் மேலிட மனைவி மக்கள் முதலியோர் இரண்டு நாட்கள் உணவின்றி வருந்தினர்கள். இது கண்ட கலயனரின் மனைவியார் தமது மங்கல நாணிலுள்ள தாலியைக் கொடுத்து நெல் கொள்ளுமாறு கூறினர். அதை வாங்கிக்கொண்டு நாயனர் செல்ல எதிரில் ஒருவன் குங்கிலியப் பொதியுடன் வந்தான். இதைத் தாம் பெற்ற பேறாகக் கருதிய நாயனர் வணிகனைத் தாலிப்பொன் கொண்டு குங்கிலியம் கொடுக்குமாறு கேட்டனர். அவனும் அப்படிச் செய்யவே, கலயனர் அப்பொதியைக் கோயில் பண்டாரத்தில் சேர்த்து தமது திருப்பணியைச் செய்துவிட்டு அங்கேயே தங்கி விட்டார்.

வீட்டிலிருந்த மனைவி மக்களோ பசியால் வருந்தி அன்றிரவு அயர்ந்து உறங்கினர். இறைவன் திருவருளால் குபேரன் கலயனர் வீடுமுழுவதையும் பொற்குவை, நெற்குவை

முதலிய எல்லாவற்றாலும் நிரப்பினன். கலயனாரின் மனைவியார் கனவில் தோன்றி இறைவன் இதை உணர்த்த, அவ்வம்மையார் எழுந்து செல்வங்களைக் கண்டு இறையருள் என்று கொண்டு, கணவனார்க்கு அமுது சமைக்கலாயினர். கோயிலில் இருந்த கலயனாரை "நீ மிகப் பசித்திருக்கின்றாய். இல்லம் சென்று பால் சோறு சாப்பிடுவாயாக" என்று எம்பிரான் கட்டளையிட்டார். வீடு சென்ற நாயனார் செல்வமெல்லாம் நோக்கினார். "இவ்விளைவு எல்லாம் எப்படி நிகழ்ந்தது" என்று மனைவியாரைக் கேட்டார். "திருநீலகண்டன் திருவருள்" என்றார் அத்திருவனையார். "எம்பெருமான் என்னை ஆட்கொள்ளும் கருணைத்திறம் இருந்தவாறென்னே" என்று தொழுது நின்றார் கலய நாயனார். கணவனார்க்கும் அடியவர்க்கும் அம்மையார் அமுதுபடைத்தனர். இறையருளால் பெற்ற செல்வத்தால் அடியார்க்கு அமுதளித்து வாழ்ந்து வந்தனர்.

இங்ஙனமிருக்க, திருப்பனந்தாளில் இறைவன் திருமேனி சாய்ந்திருப்பதை நேர் செய்து வணங்க வேண்டுமென்று விழைந்தான் சோழமன்னன். யானை சேனைகளையும் பூட்டித் திருமேனியை நிமிரச் செய்யப் பார்த்தான்; முடியவில்லை. அரசன் கவலையுற்றான். இதனையறிந்த கலயனார் திருக்கடவூரினின்றும் புறப்பட்டுத் திருப்பனந்தாள் சேர்ந்தார். யானை சேனைகள் இளைத்து வீழ்ந்து எழமாட்டாத நிலையையும் கண்டார். இறைவன் திருமேனியுடன் தம் கழுத்தில் கயிறு பூட்டி இழுத்து வருந்தினார். இறைவன் இனியும் காலம் தாழ்க்க எண்ணுவரோ! அடியார் அன்பின் ஒருமைப்பாடு கண்டு நேரே நிமிர்ந்தார் அண்ணலார். விண்ணிலுறைவானவர், மண்ணில் வாழ்மாந்தர் யாவரும் இது கண்டு மகிழ்ந்தனர். கலயனாரை வணங்கினன் சோழ மன்னன். பின்னர் இறைவனுக்குப் பல பணிகள் செய்து தன் நகரத்துக்குத் திரும்பினான். கலயனாரும் அங்கு சிலகாலம் தங்கித் திருக்கடவூர் மீண்டனர்.

சிலநாட்கள் கழிந்த பிறகு திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் திருக்கடவூருக்கு எழுந்தருளினர். மாறிலா மகிழ்ச்சி பொங்க எதிர்கொண்டு வணங்கி அவ்விருவரையும் கலயனார் தமது மனைக்கு அழைத்தேகினார். அவர்களுக்கு அறுசுவை இன்னமுதளித்தார். அவர்கள் அருளுடன் இறைவன் திருவருளையும் பெற்றார். அரனுக்கும் அடியவர்க்கும் ஏற்றத் திருத்தொண்டு செய்து வாழ்ந்திருந்து கலயனார் சிவபத நிழல் சேர்ந்தார்.

சேக்கிழார் பெருமான் பெரிய புராணத்தில் இலைமலிந்த சருக்கத்தின் நான்காவதாக கலயனார் வரலாற்றை முப்பத்தைந்து பாடல்களில் கூறியுள்ளார். நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டர் திருவந்தாதியில் "காலனை முன்காய்ந்திட்ட...தென்கடவூர்" என்று கூறியிருப்பதை, சேக்கிழாரடிகள் முதற்பாட்டிலேயே "கூற்றைக் காய்ந்த சேவடியார் நீடியிருப்பது கடவூர்" என்று முன்னோர் மொழி பொருளைப் பொன்னேபோல் போற்றிக் கையாண்டிருக்கிறார். கலயர் என்பது திருக்கடவூர் இறைவன் பெயர். கலயர் என்பது கலயம் என்பதனடியாகப் பிறந்தது. கலயம், கலசம், குடம் என்பன ஒரு பொருளன. அமிர்தகலசமே இறைவன் திருமேனி. அதனால் அமிர்தகடேசுவரர் என்ற பெயர் ஏற்பட்டது. குங்கிலியத்தூபம் இடும் தொண்டு செய்தமையால் குங்கிலியக்கலயர் என்று இந்நாயனாருக்குப் பெயர் உண்டாயிற்று. அப்பர், சம்பந்தர் இவருடைய இல்லத்துக்கு எழுந்தருளியதாகக் கூறப்படுகின்றமையின் குங்கிலியக்கலய நாயனார் அவர்கள் காலத்தவர் என்று தெரிகிறது.

சீலமலி திருக்கடவூர்க்
கலயனாராம் திகழ்மறையோர்
பணிவறுமை சிதையா
முன்னே
தாலியை நெற்கொள வென்று
வாங்கிக் கொண்டு
சங்கையில் குங்கிலியத்தால்
சார்ந்த செல்வர்
ஞாலநிகழ் திருப்பனந்தா ளுதர்
நேரே நரபதியும்
தொழக் கச்சா
னயந்து போதப்
பாலமுத முண்டாரு
மரசுப்மெய்திப் பரிந்தமுது
செயவருள் சேர்
பான்மை யாரே

—உமாபதிசிவாசாரியார்.

மணவில் கூத்தன் திருப்பணிகள்

[திரு. கே. எம். வேங்கடராமையா, M.A., B.O.L., திருப்பனந்தாள்]

ஊரும் பேரும்

மணவில் கூத்தன் என்பான் தொண்டை மண்டலத்து மணவில் என்னும் ஊரினன்; 'மட்டார் பொழில் மணவில் வாழ் கூத்தன்' என்பது சாசனப் பாடல். இவன் வேளாண் குடியிற் பிறந்தவன். இவற்கு அருளாகரன், அரும்பாக்கிழான், நரலோக வீரன், காலிங் கர்கோன், பொன்னம்பலக்கூத்தன் என்ற பெயர்களும் வழங்கலாயின. இவனுக்கு மானவதாரன் என்ற விருதுப் பெயரும் இருந்ததென சித்தலிங்கமடம் என்ற ஊரில் கிடைத்த கல்லெழுத்தால் அறியப்பெறு கிறது. (No. *367* of *1909*).

அலுவலும் வெற்றிகளும்

இவன் முதல் குலோத்துங்கன் காலத்து (*1070—1120*) படைத்தலைவனாய் இருந் தவன்; குலோத்துங்கன் வேணாடு, மலைநாடு, பாண்டி நாடு, வடநாடு முதலிய இடங்களில் பல போர்கள் நடத்தியபொழுது, இம்மணவில் கூத்தன் படைத்தலைமை பூண்டு வெற்றி பெற் றுத் தன் புகழையும் தன் அரசன் புகழையும் நிலை நிறுத்தினான். இவன் வெற்றிகளைக் கூறும் சாசனப் பகுதிகள் பின்வருமாறு:—

1. தென்னாடன் சாவேற்றின் திண்செருக்கை
அன்றமைத்தான் தொண்டையர்கோ னுங்கு.

2. .... போரில்
கொலைநாடு வெஞ்சினவேல் கூத்தன் குறுகார்
மலைநாடு கொண்டபிரான் வந்து.

3. தென்னர், குடமலை நாடறிந்து கொண்ட
வேற்கூத்தன்

4. .... கொல்லம்
அழிவுகண்டான் சேரன் அளப்பரிய ஆற்றற்
கிழிவுகண்டான் தொண்டையர்கோன் ஏறு.

5. ...... தென்னர்
மலைமன்னர் ஏனை வடமன்னர் மற்றக்
குலமன்னர் செல்வமெலாம் கொண்டு.

முதற்குலோத்துங்க சோழனுக்குப் பிறகு சோழப் பேரரசனாகத் திகழ்ந்தவன் விக்கிரம சோழன். இவ்விக்கிரம சோழனுடைய ஆட்சி யின் முற்பகுதியினும் மணவிற்கூத்தன் நிலவி யிருந்தான்.

விக்கிரசோழனுலா

விக்கிரம சோழனது அவைக்களப் புலவ ராய் வீற்றிருந்தவர் ஒட்டக்கூத்தர். இவ்வொட் டக்கூத்தர் விக்கிரமசோழனுலா என்னும் நூலொன்று விக்கிரமசோழன் பேரில் இயற்றி யுள்ளார். இவ்வுலாவில் இம்மணவிற் கூத்த னை காலிங்கர் கோனின் வெற்றிகள் பற்றிப் பின்வருமாறு காணப்பெறுகிறது:—

...... வேங்கையினும்
கூடார் விழிஞத்தும் கொல்லத்தும்
கொங்கத்தும்
ஓடா விரட்டத்தும் ஒட்டத்தும்—நாடா
தடியெடுத்து வெவ்வே றரசிரிய வீரக்
கொடியெடுத்த காலிங்கர் கோன்...

(வேங்கை - வேங்கிநாடு: கூடார் - பகை வர்; இரட்டம் - இரட்ட பாடி; ஒட்டம்-ஒட்ர தேசம்)

சிவபக்தி

இத்தகைய பெருவீரனாகிய மணவிற் கூத்தன் பெருஞ்சிவ பக்தனாகத் திகழ்ந்தான். இவன் தில்லையிலும் திருவதிகையிலும் செய்த சிவப்பணிகள் அளப்பில. அவற்றைத் தில்லை யம்பதியில் கல்லெழுத்தாக அமைந்துள்ள 36 வெண்பாக்களாலும், திருவதிகை வீரட்டா னத்தில் சிலாசாசனம் செய்யப் பெற்றுள்ள இருபத்தைந்து வெண்பாக்களாலும் அறிய லாம்.

இவனைப்பற்றித் தில்லையில் காணும் பாடற் கல்லெழுத்துக்கள் தென்னிந்திய சாசனங்கள் நான்காவது வால்யுமில் 225-ம்

எண்கொண்ட கல்வெட்டாகப் பதிப்பிக்கப் பெற்றுள்ளன (A. R. No. 120 of 1888); பெருந்தொகை என்ற நூலில் 1059—1094 எண்கொண்ட பாடல்களாக அச்சிடப்பெற் றுள்ளன. திருவதிகை வீரட்டானத்தில் நட ராசப் பெருமான் சன்னிதியிலுள்ள இரண்டு தூண்களில் இவனைப்பற்றிய 25 வெண்பாக் கள் 1921-ம் ஆண்டுக்குரிய 369-ம் எண் கொண்ட கல்வெட்டாகப் படியெடுக்கப் பெற் றுள்ளன; பெருந்தொகை என்ற நூலிலும் 1095—1119 எண்கொண்ட பாடல்களாக அச்சிடப் பெற்றுள்ளன.

தில்லைத் திருப்பணிகள்

இவன் பகைவேந்தரை வென்றுகொணர் ந்த செல்வமெலாம் கொண்டு தில்லைச்சிற்றம்ப லத்துத் திருக்கொடுங்கைக்குப் பொன் வேய்ந் தான்; பொன்னம்பலத்தையும் பொன் வேய்ந் தான்; பேரம்பலத்துக்குச் செம்பு வேய்ந் தான்; செம்பொற் காளம் செய்து கொடுத் தான்; "ஆடும் தனித் தேனுக்கு அம்பலத்தே கர்ப்பூரம்-நீடும் திருவிளக்கு நீடமைத்தான்" பொன்னம்பலம் சூழப் பொன்னின் திரு விளக்குகளை அமைத்தான்; "ஆடும் தெளி தேனை ஆயிர நாழி நெய்யால் ஆடும்படி கண் டான்."

"மல்லல் குலவரையா நூற்றுக்கால் மண் டபத்தைத் தில்லைப்பிரானுக்குச் செய்தமைத் தவன்" இவனே. இந்நூற்றுக்கால் மண்டபத் தில் 12 தூண்களில் விக்கிரமசோழன் திருமண் டபம் என்ற பெயர் காணப்படுவதனால், இத் தலைவனால் (மணவில் கூத்தனால்) விக்கிரம சோழன் ஆணையின்படி இத்திருப்பணி நடை பெற்றதாதல் வேண்டும்* என்று அறிஞர் கருதுகின்றனர்.

"தில்லைப் பெரிய திருச்சுற்று மாளிகையை எல்லைக்குலவரை போல்" அமைத்தான்; புட் கரணிக்குக் கல்படிக்கட்டுகள் அமைக்கச் செய்தான்; "வீதிசூழ் நல்விளக்கும் வீற் றிருக்க மண்டபமும்" செய்வித்தான்;

திருநந்தவனத்தை ஏற்படுத்தினான்; நூறாயிரம் கமுகு மரங்களை வைத்தான்; ஓரா யிரம் கறவைப் பசுக்களைக் கொடுத்தான்; குழந்தைகளுக்குப் பாலும் எண்ணெயும் நாடோ றும் கொடுக்கச் செய்தான்; தில்லைப் பேரேரிக் குக் கல்லினால் மதகு ஒன்று அமைத்தான்.

மாசி மாதத்தில் (மக விழாவில்) இறைவ னைக் கடலில் நீராட்டுவித்து வீற்றிருக்கச் செய்ய ஒரு மண்டபத்தைக் கட்டினான்; நீராடச் செல்லுவதற்கு ஒரு பெருவழியொன் றும் அமைத்தான். அம்மண்டபம் இற்றை நாளில் சிதம்பரத்துக்கு அருகில் கிள்ளை என் னும் ஊரில் இருக்கிறது என்று ஆராய்ச்சி யாளர் கூறுவர்.*

தில்லையில் சிவகாமக்கோட்டத்தை யமைத் தவன் இவனே; காமக்கோட்டத்தின் திருச் சுற்றினையும் இவன் கட்டுவித்தான்: இச் செய்திகளைக் கூறும் பாடல்கள் படித்து இன் புறத்தக்கன :—

நடங்கவின்கொள் அம்பலத்து
நாயகச்செந் தேனின்
இடங்கவின்கொள் பச்சையிளந்
தேனுக்கு—அடங்கார்
பருமா ளிகைமேல்
பகுடுகைத்த கூத்தன்
திருமா ளிகையமைத்தான்
சென்று.

எவ்வுலகும் எவ்வுயிரும் ஈன்றும் எழிலழியாச்
செல்வியாள் கோயில் திருச்சுற்றைப்-பவ்வஞ்சூழ்
எல்லைவட்டம் தன்கோற் கியலவிட்ட
[வாட்கூத்தன்
தில்லைவட்டத் தேயமைத்தான் சென்று.

தேவாரம் ஓதுவதற்கும், இருந்து அன்பர் கள் செவிமடுத்து இன்புறுவதற்குமாக ஒரு மண்டபத்தைக் கட்டினான்.

"நட்டப் பெருமானூர் ஞானங் குழைத்தளித்த
சிட்டப் பெருமான் திருப்பதியம்-முட்டாமைக்
கேட்போர்க்கு மண்டபத்தைச் செய்தான்"

என்ற பாடற் பகுதி இதனை வலியுறுத்தும்.

"அன்றியும் சம்பந்தர் கோயிலுக்கு இவன் பொன் வேய்ந்தான் என்று ஒரு பாடல் கூறுகிறது. "தென்வேந்தன் கூனிமிர்த்த செந்தமிழர் தென்கோயில் - பொன் மேய்ந்து

---

* திரு. பண்டாரத்தார் - சோழர் வரலாறு - பகுதி II பக்கம் 77.

* பிற்காலச் சோழர் சரித்திரம் பகுதி II பண்டாரத்தார் - பக்கம் 78.

திக்கைப் புகழ் வேய்ந்தான்''—இதனுள் 'தென்வேந்தன்' என்றது கூன்பாண்டியனை; 'கூன்நிமிர்த்த செந்தமிழர்' என்றது ஞான சம்பந்தரை.

இனி, இம்மணவிற் கூத்தன் திருமுறைகளைச் செப்பேடு செய்வித்தான் என்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

முத்திறத்தார் ஈசன் முதல்
திறத்தைப் பாடியவாறு
ஒத்தமைத்த செப்பேட்டி
னுள்ளெழுதி—இத்தலத்தின்
எல்லைக் கிரிவாய்
இசையெழுதி னுன்கூத்தன்
தில்லைச் சிற்றம்பலத்தே
சென்று.

இதில்''பாடியவாறு''என்ற சொற்றொடர் கவனிக்கற்பாலது. சம்பந்தர் அப்பர்சுந்தரர் ஆகியவர்கள் பதிகங்களை எம்முறையில் பாடியருளினர்களோ அம்முறையிலேயே அப்பதிகங்களை மணவிற் கூத்தனது முயற்சியால் எழுதப்பட்டன என்று இச்சொற்றொடரால் அறியலாகும். எத்தலத்துக்குப் பின் எத்தலத்திற்குச் சமயகுரவர்சென்றனர்கள் என்றும், அங்குப் பாடிய பதிகங்கள் எவை என்றும், ஆய்ந்து, திருவருட்டுணைகொண்டு, பெரிய புராணத்தை எழுதியவர் சேக்கிழார் என்பது யாவரும் அறிந்ததொன்று. சேக்கிழார் காலத்துக்கு முன்பே பதிகங்கள் பாடிய வரிசைமுறை கொண்ட செப்பேடுகள் இருந்தன என்பது இப்பாடலால் உறுதிபெறுமாயின், சேக்கிழார் சுவாமிகளுக்கு இச்செப்பேடுகளும் பயன்பட்டிருத்தல் கூடும் என்று கூறலாம். ''ஒத்தமைத்த'' என்ற சொற்றொடரும் கவனிக்கத்தக்கது. செப்பேடுகள் ஒவ்வொன்றும் ஒரே அளவினதாக இருந்திருத்தல் வேண்டும்; ஒவ்வொரு செப்பேட்டில் ஒவ்வொரு பதிகம்மட்டும் எழுதப்பட்டது போலும்—என்று இதனுல் கூர்ந்து அறியலாம்.

திருவதிகைத் திருப்பணிகள்

தில்லையில் பல திருப்பணிகளைச் செய்தவனுகிய மணவிற்கூத்தன் திருவதிகையில் செய்த திருப்பணிகளும் பல. ''பொன்மகர தோரணமும் பூணணியும் பட்டிகையும், தென்னதிகை நாயகர்க்குச் செய்தமைத்தான்;'' ''பொற் சதுக்கம், மேகடம்பம்* என்றிவற்றைச் சேர்ப்பித்தான்; மண்டபமும் மாளிகையும் எடுப்பித்தான்; நூற்றுக்கால்மண்டபத்தைக் கட்டினன்; திருக்கோயில் மடைப்பள்ளியையும் பெரிய திருச்சுற்றையும் கருங்கல்லால் கட்டுவித்தான்; பகைவேந்தரைவென்று கொணர்ந்த செம்பொன்னுல் பரிகலங்களைச் செய்தான்; வீரட்டர் கோயிலைச் செம்பொனுல் வேய்ந்தான்; ஆயிரம் நாழி நெய்யால் வீரட்டானேசுவரருக்கு அபிஷேகம் செய்வித்தான்; நல்ல திருநந்தாவனம் அமைத்தான்: ஐம்பதினுயிரம் கமுக மரங்களை வைத்து வளர்த்தான்; குராற்பசு ஐஞ்ஞூறு கொடுத்தான்; 10 பொன் விளக்குகளை அமைத்தான்; எண்ணில் வயல்விளைக்கும் பேரேரி ஒன்று அமைத்தான்; அருளாகரநல்லூர் என்று தன் பெயரால் ஒரு ஊரையும் ஆங்கொரு ஏரியையும் உண்டாக்கினன்.

காமக்கோட்டம் (அம்மையார் திருக்கோயிலைக்) கட்டுவித்துப் பெருவிபவம் கண்டான்; அம்மையார்க்கு நிறைய அணிகலன்களை அளித்தான் :—

மாசயிலத் தம்மைக்கு வாழதிகை வீரட்டத்
தீசனிடமருங்கி லேந்திழைக்கு—மாசில்
முடிமுதலா முற்றணிகள் சாத்தினன் வேளாண்
குடிமுதலான் தொண்டையர் கோன்.

நடராசப் பெருமான் எழுந்தருளத் திருக்கோயிலைக் கட்டச் செய்தான்; ''நீடும் அதிகையான் நித்தல் பெருங்கூத்தை, ஆடும் அரங்கமைத்தான்.......தொண்டையா ரேறு'' என்றமை காண்க.

இனித் திருவதிகைதான் திருநாவுக்கரசர் சூலை நீங்கித் திருநாவுக்கரசு என்னும் நாமத்தை மன்னிய தலமாகும். இத்தலத்தில் திருநாவுக்கரசருக்குத் திருக்கோயில் கட்டப்பெற்றது.

''ஈசன் அதிகையில்வா கீசன் எழுந்தருள
மாசில் பெருங்கோயில் வந்தமைத்தான்''

என்பது திருவதிகைச் சாசனக் கவியாகும்.

உமாதேவியார் காஞ்சிபுரத்தில் எண்ணுன்கு பேரறங்களையும் செய்தருள்கிறுர் என்பது சைவரறிந்த உண்மை. இதனைச்

---

* மேற்கட்டி

சேக்கிழார் சுவாமிகள்

"நண்ணும் மன்னுயிர் யாவையும் பல்க
நாடு காதலின் நீடிய வாழ்க்கைப்
புண்ணியத்திருக் காமக்கோட் டத்துப்
பொலிய முப்பதோ டிரண்டறம்புரக்கும்"

என்று குறிப்பிடுவர். இங்ஙனம் உமையம்மையார் முப்பத்திரண்டறமும் திருவதிகையில் கண்கூடாகச் செய்தல் வேண்டும் என்று நரலோக வீரன் கருதினன்; அங்ஙனமே முப்பத்திரண்டறங்களும் நாடோறும் நடைபெறச் செய்தான். இதனைக் கீழ்க்கண்ட செய்யுள் விளக்கும் :—

அண்ணல் அதிகையரன் ஆகம் பிரியாத
பெண்ணினல்லாள் எண்ணுன்கு
பேரறமும்—எண்ணிஅவை
நாளுள் செலவமைத்தான்...

இதில் "நாளுள்" என்பது நாடோறும் என்று பொருள்படும்.

நற்பண்புகள்

இதுகாறும் கண்டவற்றான் இவனது சிவபக்திச் சிறப்புத் தெற்றென விளங்கும். இவனைப்பற்றிய பாடல்களினின்று இவன் ஒரு பெரு வீரன் என்றும், பெருங் கொடையாளி என்றும், தன் அரசனுடைய புகழை மிகுவித்தவன் என்றும் அறிகிறோம். "தொல்லை மறை வளர்க்க வெங்கலியை மாற்றி, வழுவாமல் அறம் வளர்த்தவன்" இவன். "பொன் மழையோடொக்கத் தருங்கொடையான்" ஆகவும் இவன் திகழ்ந்தான். இவன் சமய குரவரிடத்தில் கொண்ட பக்தி, தில்லையில் திருஞானசம்பந்தர் கோயிலுக்குப் பொன் வேய்ந்தமையாலும், திருவதிகையில் திருநாவுக்கரசருக்குக் கோயிலமைத்தமையாலும் அறியப் பெறுகின்றது. இவன் சைவ சமயத்துக்கு ஆற்றியுள்ள சிறந்த பணி மூவர் தேவாரங்களையும் செப்பேடு செய்வித்தமையேயாகும்,

மாவட்டத்தில் பிறநலப்பணிகள்

செங்கற்பட்டு ஜில்லாவில் உள்ள திருப்பாசூர்க்கோயில் சிவப்பிராமணரும், ஜயதரபுரத்து நகரத்தாரும் முறையே நான்கும் ஆறும் விளக்குகளை எரிக்க இம்மணவிற் கூத்தனிடம் இருந்து பொன் பெற்றார்கள் என்று ஒரு கல்வெட்டு (129 of 1930) கூறுகிறது.

திருச்செந்தூர்த் தாலுகா ஆத்தூரில் கிடைத்த கல்லெழுத்தொன்று (405 of 1930* மகரதோரணம் ஒன்று இறைவனுக்கு இம் மணவிற்கூத்தன் அளித்தான் என்றும், இரண்டுவிளக்குகள் எரிக்கப் பொன் கொடுத்தான் என்றும் அறிவிக்கின்றது.

[இதில் அரசன் பெயர் ஜயதரன் என்றும், மந்திரியின் பெயர் மானவதாரன் என்றும் குறிக்கப் பெற்றுள்ளது. ஜயதரன் என்பது முதற்குலோத்துங்கனையும், மானவதாரன் என்பது மணவிற் கூத்தனையும் குறிக்கும்.]

நரலோகவீரன் மண்டபம்

திருப்புகலூர்த் திருக்கோயிலில் உள்ள மண்டபங்களுள் ஒன்றிற்கு **நரலோகவீரன் மண்டபம்** என்று பெயரிருந்ததென்று ஒரு கல்வெட்டு (97 of 1927—28) அறிவிக்கிறது. அம்மண்டபத்தில் ஊர்ச்சபை கூடிற்று. எனவே இப்பெருவீரர் பெயரால் ஒரு மண்டபம் விக்கிரம சோழனது ஆட்சியின் தொடக்கத்திலேயே கட்டப்பெற்றது என அறியலாம்.

நரலோகவீரநல்லூர்

திருநெல்வேலி மாவட்டத்தில் மருவாய்க்குரிச்சி என்ற ஊர் **நரலோகவீரநல்லூர்** என்ற பெயரால் அழைக்கப்பெற்றது என்று நாங்குனேரியிலுள்ள சுந்தரபாண்டியனுடைய "கல்லெழுத்து (265 of 1927—28) கூறுகின்றது. நரலோக வீரன் தென்னாட்டுக்குப் படையெடுத்து, வென்றபொழுது அவ்வூர்க்குத் தன் பெயரமைத்தனன் என்று அறியலாம்.

இவன் மகன்

சூரைநாயகன் மாதவராயன் என்பவன் இம் மணவிற் கூத்தனுக்கு மகன் என்று தெரிய வருகிறது. திருப்பாசூரிலுள்ள கல்வெட்டொன்று (128 of 1930) இம்மாதவராயன் செய்த சிவத்தொண்டினைக் குறிப்பிடுகின்றது. இவன் திருப்பாசூர்க் கோயிலுக்குப் பல அணிகலன்களை அளித்தனன்; அவற்றுள் ஒன்று பொன்னால் செய்த மகரதோரணமா

* A.R. for 1930; Page 79; Para 21.

கும்; அதன் முடியில் இரத்தினம் பதித்த குடை கவிக்கப்பட்டிருந்தது; அன்றியும் பொன்னாலாகிய முப்புரிநூலும், பலநூறு மணியும், இரத்தினங்களும் பதித்த பொற்ற கடும் மாதவராயன் அளித்தான்;* சில பசுக்களை அளித்து நான்கு விளக்குகளை எரியச்செய்தான். இவன் விக்கிரம சோழனது ஆட்சியில் இருந்தவன். இவனும் இவன் தந்தையைப் போல் சிவபக்தியில் சிறந்து விளங்கியவன் என்பது அறியத்தகும்.

முடிப்புரை

முதற்குலோத்துங்கனும், விக்கிரம சோழனும் பல சிவப்பணிகளை ஆற்றியுள்ளனர். விக்கிரமசோழனது தில்லைத்திருப்பணிகளைத் திருமழபாடிச் சாசனம்† விளக்கமாகக் கூறுகிறது. மன்னன் எவ்வழியோ அவ்வழியில் மன்னுயிர் மன்னும் ஆகையால் பேரரசர் போலவே அவர்களது உயர்தர அலுவலர்களும் சிவபக்தியிற் சிறந்து விளங்கினர்; சிவப்பணிகள் ஒல்லும்வாயெல்லாம் செய்தார்கள். இற்றை ஞான்று சைவர்கள் ஆகிய நாம் புதிய பணிகளைச் செய்ய வேண்டியதில்லை; முன்னோர் செய்த சிவப்பணிகளை அழிவுறாவண்ணம் காத்தலும், பழுதுற்றவற்றைப் புதுக்குதலும் நாம் செய்ய வேண்டுவனவாம். இந்த நெறியில் நின்று தில்லைத்திருமதில் போன்றவற்றைப் புதுக்கும் முயற்சியில் ஒவ்வொருவரும் உதவினால் நரலோகவீரன் போன்றவர்களை நினைவு கூர்ந்து போற்றியவராவோம்.

*A. R. for 1930; Page 79; Para 22
† S. I. I. Vol. III Part II No. 79.

செய்திகள்

சென்னை: சென்னகேசவப் பெருமாள் வசந்த உற்சவம் 22-5-60 முதல் 28-5-60 வரை நடைபெற்றது. சென்னை மல்லீசுவரர் வசந்த உற்சவம் 31-5-60 முதல் 9-6-60 வரை நடைபெற்றது.

திருமோகூர்: காளமேகப் பெருமாள் கோயிலில் பிரம்மோற்சவம் 29-5-60 முதல் 9-6-60 வரை நடைபெற்றது.

மன்னார்குடி: சொக்கநாத சுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 28-5-60 முதல் 8-6-60 வரை நடைபெற்றது. 30-5-60 முதல் சமயச் சொற்பொழிவுகளும் இன்னிசையும் நடைபெற்றன.

திருக்கண்டியூர்: திருவீரட்டேசுவர சுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 29-5-60 முதல் 8-6-60 வரை நடைபெற்றது.

எட்டிகுடி: சுப்பிரமணிய சுவாமி கோயிலில் தெப்ப உற்சவம் 8-6-60-ல் நடைபெற்றது இன்னிசை அரங்கும் நடைபெற்றது.

மதுரை: திருஞானசம்பந்த சுவாமிகளாதீனத்தில் திருஞானசம்பந்த சற்குருநாத தேசிக சுவாமிகளது குருபூசை மசோற்சவம் 6-6-60 முதல் 10-6-60 வரை நடைபெற்றது. சமயச் சொற்பொழிவுகளும் இன்னிசை அரங்குகளும் நடைபெற்றன.

பாம்பணி: நாகநாத சுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 28-5-60 முதல் 8-5-60 வரை நடைபெற்றது. இன்னிசை அரங்கும் நடைபெற்றது.

திருவாழ்கொளிபுத்தூர்: மாணிக்கவண்ண சுவாமி கோயிலில் வைசாக ஏகதின மகோற்சவம் 7-6-60-ல் நடைபெற்றது. சமயச் சொற்பொழிவும் இன்னிசை அரங்கும் நடைபெற்றன.

திருநீர்மலை

அன்றுயர் குலக்கொடியோடு அணி
மாமலர் மங்கையொடன்பளவி அவுணர்க்
கென்றுனு மிரக்கமிலா தவனுக்கு
உறையுமிடமாவது இரும்பொழில் சூழ்
நன்றுய புனல் நறையூர் திருவாலி குடந்தை
தடந்திகழ் கோவல்நகர்
நின்றுனிருந்தான் கிடந்தான்
[நடந்தாற்கிடம்
மாமலையாவது நீர்மலையே
—திருமங்கையாழ்வார்.

பயின்றது அரங்கம்
திருக்கோட்டி பன்னுள்
பயின்றதுவும் வேங்கடமே
பன்னுள்—பயின்றது
அணிதிகழும்சோலை
அணிநீர்மலையே
மணிதிகழும் வண்தடக்கைமால்
—பூதத்தாழ்வார்.

திருமால் அர்ச்சாமூர்த்தியாய் எழுந்தருளியுள்ள திருக்கோலத்தை நின்றதிருக்கோலம், இருந்த திருக்கோலம், கிடந்த திருக்கோலம் என்று மூன்று வகையாகக் கூறப்படும். ஆனல் திருநீர்மலை என்ற திவ்விய தேசத்தில் நின்று, இருந்து, நடந்து, கிடந்த என்ற நான்கு திருக்கோலங்களில் எம்பெருமானைச் சேவிக்கலாம். ஆதாரம் மேற்கண்ட மங்கை மன்னன் பாசுரமே. ஆழ்வார்களால் மங்களசாசனம் பெற்ற பதிகள் நூற்றெட்டில் தொண்டைநாட்டிலுள்ளவை இருபத்திரண்டு. அவைகளில் ஒன்று திருநீர்மலை என்பது. இது செங்கற்பட்டு மாவட்டத்தில் சைதாப்பேட்டைப் பகுதியில் இருக்கிறது. சென்னையிலிருந்து 15 கல் தொலைவிலும், பல்லாவரம் இருப்புப் பாதை நிலையத்திலிருந்து மேற்கில் மூன்று கல் தூரத்திலும் இருக்கிறது. தோதாத்திரி, தோயாத்திரி, தோதசைலம், தோயாசலம் என்ற பெயர்கள் வழங்கப்படுகின்றன.

ஊருக்குள் நுழைந்ததும் நமது கவனத்தை ஈர்ப்பது நீராழி மண்டபத்துடன் கூடிய பெரிய திருக்குளம். திருநீர்மலையில் இரண்டு கோயில்கள் உள்ளன. ஒன்று அடிவாரத்தில் திருக்குளத்துக்கும் மலைக்கும் இடையிலுள்ள நீர்வண்ணப் பெருமாள் கோயில். மற்றென்று மலைமேலுள்ள அரங்கநாதர் திருக்கோயில். அடிவாரக் கோயில் கிழக்கு நோக்கியுள்ளது. கோயிலின் கீழ்வாயிலில் கோபுரம் இருக்கிறது. கோயிலுக்குள் ஒரே பிரகாரம்தான். அரங்கநாதரின் உற்சவ மூர்த்தி இந்த கோயிலில்தான் தெற்கு நோக்கி எழுந்தருளியுள்ளார். நீர்வண்ணப் பெருமாள் சந்நிதிகிழக்குநோக்கியுள்ளது. எதிரில் ஆழ்வாராதியர்கள் சேவை சாதிக்கின்றனர். நீர்வண்ணப்பெருமாள் நின்ற திருக்கோலத்தில் காட்சி யளிக்கிறுர். அவருடைய வலப் பக்கம் அவரை வழிபட்ட வான்மீகி முனிவரின் உருவம் காணப்படுகிறது. கோபுர வாயிலுக்கு நேரேயுள்ளது சக்கரவர்த்தித் திருமகன் சந்நிதி. கோதண்ட ராமர், சீதை, இலக்குமணர் இவர்கள் எழுந்தருளியுள்ளனர். வலப்புறம் தாயார் சந்நிதி இருக்கிறது. பிரகாரத்தின் வடமேற்கு மூலையில் ஆண்டாளின் தனிச் சந்நிதி இருக்கிறது. அரங்கநாதர் உற்சவ மூர்த்தியைத் தவிர, அடிவாரக் கோயிலிலுள்ள எல்லா சந்நிதிகளும் கிழக்கு நோக்கியே இருக்கின்றன. எம்பெருமான் திருநாமம் நீர்வண்ணப்பெருமாள் என்பது; தாயாரின் திருப்பெயர் அணிமாமலர் மங்கை என்பது. திருமங்கை மன்னனின் முதல் பாசுரத்தில் இப்பெயரைக் குறிக்கிறுர். கீழேயுள்ள திருக்குளம் க்ஷீரபுஷ்கரிணி என்ற தீர்த்தம்.

அடிவாரக் கோயிலுக்குக் கிழக்கே திருநீர்மலைமேல் செல்லபடிக் கட்டுகள் தொடங்குகின்றன. சுமார் 200 படிக் கட்டுகள் ஏறிச் சென்றுல் மலைமேல் அரங்கநாதப்பெருமாள் கோயிலை அடையலாம். மேலே தென்புறம் ஒரு கோபுரம் இருக்கிறது. திறந்த வெளிச் சுற்றும் இருக்கிறது. கோயிலுக்குள் ஒரு பிரகாரம்தான் உண்டு. எம்பெருமான் தெற்கே திருமுகமண்டலமாக சயனத் திருக்கோலத்தில் காட்சி யளிக்கிறுர். நான்கு திருக்கரங்

களுடன் சங்கு சக்கரதாரியாய்க் காணப்படுவது தனிச் சிறப்புடையது. திருவடி பக்கத்தில் உபயநாச்சியார்கள் வீற்றிருந்தருளுகின்றனர். கர்ப்பக்கிரகத்துள் இருபுறமும் எம்பெருமானை வழிபட்ட பிருகு, மார்க்கண்டர் இவர்களின் உருவங்கள் காணப்படுகின்றன. அரங்கநாதர் சந்நிதியின் முன்புறம் கிழக்கு நோக்கித் தாயார் சந்நிதியிருக்கிறது; திருநாமம் அரங்கநாயகி. இறைவன் சயனம் மாணிக்க சயனம் என்பர். மேலே தோயகிரி விமானம்.

அரங்கநாதர் சந்நிதியின் பின்புறம் பிரகாரத்தில் திரிவிக்கிரமப் பெருமாள் சந்நிதியும், நரசிங்கப்பெருமாள் சந்நிதியும் கிழக்கு நோக்கியுள்ளன. திரிவிக்கிரமப் பெருமாளே நடந்த திருக்கோலம் என்பர். நரசிங்கர் இருந்த திருக்கோலத்தில் சேவை சாதிக்கிறார். இவருக்கு அழகிய சிங்கர், சாந்தநரசிங்கர் என்ற திருநாமங்கள் உண்டு.

இங்குள்ள இரண்டு கோயில்களிலும் இரண்டு காலபூசை நடைபெறுகிறது. சித்திரையில் அரங்கநாதர் திருவிழா, வைகாசி வசந்தோற்சவம், ஆனியில் ஈடுஉற்சவம், புரட்டாசியில் நவராத்திரி, கார்த்திகையில் வனமகோற்சவம், மார்கழியில் அத்தியயன உற்சவம், தையில் படிஉற்சவம், பங்குனியில் நீர்வண்ணப்பெருமாள் உற்சவம் முதலிய திருவிழாக்கள் நடைபெறுகின்றன. மலையைச் சுற்றிவரும் வீதி பெரிய வீதியென்றும், திருக்குளத்தைச் சுற்றியுள்ளது மாடவீதி யென்றும் சொல்லப்படுகிறது. இவ்விருவீதிகளிலுமே பெருமாள் வீதியுலா வருவார்.

இந்த திவ்விய தேசத்து எம்பெருமானை **திருமங்கையாழ்வார்** பத்துப் பாசுரங்களையுடைய ஒரு பதிகத்தால் பாடியருளி யிருக்கின்றார். முதல் பாடலில் 'நின்றான், இருந்தான், கிடந்தான், நடந்தான்' என்ற நான்கு திருக்கோலங்களைக் குறிப்பிட்டிருக்கிறார். இரண்டாவது திருப்பாசுரத்தில் "அரியாய் நீண்டான் குறளாகி நிமிர்ந்தவனுக்கிடம் மாமலையாவது நீர்மலையே" என்று திரிவிக்கிரமர், நரசிங்கர் இவர்களைப்பற்றிக் கூறியிருக்கிறார். "அணி மாமலர்துாய்நச்சிநமனர் அடையாமை நமக்கு அருள் செய்யென உள் குழைந்து ஆர்வமொடு நிச்சம் நினைவார்க்கருள் செய்யும் அவர்க்கிடம் மாமலையாவது நீர்மலையே" என்று அழகாக உரைக்கிறார். திருமங்கை மன்னன் இன்னும் ஒன்பது வேறு பாசுரங்களிலும் இத்திருப்பதியைப் பற்றிச் சொல்லி யிருக்கிறார். பூதத்தாழ்வார் ஒரு பாசுரம் அருளியுள்ளதைத் தலைப்பில் காணலாம். பிள்ளைப்பெருமாளையங்கார் தமது நூற்றெட்டுத் திருப்பதியந்தாதியில் பின்வரும் பாடலில் போற்றி யிருக்கிறார் :—

இரங்கும் உயிர் அனைத்தும்
இன் அருளால் காப்பான்
அரங்கன் ஒருவனுமே
ஆதல் கரங்களால்
போர் மலைவான் வந்த
புகழ்வாணன் காட்டினன்
நீர்மலை வாழ்
எந்தை எதிர்நின்று.

இன்னும் வடமொழியில் **திருநீர்மலை க்ஷேத்ர மாஹாத்ம்யம்** என்ற நூலும் உண்டு. இதைத் தமிழ் உரையுடன் 1948-ஆம் ஆண்டில் அச்சிட்டு வெளியிட்டிருக்கின்றனர். அது பிரம்மாண்ட புராணத்தில் உத்தர பாகத்திலுள்ளதாகக் கூறப்பட்டிருக்கிறது. பத்து அத்தியாயங்கள் கொண்ட அந்த நூலில் மூர்த்திகளின் மகிமை, தீர்த்தங்களின் பெருமை, பிருகு, மார்க்கண்டேயர், வான்மீகர், முதலிய முனிவர்கள் வழிபட்டுப் பேறு பெற்ற தன்மையை முதலியன விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது, அரங்கநாதனின் தீர்த்தம் க்ஷீரபுஷ்கரிணியென்றும், நரசிம்மனுடைய தீர்த்தம் காருண்யபத்மினி யென்றும், திரிவிக்கிரமனது தீர்த்தம் ஸித்தபுஷ்கரிணி யென்றும், நீர்வண்ணனின் தீர்த்தம் சுவர்ண பத்மினி யென்றும் அந்த மகாத்மியம் கூறுகிறது.

திருமங்கைமன்னன் இங்கெழுந்தருளிய போது ஊர் நீரில் மூழ்கி யிருந்ததாகவும் பக்கத்திலுள்ள மண்டபமலை யென்ற குன்றின்மேல் ஆறுமாதம் காத்திருந்து நீர்வற்றிய பின் எம்பெருமானைச் சேவித்துச் சென்றார் என்ற செய்தியொன்று கூறப்படுகிறது. மலையையும் ஊரையும் சுற்றிப் பள்ளத்தாக்காகவே இருப்பதால் மழையினால் ஏற்பட்ட வெள்ளம் ஊரைச்சூழ்ந்திருக்கலாம். நீர் சூழ்ந்த மலையானபடியால் நீர்மலையென்ற பெயரும் ஏற்பட்டிருக்கலாம் போலும்.

மகப்பேறில்லாதவர்கள் இத்தலத்தெம் பெருமானை வழிபடும் வழக்கம் இருக்கிறது. மகப்பேறடைந்ததும் அவர்கள் சிறு தொட்டில்கள் செய்துகொண்டு வந்து சந்நிதியில் தொங்க விடுகின்றார்கள். திருக்குளத்தில் நீராழி மண்டபத்தைச் சுற்றி ஒரு உட்குளம் இருக்கிறது. நீர்வற்றிய காலத்தில் அதில் இருக்கும் தண்ணீர் பால் போல் இருக்கிறது. அதனைப் பயன்படுத்தினால் உடல்நலத்துக்கு மிகவும் உகந்ததென்று கூறுகின்றனர்.

இவ்விடத்துள்ள இரண்டு கோயில்களிலுமிருந்து அரசாங்கத்தார் 34 கல்வெட்டுக்களைப் படியெடுத்திருக்கின்றனர். அவை கீழ்க் கோயிலில் கோதண்டராமர், நீர்வண்ணப் பெருமாள், கர்ப்பக்கிரகச்சுவர்களிலும் கோபுரவாயில், யாகசாலைச் சுவர்களிலும், மலைமேல் நரசிம்மர்கோயில் சுவரிலும் உள்ளன. ஜயங்கொண்ட சோழமண்டலத்துச் சூரத்தூர் நாட்டுப்புலியூர்க் கோட்டத்துத் திருநீர்மலையென்று அக்கல்வெட்டுக்களில் காணப்படுகின்றது. இறைவன் திருநாமத்தை, திருநீர்மலை எம்பெருமான், அழகியசிங்கர், நீர்வண்ணப் பெருமாள் என்று கூறுகின்றன. இராஜராஜ சோழன் III, குலோத்துங்கசோழன் III, விக்கிரமசோழன், குலசேகர பாண்டியன், சுந்தரபாண்டியன், விஜயகண்ட கோபாலன், விஜயநகர-வீரவெங்கடராயன் முதலிய மன்னர்களின் காலத்தவை அக்கல்லெழுத்துக்கள். கோயிலில் விளக்கெரிக்க நிலம், பொருள். பொன், பசுக்கள் இவைகள் கொடுத்தது; திருவாழி பரப்பினான் சந்தி என்ற வழிபாட்டிற்காக நிலம் வழங்கியது; நிலமும் அதன் வரிகளையும் கோயிலுக்கு அளித்தது; பம்மலில் உள்ள பம்மல் நக்க நாயனார் கோயில் திருவிழா, பூசை முதலியவற்றிற்குத் தானம் செய்தது; பள்ளிப்படை அகரம் என்ற ஊரிலுள்ள சிவன் கோயிலுக்கு நிலம்விட்டது; இவை போன்ற செய்திகளை அறிவிக்கின்றன. மலையம்பாக்கம், மாங்காடு, மதுரவாயில், கோவூர், பேரூர், புலிப்பாக்கம், நெல்மலி, நந்தனப்பாக்கம், பம்மல், வடக்குப்பட்டு, அணைக்கரைச்சேரி முதலிய ஊர்களின் பெயர்கள் காணப்படுகின்றன. பூந்தமல்லி என்று இப்போது வழங்கும் ஊரை பூவிருந்த மல்லி நகரம் என்று குறிக்கின்றன.

கார்வண்ணம் திருமேனி கண்ணும் வாயும்
கைத்தலமு மடியிணையும் கமலவண்ணம்
பார்வண்ண மடமங்கை பத்தர் பித்தர்
பனிமலர் மேல்பாவைக்குப் பாவம் செய்தேன்
ஏர்வண்ண வென்பேதை யென்சொல் கேளாள்
எம்பெருமான் திருவரங்க மெங்கே யென்னும்
நீர்வண்ணன் நீர்மலைக்கே போவேனென்னும்
இதுவன்றோ நிறைவழிந்தார் நிற்குமாறே.

—திருமங்கையாழ்வார்.

ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தானம், பழனி.

அறிவிப்பு

பழனி ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமிக்கு நாளது சார்வரி வருடம் ஆவணி மாதம் 14ஆந்தேதி (29—8—60) திங்கட்கிழமை அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் சிறந்த முறையில் நடைபெற ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. கும்பாபிஷேகத்தின்போது ஆகம விதிகளின்படி சிறந்த முறையில் விசேஷமாக 33 யாக குண்டங்கள் அமைத்து நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. நன்கொடை அளிக்க விரும்பும் அன்பர்கள் அனைவரும் 'நிர்வாக அதிகாரிக்கு' அனுப்பி அச்சு ரசீது பெற்று ஆண்டவரின் அருளைப் பெற்றுய்யுமாறு வேண்டுகிறேன்.

ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி கோயில்
பழனி, மதுரை மாவட்டம்

சி. எஸ். தீனதயாளு, பி. எஸ்ஸி., பி. எல்.,
நிர்வாக அதிகாரி.

நவதிருப்பதியனுபவம்

திரு. K. பட்சிராஜன், B.A., B.L.

இரண்டாம் பாட்டு

இப்படி உலகர் கண்முன்னே அவர்கள் வழிபடுகைக்கு ஈடாக சுத்த ஸாத்விகனை எம்பெருமான் அர்ச்சை வடிவிலே எழுந்தருளி யிருந்தும் மானிடர் ரஜோகுண தமோ குண வயத்தராய் எம்பெருமானைத் தெரிந்து கொள்ளாமல் மயங்குகின்றனர். அம்மயக்கிலே தங்கள் குணங்களுக்கு அநுகுணமான தேவதைகளைத் தேடுகிறுர்கள். அது மட்டு மல்ல அப்படித் தேடிப் பிடித்த தெய்வத்தையே பரம்பொருள் என்று பறைசாற்றவும் செய்கின்றனர். ஐயோ! அவர்கள் ஒன்றை மறந்துவிட்டார்கள். அப்படி அவர்கள் வேத ப்ரமாணம் காட்டத் தேடும் தெய்வங்களும் அந்நாராயணன் படைப்பே என்ற உண்மையை எளிதே மறந்து விடுகின்றனரே! என்று அங்கலாய்க்கிறுர் ஆழ்வார். அந்தத் தெய்வங்களின் புகழும் படைப்புள்ள அளவே ஆகும். நிலையானதன்று. இப்படி உள்ள ஒரு மயக்கத்தை இனியாகிலும் விட்டு உங்களையும் நீங்கள் தேடிக்கண்டு பிடிக்கின்ற தெய்வங்களையும் உலகோடு படைத்த அழிவில் கீர்த்தியையுடைய முதற்காரணப் பொருள் உய்விக்கத் திருக்குருகூரிலே விரும்பிக் கோயில் கொண்டிருக்கிறுன். இனியேனும் இவ்வுண்மையை உணர்ந்து அவன் புகழ்பாடி ஆடிப் பரவுமின் என்று போதிக்கின்றுர். "பல்லுலகீர்" என்பது ஆழ்வார் விளி உலகில் ரஜோகுண தமோகுணவயப்பட்டவரே பெரும்பான்மையோர் என்பது குறிப்பு.

மூன்ரும் பாட்டு

இப்படிப் பல்லுலகோர் தம் தம் குணங்களுக்கு அநுசரணையாகத் தேடிப்பிடித்த தெய்வங்கள் எத்தனையோ! பரந்த தெய்வமும் என்கிறுர் ஆழ்வார். அவர்களை நோக்கி "சரி நீங்கள் உங்களுக்குத் தேவையான தெய்வத்தைக் கண்டு பிடித்தீர்கள், ஆனல் அந்த தெய்வங்களின் செயல்களிலிருந்தாவது அவை பரதெய்வமல்ல என்பது தெரிய வேண்டாமா! உங்கள் தெய்வங்களே குருகூர் மேவிய ஆதிப் பிரானைத் தலைசாய்த்து வணங்குகின்றனவே வேதங்கள் அவ்வாதிப்பிரான் பிற தெய்வங்களால் வணங்கப்படுகிறுன் என்று கூறுகின்றனவே. அதுபோல் அவ்வாதிப்பிரானை ப்ரகாரியாக உடைய ஒரு தேவதை உண்டு என்று பிரமாணமுண்டாகில் என் முன்னே கூறுங்கள் என்று சவால் விடுகிறுர் ஆழ்வார்.

நான்காம் பாட்டு

ஜகத்காரணனை நாராயணன் தானே மும்மூர்த்திகளில் ஒரு மூர்த்தியாக நின்றது அவனேடு வைத்துப் பேசப்படுகின்ற பிரம்மா சிவன் இருவருக்கும் அவனே நாயகனுய் நின்றுன். இதில் ஐயத்துக்கு ஏதுவில்லை. "வையத்தார் வானத்தார் மழுவாளிக்கன்றளித்த ஐயத்தால் சிறிது ஐயம் தவிர்ந்தாரும் உளர்" என்று கம்பன் சாபம் தீர்ந்த விராதன் வாயிலாகக் கூறுகிறுனே அக்கதை நினைவில்லையா? பிரமன் தந்தையென்பதையும் மறந்து அவன் தலையை அறுத்தான் மகனை சிவன். அறுத்த தலையின் கபாலம் கையிலே ஒட்டிக் கொண்டது. அந்த சாபம் தீர அப்பிண்டியார் மண்டையேந்திப் பிறர்மனை திரிதந்துண்ண நேர்ந்தது. எங்கும் போய்க் கடைசியில் நான்முகற்கும் தாதையான நாராயணன் தன் அலங்கல் மார்பின் குருதியால் அக்கபாலத்தை நிறைத்து பின்கபாலம் கையை விட்டு நீங்கிற்று. "இதில் தலையறுத்தான் ஒருவன் தலையறுப்புண்டான் மற்றவன். அறுப்புண்ட தலை அறுத்தவன் கையிலே ஒட்டிக் கொள்ள அச்சாபத்தைப் போக்கினுன் மூன்றுமவன். இதில் பரத்துவம் யார்பாலது என்பது கூறியா தெரிய வேண்டும். நீங்களே கண்டு களியுங்கள் என்கிறுர் ஆழ்வார். அப்படி அவர்கள் இடரையும் நீக்கியவன் அழகிதாய் ஒளிவீசும் திருநகரியிலே உறைகின்றுன். "ஐயோ! தாங்கள் வணங்கும் தெய்வத்தின்

கொடிய சாபத்தை நீக்கியவன்பால் நன்றியை மறந்து அவனைப்பற்றிக் குறைவாகப் பேசி என்ன பயன் பெறுகிறார்களோ சிலர்?" என்று அவர்கள்பால் பரிகின்றார் ஆழ்வார். சான்றோர் கடனும் அதுதானே!

ஐந்தாம் பாட்டு

உண்மை இப்படியிருந்தும் அதனைத் தெளிந்து கொள்ளாததுமன்றி, அதனை மறுக்க காரணார்த்தமாக எழுந்த சில கிரந்தங்களை வைத்து, அவை ப்ரமாணங்கள் என்று கூறி வாதம் செய்பவர்களை நோக்கி இரங்குகிறார் ஆழ்வார். சூதபௌராணிகரிடத்திலே இலிங்கத்திக்கு ஏற்றம் கூறும் ஒரு புராணத்தைச் சொல்லவேணும் என்று கேட்டதன் பேரில் பிறந்தது இலிங்க புராணம்.

காரணார்த்தமாகப் பிறந்த கள்ளப்பொய் நூல் சாக்கியம். ப்ரமாணத்தோடு கூடிய தர்க்கமின்றி வெறும் வரட்டு வாதத்தை, அடிப்படையாகக் கொண்டது ஆர்ஹதம். இப்படி எழுந்த நூல்களைப் ப்ரமாணகக் கொண்டு பரத்வத்தைச் சாதிக்க இயலுமா? இப்படிச் சாதிக்க வலிந்து வாதம் செய்யும் உங்களையும், உங்கள் வாதங்களினால் சாதிக்கப்படும் தெய்வங்களையும் மறந்து நின்று இயக்குகின்ற ஒருவன் குருகூரிலே பொலிந்து நிற்கும் ஆதிப்பிரானே. நான் கூறுவது ஸத்யமே. பொய்யில்லை. என்னை நம்புங்கள். அவ்வாதிப்பிரானைப் போற்றுங்கள் என்று பிறமதத்தாரை அறிவுறுத்துகிறார்.

ஆறாம் பாட்டு

அப்படியாயின் உலகில் பல தெய்வம் இருப்பதாகத் தோற்றுவிப்பானேன்? அவனே தன்னையொழிய பிறதெய்வமும் உளபோல் காட்டுவானேன்? என்ற வினாவைத் தனக்குள்ளேயே எழுப்பிவிடை கூறுகிறார் ஆழ்வார்:—

தன் விளையாட்டிடமாக உலகை உண்டாக்கி அதில் நல்வினை தீவினைகளை உண்டாக்கி, பகுத்தறிவையும் ஆன்மாவிற்கு அளித்து இருக்கிறான் இறைவன். இதில் உண்மையைப் பகுத்து அறிந்து இவ்வுலகிலிருந்து விடுபட முயல்கிறதா? அல்லது மாறானவற்றைப்பற்றி இவ்வுலகில் துக்கச் சுழலில் சிக்கி இடர்பட முனைகின்றதா? என்று கண்காணிக்கிறான் எம்பெருமான். இறைவனது இச் செயல் ஒரு தாயன்பினால் விளைவதைப் போன்றதே.

வத்ஸலையான மாதா பிள்ளை பேகணியாமல் மண் தின்னவிட்டு ப்ரத்யௌஷதமிடுமா போலே எல்வுயிர்க்கும் தாயிருக்கும் வண்ணமான இவனும் ருசிக்கீடாகப் பந்தமும் பந்த மறுப்பதோர் மருந்தும் காட்டுமிறே, என்ற ஆசார்ய ஹ்ருதய வாக்கியம் இவ்வுண்மையையே தெள்ளத் தெளிய அறிவிக்கின்றது. இப்படி இருவகைப் பண்புகள் இல்லையாயின் நன்மை தீமை என்ற பாகுபாடு அற்று, புண்ணிய பாபங்களின் பலன்களைப்பற்றிக் கூறும் சாத்திரங்களின் மர்யாதைகள் குலையும். இவ்வாறு பல்சுவைப்பட்ட பல்வேறு சமயமுமாய்ப் பரந்து நிற்கும் வியத்தகு ஆற்றல் வாய்ந்தவனுடைய மாயத்தை அறியுங்கள். இதுவரை உண்மைக்கு மாறானவற்றைப்பற்றி அவனைவிட்டு விலகிய உங்கள் இழவுதீர விரைந்து சென்று அவன் காலைக்கட்டிப் பிடித்து இவ்வுலகக் காற்கட்டை அறுத்துக் கொள்ளப் பாருங்கள், அந்த ஸர்வசக்தன் தான் திருக்குருகூரிலே எழுந்தருளியிருக்கிறான் என்று காட்டுகிறார் ஆழ்வார்.

ஏழாம் பாட்டு

நாங்கள் இதுவரை ஓடிஓடி எத்தனையோ தெய்வங்களை வணங்கத்தான் செய்தீர்கள். அந்த தேவதைகளை சாத்திரங்கள் கூறும் விதி வழியே பூசித்தீர்கள். அப்படிச்செய்த பூசனையில் (வெறும் வேஷமன்று) திரிகரண சுத்தியோடு செய்தீர்கள். அத்தேவதைகளும் தங்கள் ஆற்றலளவிற்குரிய பலன்களை அள்ளித் தான் வீசின. ஆனால் கிடைத்த பயன் யாது? இடையறாது சங்கிலித்தொடர்போன்ற பிறவிகளைத் தானே பெற்றீர்கள், இதை நீங்கள் கண்கூடாகக் கண்டும் இருக்கிறீர்கள். அதிலிருந்தாவது நித்யமான ஆத்மா அசித்தின் தொடர்பைவிட்டு முக்தி பெற வேண்டும் என்றால், இதுவரை செய்து வந்தது வழியல்ல என்பதை இப்பொழுதாவது உணர்கிறீர்களா. உணர்ந்து கொண்டீர்கள் என்றால் இனி நீங்கள் செய்ய வேண்டியதைக் கூறுகிறேன். இதோ குருகூர் நகரிலே அதோ கேட்கின்றதே ஒலி; என்ன தெரிகிறதா? நீங்கள்வணங்கும் தெய்வங்களும், பிறதேவர்களும் ஒன்றாகக் கூடி ஆதிப்பிரானை ஏத்தும் ஒலிதான் அது.

உங்களையும் ஆட்கொள்ள கொடி எடுத்து வந்திருக்கிறான் அவன். நீங்கள் செய்ய வேண்டியது சிறப்பாக ஒன்றுமில்லை. நான்

எனது என்ற அகங்காரத்தைவிட்டு நீங்கள் அவனுக்குரியவர் என்று உங்களை அர்ப்பணித்துக் கொள்வது ஒன்றுதான் வேண்டியது. மரண பயம் ஒழிய வேண்டுமானால் அந்த ஆதிமூர்த்திக்கு அடிமை புகுவது ஒன்றுதான் வழி.

எட்டாம் பாட்டு

"அது எப்படிச் சொல்லலாம். மார்க்கண்டன் சிவபெருமானை வழிபட்டு யம பயத்தை நீக்கிக் கொள்ளவில்லையா? என்று பௌராணிகர் ஆழ்வாரைக் கேட்கிறார். ஆழ்வார் முறுவலோடு பதில் கூறுகிறார். "ஓஹோ அதுவா. புராணத்தைச் சற்று நன்றாகப் பாரும். மார்க்கண்டன் முதலில் வேண்டிய போது யமபயம் விலக்கப்படவில்லை. அவன் இலிங்கத்தையும் சேர்த்துத் தழுவிக்கொள்ள கூற்றுவன் பாசம் இலிங்கத்தையும் சேர்த்துப் பற்றி இழுத்தது. தன் பக்தனுக்கு வந்த ஆபத்தை நீக்க நாராயணன் அருள் பாலிக்க அதனால் வலிமை பெற்று காலனைக் கடிந்தான். அவ்விதம் அருள் செய்தவன் இதோ திருக்குருகூரிலே ஆதிப்பிரானாய்த் தோன்றி நிற்கவும் பிறதெய்வங்களைக் கூறுகின்றீர்களே.

ஒன்பதாம் பாட்டு

இப்படிக் கூறுகின்றீரே, பிணக்கறும் அறுவகைச் சமயமும் நெறியுள்ளியுரைத்த என்று நீரே சொல்லி யிருக்கிறீரே என்று சிலர் கேட்கிறார்கள். ஆம். உலகில் மதங்கள் என்றுள்ள எல்லாமே ஒருவகையாகப் பார்த்தால் அவனால் சொல்லப்பட்டவையே. ஆனால் முன் நான் சொன்னேனே அவரவர் என்ற பாட்டில். அதுபோலவே அவரவர் அறிவு குண வளர்ச்சிக்கேற்றவாறு அந்தந்த மதம் அமைந்தது அவ்வளவே. அவற்றால் அளந்து காண்பவனல்லன் எம்பெருமான். அந்தந்த மதங்களின் பலன் நிலையற்றது. எனவே உங்கள் ஆன்மாவின் நன்மையை நீங்கள் கருதினால், அவ்வான்மா கடைத்தேற நீங்கள் உண்மையிலேயே விரும்பினீர்களானால் அழகிய வயல்கள் சூழ்ந்த இக்குருகூர் என்னும் திருப்பதியை உங்கள் மனத்திலே நினைவு கூருங்கள். குருகூரை நினைத்தாலே அக்குருகூரிலே அமர்ந்த எம்பெருமான் உங்கள் மனத்திலே அமர்ந்திருக்கக் காண்பீர்கள் என்று பதிலிறுக்கிறார் ஆழ்வார்.

பத்தாம் பாட்டு

ஆகவே செய்ய வேண்டியதென்ன என்பதை இதுகாறும் நான் கூறியவற்றிலிருந்து பொருந்த நோக்கிக் காணுங்கள். எல்லாத் தெய்வங்களும், எல்லா உலகங்களும் தன் வடிவிலே எவ்விதக் குறைபாடுமின்றி விளங்கும்படி எழுந்தருளி யிருக்கிறான் எம்பெருமான். அவனே எல்லார்க்கும் மேலானவன். பரம்பொருள். இந்த உண்மையை மனத்தில் கொண்டு நோக்கத் தெரிந்தீர்களென்றால் அவனாலேயே ஒவ்வொரு காரணார்த்தமாக எழுந்த ஒவ்வொரு மதத்தின் உண்மைத் தன்மை தானே தெரியவரும். அப்போது உங்கள் ஞானத்தின் அளவு உங்களுக்கு விளங்கும். அப்படியிலிருந்து மேலேற வழியை நீங்கள் கடைப்பிடிக்க ஏதுவாகும். அவனை மறந்து அந்தந்த மதங்களே மேலெனத் தவறாகப் புத்திபண்ணி அதிலே உழல்வீர்களானால் அந்தந்த தேவதைகளால் அளிக்கச் சக்தியுடைய பலன்கள் எதுவோ அதைத்தான் பெறுவீர்கள். ஆனால் ஆன்மா பந்தத்திலிருந்து விடுதலை (மோக்ஷம்) பெற வேண்டும் என்பது உங்கள் குறிக்கோள் ஆனால் அது நாராயணன் ஒருவனால்தான் முடியும். அத்தகைய ஆற்றல் மிக்கான். ஏழுலகம் தனிக் கோல் செல்ல வீற்றிருக்கும் இராஜாதிராஜன் உங்கள் கண்களுக்கு விஷயமாம்படி இதோ குருகூரிலே அர்ச்சை வடிவிலே எழுந்தருளி யிருக்கிறான். மூர்த்தியைப் பார்த்து இவனா? என்னாதீர்கள் சிறியனென்றிகழ்ந்து விடாதீர்கள். சிறிய உருவின் பெருமையைமாவலியிடம் தெரிந்துகொள்ளுங்கள். அவன் தான் முன் செய்த யாதவச்சேரியிலே குடக்கூத்தாடியவன். வெறுங்குடக்கூத்தா அது? உலகை ஆட்டும் கூத்தல்லவா. ஆகையால் உறுவது எது? என்று கேட்கில் அக்கூத்தனுக்காட் செய்துதான் என்று தொகுத்துரைத்து உபதேசிக்கிறார் ஆழ்வார்.

பதினோராம் பாட்டு

நீர் சொன்னபடி அக்கூத்தனுக்கு ஆட் செய்வதால் பலன் பெறலாம் என்பது என்ன நிச்சயம்? என்பார்க்குப் பதிலாகக் கூறுகிறார் ஆழ்வார். அப்படி ஆட்செய்து நான் அவனைப் பெற்றேன். பலன்பெற அருகதையற்ற நான் கைம்முதலற்ற நான் பெற்றேன். அத்தகைய வள்ளல் அவன். அவனுக்கு ஆட்செய்யப்

பெற்றீராகில் (அதில் உங்களுக்குச் சிரமமே இல்லை) இந்த லீலா விபூதியும், இத்தேகக் கந்தை கழியும்போது வைகுந்த வாழ்வான நித்ய விபூதியும் உங்கள் அகங்கையிலே அடங்கியுள்ளன. வள்ளல் கொடுக்கவென்றே குருகூரில் எழுந்தருளி யிருக்கிறான். அத்தகைய வாழ்வைப் பெறுவதும் இழப்பதும் உங்கள் இச்சை என்று உலகோர்க்கு உணர்த்துகிறார் ஆழ்வார்.

ஏன் உணர்த்த வேண்டும்? உலகோர் எல்லோருடைய ஆன்ம வெப்பம் ஆழ்வார்க்குச் சுடுகிறது. அவ்வெப்பம் தீர, அவர்பெற்ற பேறு உலகோர் பெற வேண்டும் என்ற வேட்கையில் கூறினார். சில கசந்த உண்மையும் இருக்கலாம். என்றாலும் அது பிறர் இழவு காணப்பொறாமல் எழுந்த அருளின் விளைவு. பரதுக்கம் காணப்பொறாமையன்றோ வைஷ்ணவலக்ஷணம். இவ்வருளாலன்றோ அடியேன் செய்யும் விண்ணப்பம் என்று தொடங்கி "பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா ஒழுக்கும் அழுக்குடம்பும், இந்நின்ற நீர்மை இனியாமுறாமை" என்றார். யானுறாமை என்னாது யாமுறாமை என்றதன் கருத்தே நாட்டுக்காகத் தாம் மன்றாடுவதுதானே?

திருவெண்காடு நாயன்மார்கள் உற்சவமூர்த்திகள் நிறுவுதல்



வையை

காவிரிதென் பெண்ணை பாலாறு—தமிழ்
கண்டதோர் வையை பொருநைநதி—என
மேவியயாறு பலவோ டத்திரு
மேனி செழித்த தமிழ் நாடு.

—பாரதியார்.

தமிழ் நாட்டின் சிறப்பைக் கூறவந்த தேசிய கவி சுப்பிரமணிய பாரதியார் தமிழ் நாட்டை வளம்படுத்தும் காவிரி, தென் பெண்ணை, பாலாறு, வையை, தாமிரவருணி என்ற ஐந்து ஆறுகளின் பெருமையை மேற் கண்ட பாடலில் கூறியுள்ளார். வையையாற் றைப்பற்றிக் கூறும்போது "தமிழ் கண்ட தோர் வையை" என்ற அடைமொழிகளால் அணி செய்கிறார். அவர் கூற்றுக்குக் கார ணங்கள் பல உள்ளன. மிகப் பழைய சங்க நூல்களிலிருந்து அண்மைக் காலம்வரை எழுந்த தமிழ் இலக்கியங்களிலெல்லாம் வையையாற்றின் புகழ் பேசப்படுகிறது. பரி பாடல் சில்ப்பதிகாரம் முதலிய பழந்தமிழ் நூல்களில் வையை என்ற பெயர் காணப்படு கின்றது. தேவாரம், திருவிளையாடற் புராணம் முதலியவைகளில் வைகை என்ற பெயர் வரு கிறது.

பரிபாடல் என்ற சங்க நூலில் எட்டுப் பாடல்கள் வையையாற்றைப் பற்றியவை. ஆற்றைப்பற்றி, அதிலும் சிறப்பாக வையை யைப்பற்றித் தனியாகக் கூறப்பட்டிருக்கிறது. பரிபாடல் என்ற சங்கநூல் மிகப் பழைமை யானதென்று ஆராய்ச்சியாளர் கூறுவர். அந்தப் பாடல்களில் கூறப்படுவதைச் சுருக்க மாகக் காண்போம். மழைநீர் மலைத்தொடரில் விழுந்து பல அருவிகளாய் ஓடி ஒன்று சேர்ந்து வையைப் பேராறுகப் பெருக் கெடுத்து ஓடுகிறது. இருமருங்குமுள்ள கரை களில் வானுற ஓங்கிய மரங்கள் வளம்பெற நிற்கின்றன. அம்மரங்களின் பூக்கள் ஆற்று வெள்ளத்தில் விழுந்து பரந்து செல்லும் காட்சி பூவாடை போர்த்த மங்கையெனத் திகழ்கிறது. ஆடலறியாத நடன மாது போன்று மெதுவாகப் போகிறது. ஆற்றில் வெள்ளம் வருவதை யறிந்த கரையோரம் வாழும் மக்கள் மகிழ்ச்சி யடைகின்றனர், இடிந்த உடைந்த கரைகளை அடைக்கின்றனர். மதுரைநகரின் மதிலைத் தாக்கி யோடுகிறது வையையாறு. அந்நகரின் மக்கள் புதுப்புன லாட யானை, குதிரை, கோவேறு கழுதை முதலியவைகளில் வருகின்றனர். மகளிரும் ஆடவரும் பல நீர்த்துறைகளில் நீராடி மகிழ் கின்றனர்; மிதவைகள்மீது விளையாடுகின் றனர்; நீந்துகின்றனர். தைந்நீராடும் கன்னிப் பெண்கள் "மழைவளம் சுரப்பதாக! அதனால் வெள்ளம் பெருகி நின்வளம் குறையாதிருப்ப தாக" என்று வாழ்த்துகின்றனர்.

சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் இவ் வாற்றைப்பற்றிக் கூறுகிறார். பூக்கள் நீரை மூடிச்செல்லும் காட்சி மங்கைநல்லாள் பூந் துகில் போர்த்துச் செல்வது போன்றிருந்த தென்கிறார். மேலும்,

உலகு புரந்தூட்டு முயர்பே ரொழுக்கத்துப்
புலவர் நாவிற் பொருந்திய பூங்கொடி
வையை யென்னும் பொய்யாக் குலக்கொடி

என்று அவரே விதந்தோதுகிறார். 'உலக உயிர் களைக் காக்கப் பல பொருள்களை விளைத்துத் தருபவள்; புலவரால் புகழப் பெறுபவள்; பாண்டிய மன்னர்க்குக் குலக்கொடிபோல் விளங்குபவள்' என்பது பொருள். இந்த ஆற் றில் யானைமுக, சிங்கமுக, குதிரைமுக ஓடங் கள் தெப்பங்கள் இவைகள் இருந்தன. அவை களில் ஒன்றில் ஏறியே கவுந்தியடிகள், கோவலன், கண்ணகி முதலியவர்கள் ஆற் றைக் கடந்து மதுரைமாநகரை யடைந்தனர்.

மதுரைக்காஞ்சி யென்ற பத்துப் பாட்டில் ஒன்றான நூலில் "வையையன்ன வழக்குடை வாயில்" என்று கூறப்பெற்றிருக்கிறது.

திருவிளையாடற் புராணத்தில் குண்டோதர னுடைய நீர்வேட்கை தணிதற் பொருட்டு சிவபெருமான் கங்கையை யழைக்க அதுவே வையையாறாக ஓடிவந்தது, அதன்நீரைக் குடித்து அடங்காத தாகத்தைக் குண்டோ

தரன் தீர்த்துக்கொண்டான் என்று கூறப்பட்டிருக்கிறது. இரு கரைகளிலும் கைகளை வைத்து ஆற்றை அப்படியே வாயால் குடித்தான் அதனால் வை, கை=வைகை என்றுயிற்று என்று நகைச்சுவைப்படவும் கூறுவர். சமணருடன் வாதிட்டபோது சம்பந்தர் இவ்வாற்றில் இட்ட ஏடு எதிர்சென்று திருவேடகத்தில் தங்கிய செய்தியும் பெரிய புராணம், திருவிளையாடற்புராணம் இவைகளில் காண்கிறோம். அரிமர்த்தன பாண்டியன் காலத்தில் வையையில் வெள்ளம் வந்து கரைகளை யுடைக்க, செம்மனச் செல்வியான வந்தியென்னும் பிட்டுவாணிச்சிக்காகக் கூலியாளாக வந்து மண்சுமந்து பாண்டிய மன்னனால் பிரம்படிபட்ட கதை நாடறிந்ததொன்று. அதை மணிவாசகப் பெருமான்,

> கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
> மண்சுமந்து கூலிகொண்டக் கோவால்
> மொத்துண்டு
> புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண்
> அம்மானாய்.

என்று மனம் உருகிப் பாடுகிறார். மேற்கூறியவற்றை யெல்லாம் நோக்க பாரதியார் 'தமிழ் கண்டதோர் வையை' என்று கூறியதற்குக் காரணங்கள் உள்ளன என்று தோன்றுகின்றதல்லவா?

வையையாறு எங்கிருந்து தோன்றுகிறது, எவ்வழியாக ஓடுகிறது, எவ்விடத்தில் முடிவடைகிறது என்பனபற்றி யெல்லாம் அறிய வேண்டுவது அவசியம். மதுரை மாவட்டத்தில் பழனிப் பகுதியில பழனிமலைத் தொடர் என்ற மலைத்தொடர் இருக்கிறது. அதையடுத்துச் சிறப்பாகக் கருதப்படுவது வருஷநாடு ஆண்டிப்பட்டி மலைத்தொடர். வருஷநாடு என்றால் மழைநாடு என்று பொருள். வருஷ நாட்டுப் பள்ளத்தாக்குதான் வையை யாற்றின் பிறப்பிடமாகும். கம்பம் பள்ளத்தாக்கிலிருந்து சுருளியாறு உற்பத்தியாகி, போடிநாயக்கனூர்ப்பள்ளத் தாக்கிலிருந்து தோன்றும் தேனியாற்றுடன் அல்லிநகரம் என்ற ஊருக்கப்பால் இரண்டு கல் தொலைவில் கலக்கிறது. மேலும் இரண்டு கல் சென்றதும் தேனியாறு வையையுடன் சேர்கிறது. இன்னும் வராகநதி, மஞ்சளாறு என்றவையும் வையயற்றுடன் கலக்கின்றன. நிலக்கோட்டைப் பகுதியிலுள்ள அணைப்பட்டி என்னும் இடத்தில் இரண்டாகப் பிரிகிறது. ஒன்று வையை; மற்றொன்று பெரியாற்றுக் கால்வாய்; பிரியுமிடத்தில் கட்டப்பட்ட அணை பேரணை என்பது. பெரியாற்றுக் கால்வாய் மதுரைமாவட்டம் மேலூர்ப்பகுதியிலுள்ள நிலங்களுக்கு நீர்ப்பாசனமாகப்பயன்படுகிறது.

வையையாறு மதுரைமாநகர் வழியாகக் கிழக்கு நோக்கி ஓடி இராமநாதபுரம் மாவட்டத்தில் புகுந்து சிவகங்கை, பரமக்குடி, இராமநாதபுரம் பகுதிகள் வழியாகப் பாய்ந்து இராமநாதபுரம் ஊருக்கருகிலுள்ள பெரிய கண்மாயில் (ஏரியில்) விழுகிறது. நேரே இந்த ஆறு கடலில் கலக்கவில்லை. கமுதக்குடி என்னும் இருப்புப் பாதை நிலையத்துக்கருகில் கூத்தன்கால் அல்லது வேணுநாத உடைய பிள்ளைகால் என்ற கால்வாய் ஆற்றிலிருந்து பிரிகிறது. பரமக்குடியை அடுத்தும் இவ்வாற்றிலிருந்து பல கிளைகள் பிரிந்து சென்று பல கண்மாய்களை (ஏரிகளை) நிரப்புகின்றன. இராமநாதபுரம் பெரிய ஏரியில் சேர்ந்ததும் வையை யாற்றின் பெயர் மறைந்து விடுகிறது. அவ்வேரியிலிருந்து ஒரு கால்வாய் புறப்பட்டு ஆற்றங்கரை என்னும் ஊர் அருகே கடலுடன் கலக்குகிறது. அதற்கு வெட்டாறு என்று பெயர். அணைப்பட்டி என்ற இடத்தில் பேரணை கட்டப்பட்டபின் வையை யாற்றில் பல மாதங்கள் தண்ணீர் ஓடுவதைக் காண முடியாமற் போய்விட்டது. மதுரை மாவட்டத்திலுள்ள உசிலம்பட்டியருகில் ஒரு அணை கட்டித் திருமங்கலம் பகுதியிலுள்ள நிலங்களுக்கு நீர் வசதிசெய்யத் திட்டமேற்படுத்தி அதுவும் உருவகிக் கொண்டு வருகிறது.

வையையாற்றின் கரையிலே பாடல் பெற்ற பதிகளான மதுரை, திருஆப்பனூர், திருவேடகம், திருப்பூவணம் முதலியன அமைந்திருக்கின்றன. இன்னும் குலசேகரன் கோட்டை, கொடிமங்கலம், மேட்டுப்பட்டி, சோழவந்தான், பரமக்குடி, மானமதுரை இராமநாதபுரம் முதலிய ஊர்களும் இதன் கரைகளில் இருக்கின்றன. வையைப் பேராறு பண்டுதொட்டு இன்றுவரைப் பல வகைகளில் மக்களுக்குப் பயன் பெற்று வருகிறது. "வையை என்னும் பொய்யாக்குலக்குடி" என்ற இளங்கோவடிகளின் திருவாக்கும் பொய்க்காதிருப்பது கண்டு நாம் இறும்பூதெய்த வேண்டும்.

158339

ஆழ்வார்கள் பாடும் ஜகன்மோகனபாலன்

(திவ்வியப்பிரபந்தத்தில் பாகவதம்)

[பி. ஸ்ரீ.]

'மண் உய்ய மண்ணுலகில் மனிசர் உய்ய இறைவன் அவதாரம் செய்கிறான். அசுரர்களும் அசுர சுபாவம் உள்ளவர்களும் அதிகரித்துத் தருமத்திற்கு நெருக்கடி ஏற்படும்போது 'பார் ஏறு பெரும்பாரம்' என்று கூறப்படும் பூமி பாரத்தைத் தீர்ப்பது அவதார காரணமாகும் என்பர்.

அதர்மத்தின் பாரத்தால் நிலமங்கைக்குத் தான் துயரம் என்பதில்லை. அமரர்களும் வேதனைப்படுகிறார்களாம். மண்ணும் விண்ணும் அழுது முறையிடுவது இறைவன் காதில் விழுந்துதான் அவதாரம் நிகழ்கின்றது என்ற குறிப்பைப் புராணங்களில் காண்பதுபோல் ஆழ்வார்களின் பிரபந்தங்களிலும் காண்கிறோம்.

அவதாரம்

'சாது சனத்தை நலியும் கஞ்சனை (கம்ஸனை)க்' கொல்லக்கண்ணன் பிறந்தான் என்கிறார் நம்மாழ்வார். 'தந்தை காலில் பெரு விலங்கு' அற்றுப் போகவும், 'தாயைக் குடல் விளக்கம் செய்ய'வும் கண்ணன் பிறந்ததாகவும் ஆழ்வார்கள் கூறுகிறார்கள். கம்சனைக் குறிப்பிடுவது சிசுபாலன் முதலிய இதர துஷ்டர்களையும் நினைவூட்டுவதுதான்.

'என்ன நோன்பு நோற்றான் கொலோ இவனைப் பெற்ற வயிறுடையாள்?' என்ற பெருமை கண்ணனின் தாய்க்கு ஏற்பட்டது. பெற்ற தாயான தேவகிக்கு அல்ல. வளர்த்த தாயான யசோதைக்குத்தான்.

வசுதேவரின் 'சித்தம் பிரியாத தேவகி' வயிற்றில் 'அத்தத்தின் பத்தாம்நாள், தோன்றிய கண்ணன் அந்தக் காரிருளில் கஞ்சன் வலையிலிருந்து பிழைத்துப் போய் ஆயர்தலைவனான நந்தகோபனுக்கும் யசோதைக்கும் 'பேதைக் குழவியாய்' 'பலதேவற்கு ஓர் கீழ்க் கன்றாய்' வளர்ந்தருளிய செய்தியைப் பெரியாழ்வாரும் இவர் திருமகளான ஆண்டாளும் குறிப்பிடுகிறார்கள். 'பேராளன் நந்தகோபன் தன் இன்னுயிர்ச் சிறுவன்' ஆக வளர்ந்ததை நம்மாழ்வாரும், 'தெய்வ நங்கை யசோதைக்கு'ப்பிள்ளையாக வளர்ந்ததைக் குலசேகராழ்வாரும் குறிப்பிடுவதையும் காண்கிறோம்.

'ஆயர்பாடிக்கு அணிவிளக்'காய் வளர்ந்து வருகிறான் குழந்தைக் கண்ணன். உலக நாயகன் 'ஆயர்கள் நாயகனாய்' வளர்ந்துவரும் அதிசயத்தைப் பாடுகிறார் பெரியாழ்வார். ஆயர்கொழுந்து 'கொம்பனார்க் கெல்லாம் (பெண்களுக் கெல்லாம்)' கொழுந்துக்கும் கொழுந்தாய் வளரும் ஆச்சரியத்தைப் பாடுகிறாள் ஆண்டாள்.

ஆதி ஸ்ரீஜயந்தி கொண்டாடுதல்

குழந்தை பிறந்த வைபவத்தைக் கொண்டாடுகிறது ஆயர்பாடி. பாடுவார்களும் பறை கொட்ட நின்று ஆடுவார்களும் ஆகி, ஆயர்கள் மங்களம் கொண்டாடுவதைக் கண் முன்னே காண்பவர்போல் அகக்கண்ணால் கண்டு பாடுகிறார் பெரியாழ்வார். ஆம்; அந்த ஆதி ஸ்ரீஜயந்தி வைபவத்தைப் பெரியாழ்வாரும் தமிழகத்திலே தம் சொந்த ஊரான ஸ்ரீவில்லிபுத்தூரில் கொண்டாடுகிறார்.

'தத்துக் கொண்டாள் கொலோ! தானே பெற்றாள் கொலோ!' என்று அதிசயிக்கும்படி ஒருத்தி மகனாய்ப் பிறந்த குழந்தை ஒருத்தி மகனாய் ஒளித்து வளரக் காண்கிறோம்.

பூதனை வதம்

ஆனால் எத்தனை நாள் இப்படி ஒளித்து வளர்வது? கஞ்சன் வலையிலிருந்து எத்தனை நாள் இப்படித் தப்பியிருக்க முடியும்? கஞ்சனது வஞ்சனை அதிகரிக்கிறது. வலை ஆயர்பாடி அளவிற்கு விரிந்து விடுகிறது. வயிறு கொதிக்கிறது, மனம் கொதிக்கிறது. வஞ்சக் கஞ்சனுக்கு. தீமனத்தானின் ஆதரவில் திரியும் பேயொன்று பெண்வடிவில் புறப்படுகிறது. 'பெண்மை மிகு வடிவு' என்பது பெரியார் வாக்கு. 'பெற்றதாய் போலவந்த பேய்ச்சி' என்பது திருமங்கைமன்னன் வாக்கு.

பேய்ப்பெண் கண்ணனைத் தன் மகனாகப் பாலூட்டப் பார்க்கிறாள். பாலுண்பான் போல முனிந்து உண்டு அந்த ஆவியைப் 'பாலுள் வாங்கி'க் கொள்கிறான் கண்ணன் என்று பூதத்தாழ்வாரும் திருமழிசையாரும் தெரிவிக்கிறார்கள். தாய்போல வந்த வடிவில் பேய்கண்ட பெருமானை யாரே வஞ்சிக்க முடியும்?—எப்படித் தான் வஞ்சிக்க முடியும்? இது பூதனைவதம் கூறும் ஆழ்வார்களின் குறிப்பு.

சகடு முறித்தது

நந்தகோபன் இல்லத்தில் ஒரு வண்டியின் கீழ்ப்புறத்திலே கண்ணனைத் துணித் தொட்டிலில் கண்வளர்த்தி யசோதை நீராடப் போன சமயம் பார்த்து அந்த வண்டி அப்படியே குழந்தைமேல் சாய்ந்து விழுந்து கொல்ல முயன்று தானேமுறிந்தொழிந்தது என்ற கிருஷ்ணலீலையை அறியாதார் இல்லை. இந்த லீலையைப் பெரியாழ்வாரும் நம்மாழ்வாரும் குறிப்பிடுகிறார்கள்.

கண்ணன் கிடந்த தொட்டிலை 'வண்ணச் சிறுத்தொட்டில்' என்கிறார் பெரியாழ்வார்.

மாணிக்கம் கட்டி
வயிரம் இடைகட்டி
ஆணிப்பொன் னால்செய்த
வண்ணச் சிறுத்தொட்டில்

என்று பெரியாழ்வாரின் மனோபாவம் வசீகரமாக வருணித்திருப்பதைப் பலரும் அறிந்திருக்கிறார்கள். ஆனால் இந்தத் தொட்டிலுக்கும் முறிந்த சகடத்திற்கும் என்ன தொடர்பு இருக்க முடியும்?

ஒரு வண்டியின் கீழ்ப்புறத்திலே தூளித் தொட்டிலில் கண்ணனைக் கண் வளரச் செய்து நீராடப்போனபோது நேர்ந்த லீலையைத்தான் 'தாளை நிமிர்த்து' 'உருளும் சகடம் உதைத்து...' என்று பெரியோர் கூறுவதாகக் கருத வேண்டும்.

யசோதை அப்பால் சென்றதும் நின்ற சகடம் உருளத் தொடங்கியது. காரணம் கம்சனால் ஏவப்பட்ட அசுரன் ஒருவன் அந்தச் சகடத்தில் ஆவேசித்ததுதான். சகடம் உருளத் தொடங்கியதும், உறங்குவான் போலே கிடந்த பிள்ளையின் காலும் நிமிரத் தொடங்கியது.

பசித்துப் பாலுக்கு அழத் தொடங்கும் குழந்தை தன் சிறிய கால்களை மேலே தூக்கி உதைக்கப் பார்க்கிறதல்லவா? சாதாரணக் குழந்தையின் பாவனை தான்; ஆனால் சகடாசுரவதம் ஆகிவிடுகிறது. வண்டியும் அசுரனும் ஒரே உதையில் முறிந்து போகிறார்கள். தருமத்திற்கு ஓர் அநாயாச வெற்றி உருளும் சகடம் உதைத்த கதை.

பெயர் இடுதல்

குழந்தைக்குப் பெயர் இடுதலை நாமகாண விழாவாகக் கொண்டாடுகிறோம். 'பத்து நாளும் கடந்த இரண்டாம் நாள்' எங்கும் அலங்கரித்து, 'வேதம்வல்லார்களைக்கொண்டு' கண்ணனுக்குப் பெயர் இடுகிறார்களாம். 'கண்ணா!' என்று அழைக்கிறார்கள், நாவிலே இன்பம் ஊற.

ஒரு பெயரும் இல்லாத பரம்பொருளுக்கு எத்தனையோ பெயர்கள்! அழகழகான பெயர்கள், பக்தர் உகக்கும் பெயர்கள்; அன்பர் நாவில் தித்திக்கும் பெயர்கள். இத்தகைய பெயர்களில் எல்லாம் 'என் கண்ணா!' என்று அழைப்பதுபோல் இனிதாவது வேறொன்றும் கண்டோமில்லை என்பது ஆழ்வார்களின் மனநிலை.

பெரியாழ்வாரும் பாலலீலைகளும்

கடவுளைக் 'கூத்தன்' என்று சைவர்கள் அழைக்கிறார்களல்லவா? திருமாலை வைணவர்கள் 'மாயக்கூத்தன்' என்று அழைப்பதும் உண்டு. மாயக்கூத்தனின் மாமாயங்களெல்லாம் கிருஷ்ணலீலைகளாக வெளிப்பட்டு மக்

கள் இதயத்தை வசீகரிக்கின்றன என்பர். இத்தகைய கிருஷ்ணலீலைகளைப் பெரிதும் அனுபவித்தவர் பெரியாழ்வார். தாமே யசோதையாகித் தமிழ்நாட்டிலே கண்ணனை வளர்த்துத் தமிழிலக்கியத்திலே தவழவிட்டவரல்லவா?

குழந்தைக் கண்ணனுக்கு நெற்றிச் சுட்டி கட்டியிருக்கிறாள் யசோதை. அந்த முகத்துச் சுட்டி தொங்கி அசையத் தவழ்ந்து போகிறான் கண்ணன். கிண்கிணி ஒலிக்கப் போய்ப் புழுதி அளைகிறான். பவளவாயினிடையே வெள்ளி முளைத்ததுபோல் முளைத்திருக்கும் அந்தச் சில பற்கள் தெரியும்படி நகைக்கிறான். கணகண என்று சிரித்துக் கொண்டே முன் வந்து நின்று முத்தம் தருகிறான். யசோதைக்குத் தானே? ஏன், பெரியாழ்வாருக்கும் தான்!

பாலலீலைகள் துஷ்டத்தனமாகவும் பரிணமிக்கின்றன. வெண்ணெய் விழுங்குகிறான், எண்ணெய்க்குடத்தை உருட்டுகிறான். இளம்பிள்ளைகளை எழுப்பிக் கண்ணைப் புரட்டி விழிக்கிறான். ஒன்றும் அறியாதவன்போல் விரைவாக உறங்கிப் போகிறான். 'உறங்குகிறானே!' என்று தாய் நினைத்துக் கொண்டிருக்கும்போதே பானையில் பாலைக் குடிக்கிறான். 'அதோ அவர்கள் சிரிக்கிறார்களே!' என்று தாய் கோபிக்கிறாள். சிரித்த பெண்கள் மோகித்துப் போவதையும் பார்க்கிறார் யசோதையாகும் பெரியாழ்வார்.

கண்ணனுடைய அழகிய முகமும்வாயும் யசோதைக்கும் ஆய்ச்சிமாருக்கும் தோற்றம் அளிப்பதுபோல் அவ்வளவு தெளிவாய்ப் பெரியாழ்வாருக்கும் தோற்றம் அளிக்கின்றன. தாயின் இடுப்பிலிருந்து 'மழலை முற்றாத இளஞ்சொல்லால்' கண்ணன் சந்திர பிம்பத்தைப் பார்த்து, 'அம்புலீ வா' என்று கூப்பிடுவதும் யசோதைத் தாய் காதில் விழுவது போல் அவ்வளவு தெளிவாகப் பெரியாழ்வார் காதிலும் விழுகிறது.

பிள்ளைவாயுள் உலகம் கண்டது

கையும் காலும் நிமிர்த்துப் பைய நீராட்டிப் பசுஞ்சிறு மஞ்சளால் தாய் நாக்கு வழிக்க குழந்தை வாய்திறக்க, அந்த வாய்க்குள் வையம் ஏழும் காண்கிறாளாம் யசோதை. மண் மலை கடல் எல்லாம் அந்த வாய்க்குள்ளே! ஒரு சின்னஞ்சிறு மூலையில் ஆய்ப்பாடியும் இருக்கிறது. அதில் யசோதையும் இருக்கிறாள்!

பிள்ளை வாயுள் வையம் ஏழும்காண்பது தாய்மைப் பண்பு—ஒவ்வொரு தாய்க்கும் வாய்க்கும் சூட்சும அனுபவம். தாய்மாரின் இந்தப் பாக்கியம் யசோதைக்குத் தனிப் பெரும் பேறாக வாய்த்தது என்பது பெரியாழ்வார் குறிப்பு.

'வாயுள் வையம் ஏழும்' காட்டிய குழந்தை 'ஆடி ஆடி அசைந்து அசைந்திட்டு அதனுக்கு ஏற்ற கூத்தை ஆடி' வரும்போது மாயக்கூத்தனே இப்படி அவதரித்து லீலைகள் புரிகின்றான் என்பதில் பெரியாழ்வாருக்கு ஒருவித ஐயமும் இல்லை, இருக்கவும் முடியாது.

உரலோடு கட்டுதல்

கண்ணனுடைய 'துஷ்ட' லீலைகள் யசோதைக்கு ஒரு சமயம் அதிக அளவில் கோபத்தை மூட்டிவிட்டன. அப்போது தாய் கண்ணனைக் கயிற்றினால் கட்டி உரல் ஒன்றில் பிணித்து விடுகிறாள். 'வெள்ளி மலை போல்' குவித்து வைத்திருந்த வெண்ணெய் காணப்படவில்லை. 'உளம்குளிர அமுதுசெய்'தவன் வெகு சாமர்த்தியமாகத்தான் அந்தத் திருட்டுத் தொழிலை நடத்தி வந்திருக்கிறான். எனினும் ஒருநாள் 'கள்ளன்' பிடிபடுகிறான். 'விரலோடு வாய் தோய்ந்த வெண்ணெய்' கண்ட பின்பே ஆய்ச்சி உரலோடு கட்டி வைக்கிறாள் என்கிறார் பொய்கையாழ்வார்.

'பொத்த உரலைக் கவிழ்த்து அதன் மேலேறி, தித்தித்த பாலும் தடாவினில் வெண்ணெயும் மெத்தத் திருவயிறு ஆர விழுங்கி' வந்த அந்தக் களவிற்கு ஒருநாள் கண்ணனுடைய விரல்களும் வாயுமே சாட்சி சொல்லிவிட்டன! 'முழுதும் வெண்ணெய் அளைந்து தொட்டு உண்ணும்' கையும் களவுமாய் அகப்பட்டுக்கொண்டான் என்கிறார் குலசேகராழ்வார். ஒரு களவுக்கும் சாட்சி கிடைக்கவில்லையே என்று நினைத்திருந்தவளுக்கு, 'வெண்தயிர் தோய்ந்த செவ்வாய்' பேசாமலே சாட்சி சொல்லி விடுகிறதாம் அந்தத் தயிர்க்களவுக்கும் சேர்த்து!

யசோதை அன்புற்று நோக்குகிறாள் என்றுதான் சொல்லுகிறார் பெரியாழ்வார். கண்ணன் அப்போது அஞ்சி நோக்கிய அந்த

நோக்கும் அழுகையும் தொழுகையும் கண்டு,

தொல்லை இன்பத்(து)
இறுதிகண் டாளே !

என்றுதான் சொல்லுகிறார் குலசேகராழ்வாரும். எனினும் அடித்தும் பிடித்தும் அனைவர்க்கும் காட்டுவதுபோல் ஊரார் காண உரலில் கட்டி வைக்கிறாளாம்.

விம்மி விம்மி அழுகிறான் கண்ணன். 'கண்ணி நுண் சிறுத்தாம்பினால் கட்டுண்டு' இருந்த அந்த நிலையிலே, 'பெருமா உரலில் பிணிப்புண்டிருந்தது ஊர் காண விண்ணெல்லாம் கேட்க அழுது' சாகசம் செய்கிறான்.

வயிற்றில் அழகிய நுட்பமான கயிற்றால் கட்டப் பெற்றதால் கண்ணன் 'தாமோதரன்' என்று சொல்லப்படுகிறான். தாய் இப்படித் தன்னைக் கட்டி விடுமாறு இடம் கொடுத்த கருணை பக்தர்களுக்கெல்லாம் பரமன் அன்புக் கயிற்றால் கட்டுண்டு அருள் புரிந்து வருகிறான் என்ற மகத்தான உண்மைக்கு ஒரு நினைவுக்குறிதான் !

அழுத பிள்ளை அந்த அழுகையைத் திடீரென்று நிறுத்திவிட்டு உரலை இழுத்துப் பார்க்கிறது—இழுத்தே விடுகிறது. உரலோடு அப்படியே தவழ்ந்துபோய் ஒரு பக்கத்திலிருந்த இரட்டை மருதமரத்தின் நடுவே நுழைந்து போகிறது. அப்போது உரல் குறுக்காக நின்று அந்த மரங்களால் தடுக்கப்படுகிறது. தவழ்ந்து போகும் குழந்தையோ அவசரமாக அந்த உரலை இழுத்துப் பார்க்கிறது. முடிவு என்ன ?

குழந்தைக்கும் சேதம் இல்லை, உரலுக்கும் சேதம் இல்லை. மரங்கள் இரண்டும் முறிந்துவிடுகின்றன. விழுந்ததும் இருவர் சாபம் தீர்ந்து போகிறார்களாம். குபேர புத்திரர் இருவர் நாரதரின் சாபத்தால் அப்படி இரட்டை மருதமரமாக நின்றுகொண்டிருந்தார்களாம்.

'பொய்ம்மாய மருதான அசுரரை' என்று பெரியாழ்வார் கூறுவதால், இந்த மருதமரங்களிலும் அசுர ஆவேசம் ஏறியிருந்தது என்றும், இந்த அசுர ஆவேசமும் கம்சனின் சூழ்ச்சியால் ஏற்பட்டது என்றும் ஊகிக்கலாம்.

மாடு கன்று மேய்த்தல்

கோல் கைக்கொண்டு, காலில் சதங்கைகள் ஒலிக்க, மாடு கன்றுகளை மேய்த்துத் திரிந்தான் கண்ணன் என்று பெரியாழ்வாரும் ஆண்டாளும் பாடியிருக்கிறார்கள். 'கோவலனாய் ஆநிரைகள் மேய்த்து' என்று முதலாழ்வார்களில் ஒருவர் கூறுவதையும் காணலாம்.

'இட்டமான பசுக்களை இனிது மறித்து நீரூட்டி விட்டுக் கொண்டு விளையாடும்' என்று வரும் நாச்சியார் (ஆண்டாள்) திருமொழி பிரசித்தமானது. அப்போது 'கணங்களோடு மின்மேகம் கலந்தாற்போல வனமாலை மினுங்க நின்று' கண்ணன் விளையாடியதையும் ஆண்டாள் குறிப்பிடுகிறாள். மாடு மேய்த்த பின் திரும்பி வரும்போது கண்ணன் நண்பர்களுடன் ஒரே கூட்டமாய் வரும்போது, 'மழைகொலோ வருகின்றது ?' என்று மங்கைமார் ஆவலாய்ப் பார்க்கும் காட்சியைப் பெரியாழ்வார் வாக்கிலே காண்கிறோம்.

அசுர வதங்கள்

தேநுகாசுரன் முதலான அசுரர்களைக் கண்ணன் தொலைத்தருளிய கதைகளும் ஆழ்வார்கள் வாக்கில் குறிக்கப்படுகின்றன. முள்ளைக் கொண்டே முள்ளைக் களைவது போல், விளாமரம்போல் நின்று கண்ணன் மேல் விழுந்து கொன்றுவிட வேண்டுமென்று எண்ணிக்கொண்டிருந்த ஓர் அசுரனை, தன்னை முட்டிக் கொல்ல வேண்டுமென்று கன்றுவடிவில் வந்த அசுரனைத் தூக்கியடித்து, இருவரையும் கண்ணன் ஒழித்தருளிய திருவிளையாடலைப் பெரியாழ்வார் 'கானக வல்விளவின் காய் உதிரக் கருதிக் கன்றது கொண்டெறிந்து' என்ற வாக்கில் குறிப்பிடுகிறார்.

இந்த அசுர வதங்களுக்கெல்லாம் சிகரமாக வருவது கம்சவதம். குவலயாபீடம் என்ற மதயானையைக் கம்சன் ஏவ, அந்த யானையின் தந்தங்கள் இரண்டையும் பறித்து அவற்றால் அந்த யானையையும் கொன்று கம்சனுடைய அரண்மனைக்குள் கண்ணனும் பலராமனும் செல்வதையும், பிறகு கம்சன் ஆணையால் 'இரு மலைபோல் எதிர்ந்த மல்லர் இருவ'ரையும் மற்போரிலேயே இந்த யாதவ வீரர்கள் தொலைத்தருளுவதையும் ஆழ்வார்

கள் குறிப்பிடுகிறார்கள். மல்லர் வதத்திற்குப் பின் நிகழ்ந்த கம்சவதம் ஆழ்வார்களால் ஜகன்மோகன பால கோபாலனது துஷ்ட நிக்கிரக சிகரமாய்க் குறிக்கப்படுகிறது.

அப்பால் நிகழ்ந்த துஷ்டநிக்கிரகச் செயல்களில் நரகாசுரவதம், சிசுபாலவதம், தந்தவக்கரன் வதம், வாணன் ஆயிரம் தோள் துணித்தல் முதலியன ஆழ்வார்கள் வாக்கில் பாராட்டப் பெறுவதைக் காண்கிறோம். பாரதப் போரில் ஜயத்திரதன் மரணத்திற்குக் கண்ணன் காரணமாவதும் பெரியாழ்வாரால் பாடப்பெற்றிருக்கிறது,

சிஷ்டபரிபாலனச் செயல்கள்

துஷ்டநிக்கிரகங்களெல்லாம் சிஷ்டபரிபாலனத்திற்காகவே அவதாரமூர்த்தியால் நிகழ்த்தப்படுகின்றன. எனவே சிஷ்டபரிபாலனச் செயல்கள் ஆழ்வார்கள் வாக்கிலே சிறப்பாய்க் குறிக்கப்படுகின்றன.

உதாரணமாக, உரலில் கட்டப்பெற்ற பிள்ளை அசுராவேசம் கொண்ட மருதமரங்களை முறித்தபோதே இருவருக்குச் சாப விமோசனம் ஏற்பட்டதை அறிந்துகொண்டிருக்கிறோம். 'விண்ணெல்லாம் கேட்க அழுது' கொண்டே சென்ற குழந்தை மண்ணும் விண்ணும் அழுத அழுகையைத் தீர்க்க வந்தவன்தானே! ஏன், அசுர வதங்கள் எல்லாம் வதஞ்செய்யப்பெற்ற அந்த அசுரர்களுக்கும் கருணை காட்டிய காரியம் தானே!

காளியமர்த்தனம் என்ற செயலைத்தான் பாருங்கள். பெரியாழ்வாரும் ஆண்டாளும் 'பூத்த நீள் கடம்பு ஏறி..., தாமரைப் பொய்கை கலக்கி, விடம்படு நாகத்தை வால் பற்றி ஈர்த்துப் படம்படு பைந்தலை மேலெழப் பாய்ந்திட்டு', அந்த 'முடி ஐந்திலும் நின்று நடம் செய்'த லீலையைப் பாடியிருக்கிறார்கள். இந்தக் காளிய நர்த்தனம் துஷ்டவலிமையை அடக்குகிறது; ஆனால் கண்ணனின் கருணை நாக கன்னிகைகளின் விண்ணப்பத்திற்கு இணங்கக் காளியனை உயிரோடு கடலில் சென்று வாழும்படி விட்டுவிடுகிறது.

கம்சவதச் செயல் நிகழ்வதற்கு முன்பே கூனியின் கூனலை நிமிரச் செய்த கருணை குறித்துப் பெரியாழ்வார் பாடியிருப்பதையும் அறிவோம். இராமாவதாரத்தில் ஒரு கூனியின் சூழ்ச்சியால் நிகழ்ந்த கஷ்டங்களை நாம் அறிவோம். கண்ணனே கம்சனுக்குச் சந்தனப்பூச்சு முதலியன தயாரிக்கும் தொண்டில் இருந்த கூனியைக் கோணல் நிமிர்த்துப் பெண்களில் சிறந்த உருவினள் ஆக்கி அருளுவதைக் காண்கிறோம்.

ஜகன்மோகன பாலகோபாலனின் சிஷ்டபரிபாலனப் பெருஞ்செயலாகக் குறிக்கப்படுவது கண்ணன் கோவர்த்தன கிரியைக் குடையாக எடுத்ததுதான். ஆழ்வார்கள் இந்த லீலையில் ஈடுபடுவதைக் காண்கிறோம்.

ஆயர்கள் இந்திரவிழாக் கொண்டாட முயற்சி செய்கிறார்கள். வண்டிக்கணக்காகச் சோறும் காய்கறிகளும் நெய்யும் தயிரும் தயாராகின்றன. கண்ணனே இந்திர பூஜையைத் தடுத்து மலைக்கே இடச்சொல்லத் தானே உணவுவகைகளை முற்றும் உட்கொள்ளுகிறான். இந்திரன் வெகுண்டு கல்மழை பொழியக் கண்ணன் கல்லாலே கல்லைத் தடுப்பதுபோல் கோவர்த்தன கிரியைக் குடையாகப் பிடித்து எல்லா உயிர்களையும் காப்பாற்றி விடுகிறான். இந்தக் கதையை மிகவும் ரஸமாகச் சொல்லுகிறார் பெரியாழ்வார்.

தனக்கென்று ஆயர்கள் எடுத்த விழாவில் தான் பூசனை பெறாது, மலைபோல் குவித்த சோற்றையெல்லாம் கண்ணன் ஒரு பூதவடிவு கொண்டு முற்ற வாரிவளைத்து உண்பதைத் தேவராஜா கண்டு பெருங் கோபம் கொள்கிறானும். அதனால் 'கல்லொடு கார் பொழிய, வண்ணமால்வரையே குடையாக' நிற்கும் அற்புதம் நிகழ்கிறது.

கண்ணன் 'செந்தாமரைக் கைவிரல் ஐந்தினையும் கப்பாக மடுத்து, மணிநெடுந்தோள் காம்பாகக் கொடுத்து' அந்த மலையைக் குடையாக்கிக் கொள்கிறான் என்று நேரில் காண்பதுபோல் வருணிக்கிறார் பெரியாழ்வார். இந்த அற்புதத்தைக் 'கல்லெடுத்துக் கல்மாரி காத்த' திருவிளையாடல் என்பர் திருமங்கை மன்னன்.

ஜகன்மோகன பாலகோபாலனது சிஷ்டபரிபாலனச் செயல்களின் சிகரமாகக் காண்கிறது கண்ணன் மலையைக் குடையாகப் பிடித்த இந்த மாயச் செயல்.

அடுத்த கட்டுரை :

ஜகனமோகன வேணுகோபாலன் .

கங்கைகொண்டசோழபுரம்

தத்தையங் கனையார் தங்கள்மேல் வைத்த
தயாவை நூருயிரங் கூறிட்(டு)
அத்திலங் கொறுகூ றுன் கண்வைத் தவருக்(கு)
அமருல களிக்குநின் பெருமை
பித்தனென் ரொருகால் பேசுவ ரேனும்
பிழைத்தவை பொறுத்தருள் செய்யும்
கைத்தலம் அடியேன் சென்னிமேல் வைத்த
கங்கை கொண்டசோ ளேச்சரத் தானே.

—கருவூர்த்தேவர் திருவிசைப்பா.

"உலகத்திலேயே தமிழ் இனத்தவரே பெருங் கோயில்களைக் கட்டுவதில் சிறந்தவர்கள்; தஞ்சைப் பெரிய கோயில் இந்தியாவிலேயே மிக அழகிய கோயில்" என்று மேல்நாட்டு அறிஞர்கள் போற்றிப் புகழ்ந்திருக்கின்றனர்! தஞ்சாவூர்ப் பெரிய கோயிலைக் கட்டுவித்தவன் முதலாம் இராஜராஜ சோழன். அந்த கோயில் அவனுடைய பெரும் புகழுக்கு நிலைக்களனாக விளங்கி நிற்கின்றது. அப்பேரரசன் மகன் முதலாம் இராஜேந்திர சோழன். கி. பி. 1012-ல் இளவரசுப் பட்டம் கட்டப்பட்டு, அவன் தந்தை இறந்ததும் கி. பி. 1014-ல் முடிசூட்டப்பெற்று சோழநாட்டின் பேரரசனுன். தன் நாட்டை மிகவும் விரிவு படுத்தினன். தன் படைத் தலைவர்களை வடநாட்டிற்கனுப்பி அங்குள்ள மன்னர்களையெல்லாம் வென்ருன். அந்த வெற்றிக்கறிகுறியாக கங்கைகொண்ட சோழபுரம் என்ற நகரை அமைத்தான். தஞ்சையிலிருந் து தலைநகரை அவ்வூருக்கும் மாற்றிக்கொண்டான். அவனுடைய காலத்திலும், அதன் பின்னரும் சில காலம் அவ்வூரே தலைநகராக இருந்தது.

கங்கைகொண்ட சோழபுரம் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உடையார்பாளையம் பகுதியில் இருக்கிறது. இராஜேந்திரனுடைய வடநாட்டுப் படை யெழுச்சிக்குக் காரணம் அவன் கங்கைநீரைக் கொண்டுவந்து தன்நாட்டைத் தூய்மைப்படுத்த எண்ணியதே என்று திருவாலங்காடு செப்பேடு கூறுகிறது. சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயில் அமைக்க இமயத்தில் கல்லெடுத்து, கங்கையில் நீர்ப்படை செய்து, தான் வென்ற ஆரிய மன்னர் தலையில் கொண்டுவரச் செய்தது போல், இராஜேந்திரனுடைய படைத் தலைவன் வடநாட்டு மன்னர்களை வென்று அவர்கள் தலைகளில் கங்கை நீர்க்குடங்களை சுமந்து வரும்படி செய்தான். அப்படி பெரும் வெற்றியுடன் திரும்பும் படைத் தலைவனைக் கோதாவரி யாற்றங்கரைக்குப் போய்சந்தித்து மட்டற்ற மகிழ்ச்சியுடன் தன் நகரத்திற்குத் திரும்பினுன் இராஜேந்திர மன்னன் என்று சொல்லப்படுகிறது. அது முதல் அவனுக்கு கங்கைகொண்ட சோழன் என்ற சிறப்புப்பெயர் ஏற்பட்டது. அவன் அமைத்த புது நகருக்கும் கங்கைகொண்ட சோழபுரம் என்ற பெயர் வழங்கலாயிற்று. அவ்வூருக்கு கங்காபுரி என்ற பேர் உண்டென்பதை,

"கங்காபுரியின் மதிற்புறத்துக் கருதார்
சிரம்போய் மிகவீழ
இங்கே தலையில் வேல்பாய்ந்த இவை
மூழைகளாக் கொள்ளீரே"

என்று கலிங்கத்துப் பரணியிலும், "கங்காபுரி புரந்த கற்பகமும்" என்று விக்கிரமசோழன் உலாவிலும் கூறப்பெற்றிருக்கிறது. "பெரும் புனற்றுறை கங்கை மாநகர் தைத்தபின்" என்று வீரராஜேந்திர சோழனின் மெய்க்கீர்த்தியில் சொல்லப்பெறுகிறது. இன்னும் அதற்குக் கங்காபுரம் என்ற பெயர் இருந்ததை,

வண் புயலைக் கீழ்ப்படுத்து வானத் தருமலைந்து
மண்குளிரச் சாயல் வளர்க்குமாம்-தண்கவிகைக்
கொங்கார லங்கன் அனபாயன் குளிர்போழில்சூழ்
கங்காபுர மாளிகை

என்று தண்டியலங்கார மேற்கோள் செய்யுள் ஒன்ருல் அறியலாம். இந்த நகரம் தஞ்சையைக் காட்டிலும் சிறந்த அரணுடைய பெரு நகரமாக விளங்கியது.

இத்திருவுடைய நகரையமைத்த இராஜேந்திரன் அதற்கு நடுநாயகமாக இறைவ

னுக்கு ஒரு திருக்கோயிலையும் கட்டினான். தஞ்சையில் இராஜராஜன் அமைத்த கோயிலுக்கு **இராஜராஜேச்சுரம்** என்று பெயரிட்டது போல, இராஜேந்திரன் கட்டிய கோயிலுக்கு **கங்கைகொண்டசோழேச்சுரம்** என்ற பெயர்சூட்டப்பெற்றது. இந்த கோயிலில் ஆறு கோபுரங்கள் இருந்தனவாம். இப்போது இடிந்த நிலையில் ஒரு கோபுரம் இருக்கிறது. கர்ப்பக்கிரக விமானமும், அர்த்தமண்டபமுமே இப்போது முன்போலவே இருக்கின்றன. கோயிலுடைய திருமதில் நீளம் 600 அடி; அகலம் 450 அடி. கர்ப்பக்கிரகத்தின்மேலுள்ள விமானமே நம்மைப் பிரமிக்கச் செய்வது. அதன் அடிப்பாகம் 100 அடிச் சதுரமானது. அதன்மேலுள்ள விமானம் 174 அடி உயரம். ஒன்பது நிலைகளையுடையது. உச்சியில் ஒற்றைக்கல்லால் ஆன உருண்டை மேல் கலசம் இருக்கிறது. இந்த ஒற்றைக் கல்லின் குறுக்களவு 34 அடியென்பர். அடிப்பாகம் முதல் விமான உச்சிவரை முழுவதுமே கருங்கல்லால் ஆனது.

இந்த கோயிலைக் கட்டியதைப்பற்றிய சுவை மிக்க கதையொன்று நம்முடைய நாட்டில் வழங்குகின்றது. தஞ்சைக் கோயிலைக் கட்டிய சிற்பியே கங்கைகொண்ட சோழபுரக் கோயிலை அமைப்பதில் ஈடுபட்டிருந்தான். அவன் இறந்துவிடவே அவன் மகன் அப்பொறுப்பை ஏற்றுக்கொண்டான். அதற்கு முன்னாலேயே விமானத்தின் அடிப்பாகம் கட்டி முடிவடைந்திருந்தது. தந்தையைப் போலவே சிறந்த திறனுடைய சிற்பியாக மகன் இருந்தபோதிலும், தன் தந்தை மேலே எப்படி விமானத்தின் சரிவையமைக்க மனதில் திட்டமிட்டிருந்தான் என்பதை முழுவதும் உணர்ந்துகொள்ள முடியவில்லை. அச்சம் ஏற்பட்டது. திருவாரூர்க் கமலாலயத்தின் திருப்பணியைச் செய்யும் புகழ்பெற்ற சிற்பியைக் கலந்தாலோசிக்க எண்ணிப் புறப்பட்டுச்சென்றான். திருவாரூர்த் திருக்குளத்தைத் தொடங்கிய சிற்பி அக்குளத்தில் நீர் ஊற்றுப்பெருகிக் கொண்டே இருப்பதால் வேலைக்குத் தடை ஏற்படுவது கண்டு, கங்கைகொண்ட சோழபுரம் கோயிலைக் கட்டும் சிற்பியின் அறிவுரையைக் கேட்கலாம் என்று எண்ணி அவனும் புறப்பட்டான். இவ்விரு சிற்பிகளும் ஒருவரையொருவர் அறியாமல் இரவு ஒரு சத்திரத்தில் தங்க நேர்ந்தது. தங்களை யார் என்று அறிமுகப்படுத்திக்கொள்ளாமலே இருவரும் பேசத்தொடங்கினார்கள்.

“திருவாரூர்க் கமலாலயக்குளத்து மண்டப வேலை முடித்துவிட்டாரா அந்த சிற்பி” என்றான் கங்கைகொண்ட சோழபுரம் சிற்பி. “அக்குளத்தில் ஏராளமான ஊற்றுக்கண்கள் இருப்பதால் நீர் பெருகிக்கொண்டே யிருக்கிறது. அடிப்படையே இன்னும் போட்டாக வில்லை” என்று பதில் பகர்ந்தான் திருவாரூர்ச் சிற்பி. “வாளைமீன்கள் நிறைந்த ஊரில் ஊற்றுக்கண் அடைப்பதா ஒரு பிரமாதம்” என்றான் சோழபுரச் சிற்பி. வாளைமீன்கள் நீர் ஊற்றுக்கண்கள் இருந்தால் அவைகளின் தலைகளை வைத்து அடைத்துவிடும் இயல்புடையவை. அம் மீன்களை விட்டால் திருக்குளத்தின் ஊற்றுக்கள் அடைபட்டுவிடும், மேலே வேலையைச் செய்யலாம் என்று உணர்ந்துகொண்ட ஆரூர்ச் சிற்பி, “உங்களூர்ப் பெருங்கோயில் வேலை முடிந்துவிட்டதா?” என்று வினவினான். “அடிப்பீடம் அமைந்த அளவுக்கு உச்சியை எங்கே கொண்டுபோய் விடுவது என்று தெரியாமல் அந்த சிற்பி திகைத்திருப்பதால் விமானம் எழும்பவில்லை” என்றான் கங்கைமாநகர்ச் சிற்பி. “இதுவா பெரிய காரியம்? பஞ்சு பெருத்த ஊரில் கொஞ்சம் கரைத்துவிட்டால் போகிறது” என்று எளிதாகச் சொன்னான் திருவாரூர்ச் சிற்பி. பஞ்சு என்பது கருங்கற்களைப் புரட்டும்போது அவற்றின் கீழே பயன்படுத்தும் மரக்கட்டைக்குப் பெயர். சிலர் பஞ்சு மூட்டை என்று கொள்வது பொருத்தமானதாகத் தெரியவில்லை. மரக்கட்டைகளை அடுக்கிக் கற்களை மேலே கொண்டுபோகலாம். சாரம் கட்டவேண்டிய அவசியமில்லை. இந்த யோசனை சோழபுரச் சிற்பிக்கு மகிழ்ச்சியைத் தந்தது. ஒருவரையொருவர் இன்னாரெனத் தெரிவித்துக்கொண்டு தங்கள் ஊருக்குத் திரும்பினர்.

இந்த கதைக்கு ஆதாரமாக கங்கை கொண்ட சோழபுரத்திலிருந்து ஒருகல் தொலைவிலுள்ள சாரமேடு அல்லது பரணம் என்ற ஊரிலிருந்து கட்டைகளை அடுக்கி விமானத்திற்குக் கற்களை ஏற்றியதாகச் சொல்லப்படுகிறது.

விமானத்தின் ஒன்பது நிலைகளின் நான்கு மூலைகளிலும் நந்திகள் வைக்கப்பெற்றிருக்

கின்றன. சிகரமாயுள்ள பிரமரந்திரக் கல்லை எப்படிக் கொண்டுபோயினர் என்பதை நினைக்சப் பெரும் திகைப்பையே உண்டுபண்ணுகிறது. தற்காலப் பொறியியல் வல்லுநரால் புதிய பொறிகளின் துணைகொண்டும் இவ்வாறு செய்ய இயலுமோ? இந்த பெருஞ் சாதனையைச் செய்த பெருமன்னனின் ஊக்கமும், சிற்பியின் திறனும் நம்மைப் பெருமிதமடையச் செய்கின்றன.

கோயில் விமானத்திற்கேற்ப அங்கே எழுந்தருளச் செய்யப்பெற்ற சிவலிங்கமும் உருவில் மிகவும் பெரியது. இலிங்கம் 13 முழச் சுற்றுடையது; ஆவுடையார் 30 முழச் சுற்றுடையது; இலிங்கத்தின் உயரம் 13 அடி. இதனாலேயே "மூன்றுமுழமும் ஒரு சுற்று, முப்பது முழமும் ஒருசுற்று" என்ற பழமொழி நம் நாட்டிடை எழுந்தது. ஈசுவரன் திருநாமம் **கங்கைகொண்ட சோழீசர்** அல்லது பெரியநாயகர்; அம்பிகையின் திருப்பெயர் பெரியநாயகி என்பது.

உட்கோயில் நீளம் 340 அடி; அகலம் 100 அடி. மகாமண்டபம் 175 அடி நீளம்; 95 அடி அகலம். அதில் 8 பத்திகளில் 140 தூண்கள் இருக்கின்றன. நடுத்தூண்கள் 18 அடி உயரமும், இருபக்கத் தூண்கள் 16 அடி உயரமும் உள்ளன.

இக் கோயிலில் பார்க்கவேண்டிய அற்புதச் சிற்பங்கள், சண்டேசானுக்கிரகமூர்த்தி, பிட்சாடனமூர்த்தி, தடாதகைத் திருமணம், பார்த்தனும் பரமனும், மார்க்கண்டன் வரலாறு, சம்பந்தர், நவக்கிரகம், இலிங்கோற்பவர், சபாபதி, வாயிற்காவலர் முதலியவை. 12 அடி உயரம் வாயில்காவலர்கள்; 12 உருவங்கள் இருக்கின்றன.

இக்கோயிலில் பார்க்கவேண்டியது சிங்கமுகக் கிணறு. இது 27 அடி குறுக்களவு உள்ளது. சுமார் 50 படிகள் இருக்கின்றன. கங்கையிலிருந்து கொண்டுவந்த தண்ணீரை இக்கிணற்றில் ஊற்றியதாகவும் கூறுவர். இங்குள்ள நந்தி செங்கல், சுண்ணும்பினல் கட்டப்பெற்றது; தலைவரை 20 அடி உயரமுடையது.

கங்கைகொண்ட சோழேச்சுரத்து இறைவன்மீது **கருவூர்த்தேவர்** என்பவர் பதினொரு பாடல்களையுடைய ஒரு பதிகம் ஓதியுள்ளார் அது திருவிசைப்பா என்ற பெயருடன் ஒன்பதாம் திருமுறையில் சேர்க்கப் பெற்றிருக்கிறது.

இவ்வூரில் அரசனது அரண்மனைகள் இருந்த இடம் **மாளிகைமேடு** என்ற பெயரால் வழங்குகிறது. இங்கு சோழகேரளன், முடிகொண்டசோழன் என்ற அரண்மனைகள் இருந்ததாகக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. சாரமேடு, சுண்ணும்புக்குழி, மெய்காவல் தெரு, இடைக்கட்டு, பாகல்மேடு (காய்கறித் தோட்டம்), உட்கோட்டை, ஆயுதகளவன், கழனிக்குளம், தொட்டிக்குளம், யுத்தபள்ளம், குயவன்பேட்டை, செங்கல்மேடு என்ற பெயர்களுள்ள இடங்கள் இவ்வூரைச் சுற்றியுள்ளன. இவ்வளவு பெருமையுடன் 900 ஆண்டுகள் முன் திகழ்ந்த பெருநகர் இப்போது ஒரு சிற்றூராகக் காட்சியளிக்கிறது. சோழமன்னர்கள் தாங்கள் வாழ்வதற்காகக் கட்டிய மாளிகைகள் அழிந்துவிட்டன. ஆனால் அவர்கள் தெய்வபக்தியுடன் கட்டியகோயில்கள் நின்று நிலவுகின்றன. கங்கைகொண்ட சோழபுரம் கோயில் விமானம் அப்படியே நல்ல நிலைமையில் இருந்தபோதிலும் சுற்றிலுமுள்ள மண்டபங்கள் மதில்கள் முதலியவை பாழடைந்து கிடக்கின்றன. இக்கோயிலிலிருந்து எடுத்துச் சென்ற கற்களை கொள்ளிட ஆற்றுக்கு அணை கட்டப் பயன்படுத்தி யிருக்கின்றனர்.

இப்பழங் கோயிலின் பழுதுபட்ட பாகங்களைப் புதுப்பிப்பதற்கு சென்னை அரசாங்க அறநிலையத்துறையார் 1958-59ல் ரூ. 15,000 வழங்கியிருக்கின்றனர். காட்டுமன்னார் கோயில் சின்னபண்ணை திரு. இராமலிங்கம் பிள்ளையவர்களைத் தலைவராகக்கொண்ட திருப்பணிக் குழுவொன்று அமைக்கப்பட்டிருக்கிறது. தஞ்சை, திருச்சிராப்பள்ளி மாவட்டம், சிதம்பரம் முதலிய பகுதிகளிலுள்ள பிரமுகர்களும் இக்குழுவில் உள்ளனர். தருமபுரம், திருப்பனந்தாள் ஆதீனகர்த்தர்களும் இதில் தனி அக்கரைகொண்டிருக்கின்றனர். இந்திய அரசாங்கப் புதைபொருள் ஆராய்ச்சித்துறை அதிகாரிகளைக் கலந்துகொண்டு திருப்பணி வேலைகள் துவங்கப்பெறும். இந்து சமயத்தைச் சார்ந்த எல்லா மக்களும் இதற்குத் தங்களால் இயன்ற நிதியுதவி செய்வ

துடன் மற்றெல்லா வகைகளிலும் ஒத்துழைக் குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இப் பழம் பெருமை வாய்ந்த கோயிலைப் புதுப் பிக்க எவ்வகையான உதவிகளும் ஏற்றுக் கொள்ளப்படும். உதவித் தொகைகள் அனுப்புவோர் "நிர்வாக அதிகாரி, கங்கை கொண்ட சோழேசுவரர் கோயில், கங்கை கொண்ட சோழபுரம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்" என்ற முகவரிக்கு அனுப்பலாம்.

[குறிப்பு :—T. V. சதாசிவப் பண்டாரத் தாரின் பிற்காலச் சோழர் சரித்திரம்", டாக் டர் மா. இராஜமாணிக்கனாரின் "சோழர் வர லாறு", K. A. நீலகண்ட சாஸ்திரியாரின் "சோழர்கள்", P. V. ஜகதீசய்யரின் "தென் னிந்திய கோயில்கள்" முதலிய நூல்கள், 'பாணன்' என்பவர் 1944 குமரி மலரில் எழு திய ஒரு கட்டுரை முதலியவற்றை ஆதார மாகக்கொண்டு மேலேயுள்ள கட்டுரை எழு தப்பட்டது.]

செய்திகள்

குமாரவயலூர் : முருகப்பெருமானுக்குப் புது வெள்ளி மயில்வாகன அமைப்பு விழா 7-6-60ல் திரு. கிருபானந்தவாரியார் அவர்கள் தலைமையில் நடைபெற் றது. தஞ்சை அறநிலையத்துறை துணை ஆணையர் திரு. கே. சோமசுந்தர தேசிகர் எம்.ஏ., அவர்களும் கலந்துகொண்டார்கள். சமயச் சொற்பொழிவுகளும் இன்னிசை அரங்குகளும் நடைபெற்றன. திரு. டி. பி. பாலசுப்பிரமணியப் பிள்ளை, கண்ட்ராக்டர், மன்னார்புறம் அவர்கள் ரூ. 1500 மதிப்புள்ள வெள்ளிக் கவசங்களை நன்கொடையாக உற்சவமூர்த்தி முத்துக்குமாரசுவாமிக்கு கொடுத்தார்கள்.

திருப்புகலூர் : அக்கினீசுவரர் கோயிலில் பிரம்மோற்சவம் 30-5-60 முதல் 12-6-60 வரை நடைபெற்றது. இன்னிசை அரங்குகளும் நடைபெற்றன.

திருஇடும்பாவனம் : சற்குணநாதசுவாமி கோயிலில் வைகாசி விசாகப் பெருவிழா 29-5-60 வரை நடைபெற்றது.

தேவூர் : தேவபுரீசுவரசுவாமி கோயிலில் வைகாசி விசாகத் திருவிழா 6-6-60 முதல் 8-6-60 வரை நடைபெற்றது. இன்னிசை அரங்கும் நடைபெற்றது.

திருமுருகன்பூண்டி : சண்முகப்பெருமாள் கோயிலில் 16-ஆவது ஆண்டு மகா விசாகப்பெருந்திருவிழா 7-6-60 அன்று நடைபெற்றது.

ஆச்சாள்புரம் : சிவலோகத் தியாகராஜசுவாமி கோயிலில் திருஞான சம்பந்த சுவாமிகள் திருமண விழா 9-6-60ல் நடைபெற்றது.

திருவிடைவாசல் : புண்ணியகோடிநாதசுவாமி கோயிலில் மகா கும்பாபி ஷேகம் 12-6-60ல் நடைபெற்றது.

திருக்கண்ணமங்கை : பக்தவத்சலப்பெருமாள் கோயில் திருப்பணியை சென்னை அறநிலையத்துறை ஆணையர் திரு. அ. உத்தண்டராமன், ஐ.ஏ.எஸ். அவர் கள் 12-6-60ல் துவக்கி வைத்தார்கள்.

திருநெல்வேலி : நெல்லையப்பர் கோயிலில் ஆனிப்பெருந்திருவிழா 28-6-60 முதல் 6-7-60 வரை நடைபெறும். சமயச் சொற்பொழிவுகளும் இன்னிசை அரங்கும் நடைபெறும்.

மலைநாட்டுத்திருப்பதியநுபவம்

[மகாவித்துவான் திரு. P. B. அண்ணங்கராச்சார்ய சுவாமிகள்

நம்மாழ்வார் திருவண்வண்டூர்த் திருப்பதியில் வைகுமிராமனுக்குத் தம் குறைகளைத் தெரிவிக்குமாறு புள்ளினங்களைத் தூதுவிடும் பதிகம் 'வைகல் பூங்கழிவாய்' என்பது. இது, திருவாய்மொழி ஆறும்பத்தின் முதற்பதிகமென்று தெரிவித்து முற்பாட்டை முன்னிதழில் விவரித்தோம். இனி இரண்டாம்பாட்டு முதலாக விவரிக்கிறோம்.

2. காதல் மென்பெடையோடு

எம்பெருமானது திருநாமங்களில் 'ஆர்த்திஹரன்' என்பதுமொன்று. தன்னைக்காண வேணுமென்னு மார்த்தியுடையாருடைய ஆர்த்தியை அகற்றி அவர்களுக்குத் தன்னை யநுபவிக்கக் கொடுத்து ரக்ஷணம் செய்வதிலே தீக்ஷைகொண்டிருக்கிற எம்பெருமான் திருவண்வண்டூரிலே வேதவொலியையும் வேள்விபொலியையும் காதாரக் கேட்டுக்கொண்டு தன்னுடைய ஆர்த்தரக்ஷண தீக்ஷையையும் மறந்து அங்கே தாமதித்துக்கிடக்கிறான். அவனுடைய பாதார விந்தங்களிலே சென்று அஞ்ஜலி பண்ணி நின்று என் விஷயமாகச் சில வார்த்தைகள் சொல்ல வேணுமென்று நாரைப் பறவையை இரக்கிறாள்.

இப்பாட்டில் கருநாராய்! என்று விளியுள்ளது. நாரைக்கு வெண்மை நிறம் பிரசித்தமாயிருக்க, கருமையையிட்டுக் கூறியிருப்பது எங்ஙனம்? எனின்; உலகில் வியாதிக்குறியாக உடலிலே நிற வேறுபாடு உண்டானால் 'உடம்பு வெளுத்துப்போயிற்று' என்று சொல்வதுண்டு; அப்படிப்பட்ட வெண்மையின்றிக்கே மேனி புகர்பெற்றிருக்கிறபடியைச் சொல்லுகிறதத்தனை. பிரிவுக்கு ப்ரஸக்தியில்லாமையாலே நிற வேறுபாடின்றியே தன்னிறம் பெற்றிருக்கிறபடி.

"காதல் மென்பெடையோடுடன்மேயும்" என்ற அடைமொழியினால், உள்ளுறைபொருளில் இல்லறத்திலிருந்து கொண்டும் எம்பெருமானை வழிபாடு செய்வது வழுவற்றதென்கிற நூற் கொள்கை தெரிவிக்கப்பட்டதாகும். பெரியநம்பி கூரத்தாழ்வான் அனந்தாழ்வான் முதலான ஆசிரியர்களை நினைப்பது. அன்றியே, "சிஷ்யனைக் கண்டால் அபிமத விஷயத்தைக் கண்டாற்போலேயும்" என்கிற ஸ்ரீவசன பூஷண திவ்ய ஸூக்தியின்படி சீடர்களையே காதல் மென்பெடையாகச் சொல்லிற்றாகக் கொண்டு, சிஷ்யர்களோடு கூடி பகவத்குணானுபவம் செய்கிற ஆசாரியர்களைக் கூறினதாகக்கொள்ளலாம்.

["வேதவேள்வியொலிமுழங்கும் தண்திருவண்வண்டூர்"] வைதிக கரும கலாபங்கள் நடைபெறுமிடங்களில் எம்பெருமான் அணுகியிருத்தல் இயற்கை. இராமபிரான் காட்டுக்கெழுந்தருளிய பின் அயோத்தி மக்கள் புலம்புகையில்,

> "தாந யஜ்ஞ விவாஹேஷு
> ஸமாஜேஷு மஹத்ஸு ச,
> ந த்ரக்ஷ்யாம: புநர் ஜாது
> தார்மிகம் ராமமந்தரா"

என்கிறார்கள். இதனால், வைதிகச் சடங்குகள் நடக்குமிடங்களில் அனுட்டான லோபங்கள் நேராதபடி கவனிப்பதற்காக ஸ்ரீ ராமபிரான் அணுகியிருப்பனென்பது காட்டப்பட்டது. அவ்வண்ணமாகவே திருவண்வண்டூரிலும் "மாறில் போரரக்கன் மதிள் நீறெழச் செற்றுகந்த ஏறு சேவகனார்" என்று இப்பதிகத்தில் பாடப்பெற்ற ஸ்ரீ ராமமூர்த்தி அங்குத் தாமதித்திருக்கத் தட்டில்லையென்க.

"திருவண்வண்டூர் நாதன்" என்றவாறே அறப்பெரியான் பக்கலிலே நாங்கள் சென்று கிட்டப்போமோ? என்று பறவைகள் கூசினவாகக்கொண்டு அவனுடைய நீர்மைக் குணத்தை யெடுத்துக் காட்டுகிறாள் "ஞாலமெல்லாமுண்ட நம்பெருமான்" என்று. ஆபத்து விளைவதற்கு முந்தியே ரக்ஷிப்பதை இயல்வாகவுடையனாகையாலே அவனருகிற்

செல்லக் கூசவேண்டாவென்று காட்டின வாறு.

[3. திறங்களாகி யெங்குஞ்செய்களூ டுழல் புள்ளினங்காள்!]

வயல்களிலே பறவைகள் கூட்டங் கூட்டமாகக் குழுமிக்கிடப்பது இயல்பு. தமக்குரிய இரைதேடுவதற்காக அவை அங்ஙனமிருப்பது. அது கண்ட தலைவி, அவை தன் காரியஞ் செய்ய ஆலோசித்துக்கொண்டு கிடப்பதாகக் கருதி அவற்றை விளித்து, 'சிறந்த செல்வம் மல்கு திருவண்வண்டூருறையும் கறங்கு சக்கரக்கைக் கனிவாய்ப் பெருமானைக் கண்டு இறங்கித் தொழுது அடியேனிடர் பணியீர்' என்று இரக்கிறாள். திருவண்வண்டூர்க்குச் 'சிறந்த செல்வம்மல்கு' என்று அடைமொழி கொடுக்கப்பட்டுள்ளது. திவ்விய தேசங்களுக்குச் செல்வச் சிறப்பாவது, அடியவர் வந்து பணியவேண்டுதற்குறுப்பான திருக்குணங்கள் நிரம்பியிருத்தலாம். ஸௌலப்பியம் ஸௌசீல்யம் க்ஷமை ஞானம் சக்தி முதலிய திருக்குணங்களே அவை. இத்தகைய திருக்குணங்களை யநுபவித்துக் கொண்டிருக்கும் நல்லடியார்களை விட்டுப் பிரியமாட்டாதே அங்கே கால் தாழ்ந்திருக்கும்படியைக் கூறிய வாறு.

"தம்மையே நாளும் வணங்கித் தொழுவார்க்குத் தம்மையே யொக்க அருள் செய்வர்" என்று திருமங்கையாழ்வார் பணித்தபடி எம்பெருமானுக்கும் அவனடியார்களுக்கும் வாசி காண்பரிதாதலால் அவனை நாங்கள் கண்டு பிடிக்குமடையாளம் ஏதென்ன, "கறங்கு சக்கரக்கைக் கனிவாய்ப் பெருமானைக்கண்டு" என்று அடையாளம் கூறினபடி. "எப்போதும் கைகழலா நேமியான் நம்மேல் வினை கடிவான்" என்றபடியே விரோதிகளைத் துணிக்கவேண்டின விரைவாலே சுழன்று வாரா நின்றுள்ள திருவாழியைத் திருக்கையிலேயுடையனும், புன்முறுவல் தோன்ற நின்ற அதரத்தையுடையனுமான பெருமானைக் காணுங்கோ ளென்றாளாயிற்று......(3)

[4. இடரில் போகம் மூழ்கி யிணைந் தாடும் மடவன்னங்காள்!]

கணப்பொழுதும் பிரியாமே இடைவீடின்றிக் கலந்துவாழ்கின்ற அன்னப் பறவைகளை நோக்கி, திருவண்வண்டூரிலே நிரந்தரமாக நடைபெறும் வேதகோஷத்தைத் திருச்செவிசார்த்திக் கொண்டு அங்கே கால் தாழ்ந்து வாழ்கின்ற கடல்வண்ணனை பெருமானைக் கண்டு என்பேரைச் சொல்லாதே ஒருத்தி உடலம்நைந்து உருகுகின்றாளென்னுங்கோ ளென்கிறாள். அன்னப் பறவையாக மறைத்துச் சொல்லப்படுகின்ற ஆசிரியர்கள் இடரில் போகம் மூழ்கி இணைந்தாடுகையாவது என்னென்னில், ஆண்டாள் தம் திருத்தகப்பனாரகிய பெரியாழ்வாரைக் குறித்துச் சொல்லுகையில் "போகத்தில் வழுவாத புதுவையர்கோன் கோதை" என்றாற் போலே ஒருநொடிப் பொழுதும் விச்சேதமில்லாதபடி பகவத் குணாநுபவத்திலே ஆழ்ந்திருக்கை. அன்னவர்களே எம்பெருமானிடத்துப் புருஷகாரக்ருத்யம் செய்ய உரியவர்களாதலால் இவ்வடைமொழி கொடுக்கப்பட்டது. "இணைந்தாடும்" என்ற அடைமொழியில் ஒரு விசேஷப் பொருள் தொனிக்கும். (அதாவது) பிறமதங்களில் நூல்களை யெழுதுமவர்கள்ஒன்றோடொன்று வேறுபடாத அர்த்தங்களையே யெழுத வேணுமென்று நிர்ப்பந்தங் கொண்டிலர்; ஆழ்வார்களோ வென்னில் "பேசிற்றே பேசும் ஏக கண்டர்" என்று ஆசாரிய ஹ்ருதயத்தில் கூறியபடி, மனம்போனபடியே அர்த்தங்களைப் பேசுகையன்றியே இணைந்தாடுவர்களென்க.

'திருவண்வண்டூரிருக்குமிடம் நாங்கள் அறியோமே; அவ்வூர்க்கு வழி தெரியாதே' என்று பறவைகட்கு நினைவாகக் கொண்டு 'விடலில் வேதவொலி முழங்குந் தண் திருவண்வண்டூர்' என்கிறாள். நீங்கள் போகப் புறப்பட்டவாறே வேதகோஷமே உங்களுக்கு வழிகாட்டிவிடு மென்றவாறு. விடலில் வேதவொலி யென்கையாலே, ஒருகால் ஓதி மற்றொருகால் ஓதாதிருப்பர்களல்லர் என்பது பெறப்படும்.

கடல மேனிப்பிரான் கண்ணனைக் கண்டு— மேனி யென்னுஞ்சொல் வடிவுக்கும் தன்மைக்கும் வாசகம். கடல்போன்ற வடிவு படைத்தவன் என்பது போலவே கடல்போன்ற தன்மை வாய்ந்தவன் என்பதும் பொருளாம். அந்தத் தன்மைகளைச் சிறிது அநுபவிப்போமிங்கு.

(i) எவ்வளவு காரிய நிர்ப்பந்தங்களிருந்தாலும் பெருஞ் செல்வர்கள் சிறிது

மூழ்கியிருக்கும் மஹான்களே ஆழமறிவர்கள் "பாலிற் கிடந்ததுவும் பண்டரங்க மேய துவும், ஆலில் துயின்றதுவும் ஆரறிவார்? ஞாலத்தொரு பொருளை வானவர்தம் மெய்ப் பொருளை அப்பிலருபொருளை யானறிந்த வாறு" என்று துணிந்து அருளிச் செய்தார் திருமழிசைப்பிரான்.

(xi) கடல் விஷத்தையும் தந்தது, அமுதத்தையு மளித்தது. எம்பெருமானும் "பயக்ருத் பயநாசந:" என்கிறபடியே பயத்தை யுண்டாக்குவதும் செய்வன், போக்குவதும் செய்வன்.

(xii) கடல் அஞ்சினர்க்குப் புகலிடமா யிருக்கும். இந்திரனிடத்து அஞ்சின மைநாக கிரி முதலியவற்றிற்குப் புகலிடமாயிருந்ததே. எம்பெருமானுக்கு இத்தன்மை இயற்கையா யிருக்கும். "அஞ்சினேற்கு அஞ்சேலென்று காவிபோல் வண்ணர்வந்து என்கணுள்ளே தோன்றினரே" என்றார் திருமங்கையாழ்வார். இங்ஙனே மற்றும் பலவகைகளுங் காண்க.

(தொடரும்)



திருநாங்கூர்—திருக்காட்டுப்பள்ளி கோலவல்லி இராமர் கோயில் கருடாழ்வார்

ரிட்மனு எண். 434—1957-ல்

சென்னை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு

(பக்கம் 467—எம். எல். ஜே. தேதி 2—6—60)

பொருள் : 1951-ம் ஆண்டு இந்து அற நிலையப் பாதுகாப்புச் சட்டம் பிரிவு 35(2)- கோயிலுக்குப் பூசை செய்வதற்காக இனமாகக் கொடுக்கப்பட்ட நிலங்களைத் திரும்பக் கைக்கொள்ளுதல் - திரும்பக் கொடுத்தல் - கலெக்டரின் அதிகாரங்கள் - கோயிலுக்குச் சம்பந்தமில்லாத எதிரான சுவாதீனத்தால் தவிர்க்க முடியாத உரிமை செய்து கொண்டவரின் சுவாதீனத்தில் இருக்கும் சொத்து-விளைவு - கட்டுப்படுத்துதல்.

இந்நாட்டின் முன்னாள் மன்னர்களால் கோயில்களில் பூசை செய்வதற்காக இனமாக அளிக்கப்பட்ட இனம் நிலங்களைத் திரும்பக் கைக்கொள்ளவும் திரும்ப அளித்தலுமான இந்து அறநிலையப் பாதுகாப்புச் சட்டம் பிரிவு 35 (2)ல் கலெக்டருக்கு கொடுக்கப்பட்ட அதிகாரத்தை, கலெக்டர் நடவடிக்கை எடுக்கும் நாளில், கோயிலுக்கும், கோயில் பணிகளுக்கும் சம்பந்தமில்லாதவர்களுடைய எதிரான சுவாதீனத்தால் (Adverse Possession) தவிர்க்க முடியாத உரிமையைக் கொண்டு 1934-ம் ஆண்டு சென்னை XI-வது சட்டத்தினல் 1927-ம் ஆண்டு சென்னை சட்டம் IX-ல் (ஒன்பதில்) 44-பி பிரிவு சேர்க்கப்பட்டு அமுலுக்குவரும் முன், அறுபது ஆண்டுகள் அப்படிப்பட்ட சுவாதீனத்தில் உள்ள நிலங்கள் சம்பந்தப்பட்டவரை, அமுல் செய்ய இயலாதெனக்கொண்டு பொள்ளாச்சி சப்-கலெக்டர் அவர்கள், இந்து அற நிலையப் பாதுகாப்புச் சட்டத்தின் 35 (2) பிரிவின்படி கலெக்டர் என்ற முறையில் பிறப்பித்த ஆணையை மாவட்ட கலெக்டர் அவர்கள் தள்ளுபடி செய்ததின்பேரில், தர்மகர்த்தாவால், இந்திய அரசியல் நிர்ணயச் சட்டத்தின் 226-வது பிரிவின் கீழ் சென்னை உயர் நீதி மன்றத்தில் மனு கொடுக்கப்பட்டு, அந்நீதிமன்றத்தின் தீர்ப்பு:

தற்போதைய திருப்பூர் டவுன் சர்வே எண்கள் 902, 899க்கு ஏற்புடைய திருப்பூர் கிராமத்தில் சர்வே எண்கள் 163, 165ல் உள்ள நிலங்கள், ஸ்ரீரங்கப்பட்டினத்து ஐதர் நவாப் அவர்களால் திருப்பூர் சுவாமி கோயிலுக்குப் பூசை செய்வதற்காக இனமாகக் கொடுக்கப்பட்டன. இனம் கமிஷனர் அவர்கள் அக்கோயில் உளதாம் தன்மையில் இருந்ததென்றும் ஆலயப்பணிகள் செய்யப்பட்டு வந்தன என்றும், அப்போது அக்கோயில் அர்ச்சகர் ஐந்து வயதான குமாரசாமி ஐயன் என்றொருவர் இருந்தார் என்றும், குப்பையன் என்ற ஒரு வேலையாளைக் கொண்டு பணிகள் செய்து வந்தார் என்றும் அறிந்து, அவ் அர்ச்சகர் பணிசெய்து வருங் காலம்வரை அவ்வினமை அவருக்கு உறுதி செய்தார்கள். 1863 டிசம்பர் திங்களில் 1052-எண்கொண்ட உரிமைப் பத்திரமும் அவ்வர்ச்சகர் பெயருக்கு வழங்கப்பட்டது.

1956-ம் ஆண்டு ஆலய அறங்காவலர் அவர்களின் மனுவின்பேரில் பொள்ளாச்சி, சப்-கலெக்டர் அவர்கள் 1951—ஆம் ஆண்டு சென்னைச் சட்டம் பத்தொன்பதில் XIX 35 (2) பிரிவின்கீழ் விசாரணைக்குப்பின் குமாரசாமி என்பவரின் வாரிசுகள் கோயில் பூசை பணிகள் செய்யவில்லை என்றும், அல்லது பூசை செய்வதற்காக ஏற்பாடுகள் செய்யவில்லை என்றும், மற்றவர்களால் பூசை நடத்தப்படுகிறதென்றும், இனம் நிலங்கள் பராதீனம் செய்யப்பட்டிருக்கின்றன என்றும், பராதீனம் செய்தவர்களின் சுவாதீனத்தில் நிலங்கள் இருக்கின்றன என்றும் அறிந்து பராதீனம் செய்யப்பட்ட இனம் நிலங்கள் திரும்பக் கைப்பற்றப்பட்டு ஸ்ரீ விசுவேசுவரசுவாமி கோயிலுக்குக் கட்டளையாகத் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும் என்று ஆணை பிறப்பித்தார்கள்.

இனம் நிலங்களை பராதீனத்தினல் சுவாதீனத்தில் வைத்துள்ளவர்கள் மாவட்ட கலெக்டருக்கு மேல் முறையீடு (அப்பீல்) செய்தார்கள். மாவட்ட கலெக்டர் அவர்கள் இந்து அறநிலையச் சட்டம் அமுலுக்கு வருவதற்கு 60 (அறுபது) ஆண்டுகளுக்கு முன்னமே மேற்படி நிலங்கள் அர்ச்சகத் தொழிலுக்குச் சம்பந்தமில்லாதவர்களிடம்

சுவாதீனத்தில் இருந்தன என்ற காரணத்தால் கலெக்டர் அவர்களின் உத்தரவை தள்ளுபடி செய்தார்கள். அதை எதிர்த்து அறங்காவலர் உயர்நீதி மன்றத்திற்கு ரிட் மனு செய்தார்கள். (டபிள்யூ. பி. 434/1957) உயர்நீதிமன்றத்தில் பாரா ஒன்றில் கூறிய படி அங்கு குறிப்பிடப்பட்டுள்ள சட்டங்கள் அமுலுக்கு வருவதற்கு 60 (அறுபது) ஆண்டுகளுக்குமுன் ஆலயப்பணிகளுக்கு சம்பந்தமில்லாதவர்களால் இனம் நிலங்களை பராதீனம் செய்யப்பட்டு எதிரான சுவாதீனப்படுத்தி அதற்கான உரிமைப்பத்திரமும் பெற்றிருப்பார்களானல், சென்னை இந்து அறநிலையப்பாதுகாப்புச் சட்டத்தின் 35(2) பிரிவின்படி கலெக்டர் தன் அதிகாரத்தை அமுல் செய்ய முடியாதென்றும், மாவட்ட கலெக்டர் கூறியபடி பிரதிவாதிகளின் எதிரான சுவாதீனம் 60 (அறுபது) ஆண்டுகள் இல்லையென்றும், ஆகையினல் உரிமைப்பத்திரம் அளிக்கப் போதுமான கால இடைவெளியில்லை என்றும்கூறி, ரிக்கார்டுகளை நோக்க, மாவட்டகலெக்டருடைய ஆணை சட்டப்படி தவருனது என்றும் கூறி அவருடைய ஆணை தள்ளுபடி செய்யப்பட்டது.

செய்திகள்

மன்னார்குடி : இராஜகோபாலசுவாமி கோயிலில் தெப்போற்சவம் 30-6-60 முதல் 9-7-60 வரை நடைபெறும்.

சிதம்பரம் : அனந்தீசுவரர் கோயிலில் விசாக மகோற்சவம் 7-6-60ல் நடைபெற்றது. சென்னை அறநிலையத்துறைத் துணை ஆணையர் திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார் பி.ஏ., பி.எல். அவர்கள் தலைமையில் சமயச்சொற்பொழிவுகளும் நடைபெற்றன, கடலூர் அறநிலையத்துறை உதவி ஆணையர் திரு, ஆர். ஏ. வரதராஜன், பி.ஏ., அவர்களும் கலந்துகொண்டார்கள்.

ஆளுடையார்கோயில் : ஆத்மநாதப்பெருமான்சுவாமி கோயிலில் மாணிக்கவாசக சுவாமிகளுக்கு ஆனித்திருமஞ்சன விழா 20-6-60 ல் தொடங்கி 30-6-60 வரை நடைபெற்றது.

நாகப்பட்டினம் : சௌந்தர்யராஜப்பெருமாள் கோயிலில் சௌந்தர்யவல்லித் தாயார்க்குப் பிரம்மோற்சவம் 22-6-60ல் தொடங்கி 3-7-60 வரை நடைபெறும்.

கோடாலிகருப்பூர் : இராமநாராயணப்பெருமாள் கோயிலில் ஆலயத் திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன, திருப்பணிகள் பூர்த்தியானதும் 28-8-60ல் திருக்குடமுழுக்கு விழா நடத்தவேண்டியிருப்பதால், நிதி உதவி அளிப்பவர்கள் மானேஜிங் டிரஸ்டி, இராமநாராயணப்பெருமாள் கோயில், கோடாலிகருப்பூர் (போஸ்ட்) திருச்சிராப்பள்ளி மாவட்டம் என்ற விலாசத்திற்கு அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மதுராந்தகம் : கோதண்டராமசுவாமி கோயில் பிரமோற்சவம் 1-7-60 முதல் 14-7-60 வரை நடைபெறும்,

திருக்கழுக்குன்றத்தில் மாணிக்கவாசகர் திருநாளாகிய ஆனி மகம் 29-6-60ல் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் நிறுவியுள்ள பேரறக்கட்டளை நிதியிலிருந்து சிவனடியார்கட்கும் ஏழைகட்கும் நண்பகலில் திருவமுது செய்விக்கப்பட்டது.

கீரனூர் சிவலோகநாதசுவாமி கோயிலில் மகாகும்பாபிஷேகம் 6—7—60 நடைபெறும்.

திருஆப்பனூர்

பிணியும் பிறப்பறுப்பான்
பெருமான் பெருங்காட்டில்
துணியின் உடைதாழச்
சுடரேந்தி யாடுவான்
அணியும் புனலானை
அணியாப்ப னூரானைப்
பணியும் மனமுடையார்
வினைபற் றறுப்பாரே

திருஞானசம்பந்தர்.

அங்கயற்கண்ணி தன்னொடும் அமர்ந்த ஆலவாய் அண்ணலை வழிபட மதுரைக்குச் செல்லும் பெரும்பாலோருக்கு அந்த நகரத்திலேயே பாடல்பெற்ற மற்றொரு சிவத்தலம் இருப்பது தெரியாது. அது திருஆப்பனூர் என்னும் சிவப்பதி. திருஆப்புடையார் கோயில் என்று வழங்குகிறது. பாண்டிநாட்டுப் பாடல் பெற்ற பதினான்கு தலங்களில் அது ஒன்று. மதுரை இருப்புப் பாதை நிலையத்திலிருந்து ஒரு கல் தொலைவிலுள்ளது. வைகையாற்றின் வடகரையில் அமைந்திருக்கிறது. 'அந்தண்புனல் வைகை அணிஆப்பனூர்'' என்பர் சம்பந்தமூர்த்திகள்.

திருஆப்பனூர்க்கோயில் அழகிய சிறுகோயில். ஒரே பிரகாரம்தான் இருக்கிறது. கிழக்கு நோக்கியுள்ளது. கோயிலில் எல்லா மூர்த்திகளும் எழுந்தருளியுள்ளனர். நடராஜர், சிவகாமியம்மை இவர்களின் திருவுருவங்கள் சிலையிலும் செம்பிலும் செய்யப்பட்டவை மிக அழகானவை: அற்புத சிற்ப வேலைப்பாடுடன் அமைந்தவை.

திருஆப்புடையார், ஆப்பேசர், இடபபுரேசர் என்பன இத்தலத்து இறைவனுடைய திருநாமங்கள். தேவியின் திருப்பெயர் குரவம் கமழ் குழலம்மை என்பது. இப்பெயரைச் சம்பந்தப்பெருமான் தமது பதிகத்தின் ஒருபாடலில் குறிக்கிறார். ஆற்று வெள்ளத்தால் தடைப்பட்ட சோமாந்தகன் என்னும் மன்னன் ஆப்பு ஒன்றை நிறுத்தி வழிபட அது இலிங்கமாகத் தோன்றியருளியது. அதனாலேயே ஆப்பனூர், ஆப்புடையார்கோயில் என்ற பெயர்கள் ஏற்பட்டன. சைவ வேதியரான அருச்சகர் ஒருவர் வையையாற்றின் மணலை உலையிலிட இறைவன் அதை அன்னமாக்குவித்தார். அதனால் இப்பெருமானுக்கு 'அன்னவிநோதன்' என்ற பெயரும் உண்டு.

ஆளுடைய பிள்ளையார் இத்தலத்திற்கு பதினொரு பாடல்களையுடைய ஒரு பதிகம் ஓதியருளியுள்ளார். அதில் அணி ஆப்பனூரானைப்பற்றும் மனமுடையார், பரவும் மனமுடையார், பணியும் மனமுடையார், பகரும் மனமுடையார், பாடும் மனமுடையார், பயிலும் மனமுடையார், பையநினைந்தெழுவார் முதலியோர் வினைபற்றறுப்பார் என்று கூறுகிறார். இறைவனை 'அகரமுதலான்', 'இயலும் இசையான்', 'எண்ணில் வினைகளைவான்', 'ஆடும் தொழிலான்' என்றெல்லாம் போற்றுகிறார். மேலும், இத்தலத்துக்கு, திருப்பூவணம் கந்தசாமிப் புலவர் என்பவர் இயற்றிய தலபுராணமும் உண்டு.

இத்தலத்தின் தீர்த்தங்கள் வையையாறு, இடபதீர்த்தம் என்பன. இடபதீர்த்தம் கோயிலுக்குள் பெரிய துறவாக இருக்கிறது.

குரவங் கமழ்குழலாள்
குடிகொண்டு நின்றுவிண்ணோர்
விரவும் திருமேனி
விளங்கும் வளையெயிற்றின்
அரவம் அணிந்தானை
அணியாப்ப னூரானைப்
பரவும் மனமுடையார்
வினைபற் றறுப்பாரே

—திருஞானசம்பந்தர்.

செருத்துணை நாயனார் திருப்பதி

[வித்துவான் திரு. வை. சுந்தரேச வாண்டையார், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்]

சைவமும் தமிழும் தழைக்கத்தோன்றிய அறுபத்துமூன்று நாயன்மார்களில் செருத்துணை நாயனார் ஒருவர். இவர் சோழநாட்டில் தஞ்சாவூரில் வேளாளர் குலத்துத் தோன்றித் திருவாரூர் எய்திப் பல திருத்தொண்டுகள் செய்துவரு நாட்களில் ஒருநாள் பல்லவ வேந்தராகிய கழற்சிங்க நாயனார் தம் அரசமாதேவியோடு திருவாரூருக்குச் சிவதரிசனத்திற்கு வந்திருந்தபோது திருப்பூ மண்டபத்துக் கிடந்ததொரு பூவை எடுத்து மோந்த குற்றத்திற்காக அவ் அரசியாரது மூக்கை அஞ்சாது அரிந்த வீரத்தொண்டராவர். அத்தகைய பெரியார் பிறக்கத் தவஞ்செய்த திருப்பதி யாதென ஆராய்வாம்.

இவரைத் திருத்தொண்டத் தொகையில் சுந்தரமூர்த்தி அடிகள் "தஞ்சை மன்னவனும் செருத்துணை" என்று அருளிச் செய்துள்ளார். இவரது திருப்பதியை நம்பியாண்டார் நம்பிகள் "செழுநீர் மருகல் நன்னாட்டமர் தஞ்சை" எனவும், சேக்கிழாரடிகள் "பொன்னிநீர் நாட்டு மருகல் நாட்டுத் தஞ்சாவூர்" என்றும் கூறியருளினர். எனவே மருகல் நாட்டுத் தஞ்சாவூரே இவர் பிறந்த தலமாகும். அத் தஞ்சாவூர் யாது? தஞ்சாவூர் மாவட்டத்தில் நன்னிலம் பகுதியில் திருமருகல் என்னும் தேவாரம் பெற்ற தலம் ஒன்றுள்ளது. அதனைத் தலைநகராகக்கொண்ட நாடே நம்பிகள் காலத்தும், சேக்கிழார் காலத்தும் மருகல் நாடென வழங்கி வந்தது. இத்திருமருகலுக்கு இரண்டு கல் தூரத்தில் புத்தாற்றின் தென் கரையில் தஞ்சாவூர் என்று ஓர் ஊர் இருக்கின்றது. அதுவே மருகல்நாட்டுத் தஞ்சாவூர் ஆகும். எனவே, அதுவே செருத்துணை நாயனார் பிறந்த பதியுமாகும். ஈண்டு ஓர் பெரிய பழைய சிவன் கோயில் உண்டு. செருத்துணை நாயனாரின் தனிப்படிவமும் ஆங்கு இருக்கின்றது. இம்மருகல் நாட்டுத் தஞ்சாவூர் தென் இந்தியக் கல்வெட்டுக்களின் இரண்டாம் தொகுதி எழுபதாம் எண்ணுள்ள (South Indian Inscriptions Volume II, Inscription Number 70) முதலாம் இராசராசன் கல்வெட்டில் க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டு மருகல் நாட்டுத் தஞ்சாவூர் என்று குறிக்கப்பெற்றுள்ளது. இம்மருகல் நாட்டில் அடங்கியனவாகக் கல்வெட்டுக்களில் குறிக்கப்பெறும் பூதனூர், வைப்பூர் என்ற ஊர்கள் இத்தஞ்சைக்கு அண்மையில் இன்றும் நிலைபெற்றிருக்கின்றன.

இஃது இங்ஙனமாக சென்னைப் பல்கலைக் கழகத்துச் சரித்திரப் பேராசிரியர் திரு. K.A. நீலகண்ட சாஸ்திரியார் M. A. அவர்கள் தாம் அருமையாக எழுதிய "The History of the Pandiyan Kingdoms" என்ற நூலில் தஞ்சாவூர்ச் சில்லா தஞ்சாவூர்த் தாலுகாவின் தலை நகரும், இராசராசேச்சரத்தைத் தன்னகத்தே கொண்டதாகிய தஞ்சாவூரே செருத்துணை நாயனார் பதியென்று குறிப்பிட்டுள்ளார்கள். அது பொருந்துவது அன்று. அவர் கூறிய தஞ்சாவூர் பாண்டி குலாசனி வளநாட்டுத் தஞ்சாவூர்க் கூற்றத்து தஞ்சாவூரேயாகும். இச்செய்தியைத் தென் இந்தியக் கல்வெட்டுத் தொகுதி இரண்டு, எண் ஒன்றுள்ள (South Indian Inscriptions Volume II; Ins. Number I) முதலாம் இராசராசன் கல்வெட்டு அறிவிக்கின்றது. எனவே மேற்கூறிய மருகல் நாட்டுத் தஞ்சாவூரே செருத்துணையார் பதியாதல் வலியுறுதல் காண்க.

திருத்தணி: சுப்பிரமணியசுவாமி கோயிலின் சத்திரம் கால்கோள்விழாவை சென்னை அறநிலையத்துறை ஆணையர் திரு. அ. உத்தண்டராமன், ஐ. ஏ. எஸ். அவர்கள் 7—6—60 அன்று துவக்கி வைத்தார்கள்.

திருக்களிற்றுப்படியார்

[திரு. K. வச்சிரவேல் முதலியார், B.A., L.T.]

(முன்தொடர்ச்சி)

நூலின் பொருணிலை

இந்நூலுட் கூறப்படும் முக்கியப் பொருள் முதனூலாகிய திருவுந்தியாருட் கூறப்பட்டதே ஆகும். ஆகலின், அது திருவுந்தியார் பற்றி எழுதியுள்ள கட்டுரைகளாலே விளங்குதற்கு உரியது. பின்னர் இங்கு உரைக்க முன்னிற்பது யாதோ என்னில், முதனூலுட் கூறிய முக்கியப்பொருளை விளக்கி வலியுறுத்துதற்பொருட்டு இந்நூலாசிரியர் ஆங்காங்குத் தந்துரைக்கும் சார்பு பொருள்கள் தனிச் சிறப்புடையவையாய், உணர்வும் இன்பமும் பெருக்குவனவாய் அமைந்திருத்தலின், அச் சார்புபொருள்களே மேற்கூறிய மூன்று தலைப்புக்களின் கீழ் உரைக்கப்படும் என்பது. இந்நூலுள் ஆங்காங்குத் தரப்படும் உவமைகள் மிகப் போற்றத்தக்கவை.

1. குருவருள்

(அ) அருவாய் உயிர்களின் உணர்வைக் கடந்துநின்று, கருணையினால் அவற்றோடு உடனாகி அவற்றை ஐந்தொழிலிற் படுத்தி, நடத்தி வரும் முதல்வனே அவற்றின் பக்குவ முதிர்ச்சியில் அருளாசிரியனாகத் தோன்றுகிறான்; தோன்றி, மாணாக்கனுடன் சிலகாலம் தங்கியிருந்து, அவனுக்கு உறுதி அறிவுறுத்தியும், அவனை ஞானநெறியில் பயிற்றியும் மூல மலத்தினின்றும் விடுவித்து ஆட்கொள்ளுகின்றான்.—என்னும் இவ்வடிப்படை உண்மை முதல் நூலுள் உள்ளபடியே சிறிது விரித்து இந்நூலுள்ளும் முதற்கண் கூறப்படுகின்றது. (4)

பின், அதுபற்றி எழக்கூடிய இரண்டு ஆசங்கை (தடை)களுக்கு விடை கூறுகின்றார் வழி நூலாசிரியர்:—உலகத்தில் மெய்ந்நெறியை விளக்கும் ஆகமங்கள், அவ்வவ் வாகமங்களைச் சார்ந்து எழுந்த அறுவகைச் சமயங்கள், அவற்றுட் கூறப்படும் (கன்மம்), யோகம், ஞானம் என்னும் ஒழுக்கங்கள் ஆகிய இவை நிலவுகின்றன. ஆகலின், இவற்றை ஒருவன் கற்று, உணர்ந்து, ஒழுகினால், அவன் மெய்ப்பொருளைத் தலைப்படுதல் கூடும் அல்லவா? முதல்வன் ஏன் ஆசிரியனாக எழுந்தருளுதல் வேண்டும்? — என்பது ஆசங்கை. இதற்குப் பின்வரும் இரண்டு அரிய, இனிய செய்யுட்களால் விடை கூறுகின்றார் :—

ஆகமங்கள் எங்கே? அறுசமயம் தான்எங்கே?
யோகங்கள் எங்கே? உணர்வெங்கே?—பாகத்து
அருள்வடிவும் தானுமாய் ஆண்டிலனேல் அந்தப்
பெருவடிவை ஆர்அறிவார்? பேசு. (5)

சாத்திரத்தை ஓதினர்க்குச் சற்குருவின் தன்வசன
மாத்திரத்தே வாய்க்கும்நலம் வந்துறுமோ?—ஆர்த்தகடல்
தண்ணீர் குடித்தவர்க்குத் தாகந் தணிந்திடுமோ
தெண்ணீர்மை யாய்?இதனைச் செப்பு. (6)

ஆகமங்கள் முதலியவை மனவுணர்வைப் பற்றிச் சங்கற்ப விகற்பங்களை (நினைவு ஐயங்களை)த் தோற்றுவிப்பன. முதல்வனுடைய உண்மை யறிவின்ப நிறைநிலையோ மனமிறந்த நிலைக்கண் வரும் வியாபக உணர்வால் தலைப்படுதற்கு உரியது. அவ்வியாபக உணர்வு பக்குவமுதிர்ச்சிக்கண் அருளுருவாகிய ஆசான் வடிவும் அதனை ஆவேசிக்கும் தானுமாய் முதல்வன் வெளிப்பட்டு ஆட்கொண்டால் அன்றி விளங்காது. ஆதலால், ஆசான் அருள் இல்லாதபோது, முதற்பொருளைக் காட்டுதற்கு ஆகமங்கள் முதலியவை எவ்விடத்தவை? அதாவது வெகுதூரத்தில் உள்ளவை ஆகும்—என்பது முதற்பாட்டின் கருத்து. பாகத்து — பக்குவகாலத்து, இடப்பாகத்துள்ள—எனச் சிலேடை,

இப்பாட்டு

"நானுமென் சிந்தையும்
நாயகனுக்(கு) எவ்விடத்தோம்
தானுமதன் தையலும்
தாழ்சடையோன் ஆண்டிலனேல்
வானும் திசைகளும்
மாகடலும் ஆயபிரான்
தேனுந்து சேவடிக்கே
சென்றூதாய் கோத்தும்பீ"

என்னும் திருவாசகத் திருமறையின் அனுபவப் பொருளை விரித்துரைப்பதாக இருத்தல் காண்க.

கடல் தன் அளப்பரிய பரப்பாலும் ஆரவாரத்தாலும் மக்கள் உள்ளத்தைக் கவர்வதாக இருப்பினும், தன் நீரை உண்பார்க்குத் தாகத்தைத் தணிக்கமாட்டாது. ஆனால் அந்நீரே மேகத்தின் வாய்ப்பட்டுத் தெளிந்த நீராய்ச் சிறிது உண்ணப்பட்டாலும் தாகத்தைத் தணிக்கும். அதுபோல, வேத ஆகம சாத்திரங்கள், தொன்று தொட்டுவரும் கேள்வியான் அனுபவம் உடைய தேசிகன் அருளில் வழி, ஆரவார மாத்திரையாய்க் கழிவனவேயன்றி ஒரு நெறிய மனம் வைத்து உணர்தற்குச் சிறிதும் பயன்படா. அருளாசிரியன் அருள்மொழி, அளவில் சுருங்கியிருப்பினும், ஒருவன் அறிவினை ஐயத்தின் நீக்கித் தெளிவிக்க வல்லதாம். "ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்—வானம் நணிய(து) உடைத்து" என்றார் திருவள்ளுவர். ஆதலின் ஆசான் அருண்மொழி பெற்றாரே உரை உணர்வு இறந்துநின்று உணர்வதாகிய மெய்யுணர்வு நிலையைத் தலைப்படுவதற்குத் தகுதி உடையவர் ஆவார்; ஏனையர் ஆகார்—என்பது இரண்டாம் பாட்டின் பொருள்.

இதில் தெண்ணீர்மையாய் என்றது விளி அன்று. தெளிந்தநீரின் தன்மைபோல என உவமை வசனம். ஆய்—உவம உருபு.

பின், மேலும் ஓர் ஆசங்கையைத் திருவுளம்பற்றிப் பரிகரிக்கின்றார் :

உருவெனப்பட்டவை யெல்லாம் மாயா காரியமே; ஆதலால் ஆசான் உருவம் சுட்டுணர்வை நீக்கி மெய்ப்பொருளின் சொரூபத்தைத் தோற்றுவிக்கும் என்றல் எவ்வாறு பொருந்தும் என்பது தடை.

அதற்கு விடை: பசுவின் சாணம் மலம் எனவே படும். ஆயினும் அஃது ஏனைய உயிர்களின் மலம்போல அசுத்தம் அன்று; பிறமலங்களால் உளதாகும் அசுத்தத்தை நீக்கித் தூய்மைப்படுத்துவது என்பது எல்லார்க்கும் உடன்பாடு. அதுபோலவே, முதல்வன் திருவருளுக்கு நிலைக்களமாக உள்ள ஆசானது திருவுருவம் தன்னைத் தியானித்து வழிபடுவார் உணர்வின்கண் உள்ள மாசு நீக்கிச் சுத்த நிலையை வருவித்துத் திருவருள் ஞானத்தை விளக்கவல்லதாம். (7)

(ஆ) உண்மையனுபவத்தில் உணரப்படும் சிவானந்தத்தின் இயல்பு உலகப் பொருள்களில் வைத்து உணர்த்தக் கூடாததாய் உள்ளது என்னும் முதனூற் கருத்தை

ஒன்றுங் குறியே குறியாத லால்அதனுக்(கு)
ஒன்றுங் குறியொன்(று) இலாமையினால்—ஒன்றோ(டு)
உவமிக்கல் ஆவதுவுந் தானில்லை ஒவ்வாத்
தவமிக்கா ரேஇதற்குச் சான்று

என்னும் பாட்டால் இந்நூல் விரித்துரைக்கின்றது. பாட்டின் பொருள் இது :—

'தவமுதல்வர்கள் மெய்யுணர்வு நிலையில் தலைப்பட்டுணரும் சிவத்துக்கு அடையாளமாக எடுத்துக்காட்டுதற்கு உரியதாய் உலகப் பொருள்களுள் ஏதொன்றும் இல்லை. ஆதலால் அம்முதற் பொருள் உவமையின் வைத்துச் சுட்டிக்கூற ஒண்ணாதது ஆகும். (நம்மனோர் காட்சிக்கு அப்பாற்பட்டதென்பது முன்னரே பெறப்பட்டது.) இங்ஙனம் ஆயின், அத்தகைய பேரின்பப் பொருள் உண்டென்றும், அதனியல்பு இன்னதென்றும் எவ்வாறு நம்மனோரால் துணியப்படும் என்னும் வினா எழும்: உயிர் சார்ந்ததன் வண்ணமாய் ஒன்றி நின்றறியும் இயல்பிற்று. ஆதலால், முதற்பொருளோடு ஏகனாகி ஒன்றி நின்றுணரும் சுத்தான்மாக்களிடத்து விளங்கும் குறியே முதற்பொருளுக்குக் குறியாம். அதுபற்றி முதற்பொருளின் இருப்பும் இயல்பும் உணர்வதற்கு அத்தகைய தவமுதல்வர்களே சான்று ஆவர்கள் என்பதே விடை! முதற்கண் உள்ள ஒன்றுங்குறி என்னுந்தொடர் ஒன்றுதலால் உளதாகும் அடையாளம் எனப்பொருள் படும். அது முதல்வனோடு ஏகனாகி நிற்கும் சுத்தான்மாக்களின் உணர்வும், கரணங்களும்

செயல்களும் திருவருட் சார்புபற்றி அளவிறந்து ஒளிமயமாய் விளங்குதல். பின்னையது பொருந்தும் குறி எனப் பொருள்படும்.

(இ) பின்னர், மேற்கூறியபடி முதற் பொருளோடு ஒன்றி உணர்ந்து உலகச்சார்பு கெடும்படி திருவருள் நெறியில் நிற்போரே உயர்ஞான குரவர்கள் ஆவார்கள் என்பதை ஓர் உவமை வாயிலாக விளக்குகிறார் ஆசிரியர்:—

ஆற்று நீர் கடல் நீரோடு கலந்த பின், மீண்டும் ஆற்றிலே எதிர்ந்துவரின், அது முன்னைய தன் தன்மை மாறிக் கடல் நீரின் தன்மையாகிய உவர்ப்பையே உடையதாகும். அதுபோல, உடம்பு உள்ளபோது சிவனடி கூடி இன்புறப் பெற்றோர் மீள உலக முகப்பட்டால், அவர் தம் உணர்வு புலன் உணர்வு போல அளவைகளுக்கு உட்பட்டுத் தோன்றினும், சிவ உணர்வேயாய் விளங்கி, நம்மனோர் பந்தபாசங்களை அறுக்கவல்லதாம் என்று உணர்தல் வேண்டும்.

அத்தகைய சீவன் முத்தர்களுடைய கரணங்களெல்லாம் சிவகரணங்களாகவே நிகழும் என்பதை (1) பாலைநிலம் நெய்தலாகும்படி பாடிய திருஞான சம்பந்தரும் (2) பாம்பின் நஞ்சை நீங்கும்படி பாடிய திருநாவுக்கரசரும், (3) முதலைவாயினின்றும், (இறந்த) பாலன் மீளுமபடிபாடிய நம்பி ஆரூரரும் ஆகிய திருநெறித் தலைவர்களுடைய அற்புதச் செயல்களில் வைத்து நாம் தெளிந்துகொள்ளலாம்.

ஆற்றுல் அலைகடற்கே பாய்ந்தநீர் அந்நீர்மை
மாற்றியவ் வாற்றுல் மறித்தாற்போல்-தோற்றிப்
புலன்களெனப் போதம் புறம்பொழியின் நம்தம்
மலங்களற மாற்றுவிக்கும் வந்து (கக)

பாலைநெய்தல் பாடியதும் பாம்பொழியப்
பாடியதும்
காலனைஅன் றேவிக் கராங்கொண்ட—பாலன்
மரணந் தவிர்த்ததுவும் மற்றவர்க்கு நம்தம்
கரணம்போல் அல்லாமை காண் (கஉ)

(ஈ) நித்தப் பொருள்களையும் அநித்தப் பொருள்களையும் வேறுபடுத்தி உணரும் உணர்வும், அழியும் இயல்புள்ள இம்மை மறுமை இன்பங்களில் உவர்ப்பும், வீடு பேற்றின் கண் அவாவும் உடையவரே பக்குவ முதிர்ச்சி உடையவர் எனப்படுவர். இவ்வியல்புடையோர்க்கு முதல்வன் ஆசான் உருவில் தோன்றி அவர் தம் உண்மையியல்பை உணர்த்தி, அவரைத் தத்துவ உணர்வினின்றும் நீக்கித்திருவருளைத் தாரகமாகக்கொண்டு அழுந்தி நிற்கும் பேரின்ப நிலையில் உய்ப்பன்.

இது எதுபோலும் எனின், நனவு நிலையில் மிகவும் களைத்து உறக்கம் எய்திய ஒருவனை, தூய பஞ்சணை மெத்தையில் உய்த்தல் போலும். தானே உறங்கினவன் சயனத்தில் விட்டபின் நன்றாகத்தானே உறங்குவான்?

இங்ஙனமே பக்குவ முதிர்ச்சியுள்ள ஆன்மா ஆசான் அருள் பெற்றபின் சிவானந்தத்தில் அழுந்துமேயன்றி மீள உலக முகப்படாது. ஆயினும், முத்தி நெறிக்கண் தத்துவ சுத்தி, ஆன்மரூபம், ஆன்மதரிசனம், ஆன்ம சுத்தி, சிவபோகம் எனப் படிநிலைகள் இருத்தலின், அம்முறையே மெள்ளச் சிவமாந்தன்மையை எய்தும்.

தூங்கினரைத் தூய சயனத்தே விட்டதற்பின்
தாங்களே சட்ட உறங்குவர்கள்-ஆங்கதுபோல்
ஐயன் அருட்கடைக்கண் ஆண்டதற்பின்
அப்பொருளாய்ப்
பைய விளையுமெனப் பார் (கங)

சீவன் முத்தர் உணர்வு உலகமுகப்படின் நம்தம் மலங்கள்கெட நீக்கும் என மேலே கூறினமையின், ஓர் ஐயம் உண்டாகும். முத்திபெற்றோரும் மீண்டு பிறப்பரோ என்பது அவ்வையம். ஆசான் அருள்பெற்றோர் மீளப் பிறவார் என அவ்வையத்தை இப்பாட்டால் நீக்கினர் ஆபிற்று. சட்ட—செம்மையாக. பைய-மெள்ள.

சிவானந்தப் பயனை நிட்டை நிலை எய்தி அனுபவிப்போர் இரண்டு காரணங்களால் உலக முகப்படுவர். ஒரு காரணம் முதல்வன் திருவருளே உலக நன்மையின் பொருட்டு அவர்களை உலக முகப்படுத்தி வாய்மொழியாலும் அருள் வாழ்க்கையாலும் திருநெறியை விளக்க வைத்தல். மற்றொன்று பழக்கம்பற்றி வேம்பைத் தின்றுவந்த புழு கரும்பைத் தலைப்பட்ட பின்னும் வேம்பின் சுவையை மீள விரும்புவதுபோல உலக முகப்படுதல்.

(தொடரும்)

திருவிசயமங்கை

(வித்துவான் திரு. வை. சுந்தரேசவாண்டையார்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்)

சோழநாட்டுத் தேவாரம் பெற்ற தலங்களுள் திருவிசயமங்கையும் ஒன்ருகும். இத்தலம் திருப்புறம்பயத்திற்கு மேற்கிலும், திருவைகாவூருக்குக் கிழக்கிலும் மண்ணியாற்றின் வடகரையிலுமுள்ள விசயமங்கை என்னும் ஊரிலுள்ள சிவாலயமா? அல்லது திருவைகாவூருக்கு எதிரே கொள்ளிடத்தின் வட கரையில் உள்ள கோவந்தபுத்தூரில் உள்ள சிவாலயமா? என்பது பலரின் ஐயப்பாடாக உள்ளது. இதனை நன்கு தெளிவு பெற விளக்குவேன். கோவந்தபுத்தூர் என்பது, புத்தூர் என்னும் ஒரு பெயர், காரணம் பற்றிய திருவரிசிற்கரைப்புத்தூர், கடுவாய்க்கரைத் திருப்புத்தூர் என்பனபோன்று காரணப்பெயராக வழங்குவதாயிற்று. சிவபெருமானை இலிங்க வடிவத்தில் அன்பு பூண்டு ஓர் பசு நாள்தோறும் தனது மடியிலுள்ள பாலைச் சொரிந்து பேறெய்தியதால் அச்சிறப்புத் தோன்ற, இத்திருப்பதிக்குக் கோவந்தபுத்தூர் என்னும் பெயர் வந்தது. இஃது இன்றும் அவ்வாலயத்தில் உருவக்காட்சியில் வைத்துப் போற்றப்படுகிறது. இதனை

கீதமுன் இசைதரக் கிளரும் வீணையர்
பூதமுன் இயல்புடை புனிதர் பொன்னகர்
கோதனம் வழிபடக் குலவு நான்மறை
வேதியர் தொழுதெழு விசய மங்கையே

என்னும் திருஞான சம்பந்த அடிகள் திருப்பாடலால் அறியத்தக்கது. மற்றும் விசயமங்கை என்பது மேலே கூறியவாறு மண்ணியாற்றின் கரையிலுள்ள விசயமங்கை என்னும் ஊரில் உள்ளதா? அல்லது கோவந்தபுத்தூரில் உள்ளதா? என்னும் ஐயப்பாட்டினை,

"கொள்ளி டக்கரை கோவந்த புத்தூரில்
வெள்வி டைக்கருள் செய்விச யமங்கை
யுள்ளி டத்துறை கின்ற வுருத்திரன்
கிள்ளி டத்தலை யற்ற(து) அயனுக்கே"

என்னும் திருநாவுக்கரசரது திருப்பாடலால் கொள்ளிடக்கரையிலுள்ள கோவந்தபுத்தூரில் திருவிசயமங்கை உள்ளது என்பதும், அங்கே சிவபெருமான் கோவினுக்கு அருள்சுரந்ததும் தெற்றென விளக்கி ஐயப்பாட்டினை நீக்குகின்றது.

சைவசமய குரவர்கள் ஓதிய திருமுறைகளில் சிற்சில பதிகங்களில் திருப்பதியின் பெயர் ஒன்ருகவும், திருக்கோயிலின் பெயர் மற்றொன்ருகவும் உள்ளன. இஃது திருக்கடந்தையுள் தூங்கானைமாடக் கோயிலும், திருச்செங்காட்டங்குடியில் கணபதீச்சரமும், கருவூரில் திரு ஆனிலையும் உள்ளன என்பன வற்ருல் அறியக்கிடக்கிறது. இம்முறையின் படியே கோவந்தபுத்தூரில் திருவிசயமங்கை உள்ளது என்பதையும் உய்த்துணர்க.

சேக்கிழார் அருளிச்செய்த திருஞான சம்பந்த அடிகள் புராணத்தில், அடிகள் யாத்திரையாக வந்த வரலாறு கூறுமிடத்துக் கொள்ளிடத்தின் வட கரையிலுள்ள திருப்பழுவூரிலிருந்து திருவிசயமங்கை வந்து, கோதனம் வழிபட்ட குறிப்புள்ள திருப்பதிகம் ஓதி, பின்னர்த் திருவைகாவையும், திருப்புறம்பயத்தையும் அடைந்ததாக 238 முதல் 240 வரை உள்ள பாட்டுக்களால் விளங்குகிறது. இதுதான் நேரான வழியாக உள்ளது. மண்ணியாற்றங்கரைக் கோயிலாயின் மேற்கிலுள்ள திருவைகாவூருக்கு முதலில் வந்துதான் விசயமங்கைக்கு வரநேரும். இதனுல் கொள்ளிடத்தின் வடகரையில் உள்ளதே விசயமங்கை என்பது விளங்குகிறது. முற்காலத்து நம்பிரானுக்கு இஞ்ஞான்று ஊர்தோறும் வடமொழிப் பெயர்களைப் புனைந்து வழங்குவது போலன்றி, நம் சமயகுரவர்கள் எந்த ஊரில் வழிபாடு ஆற்றினர்களோ அவ்வூரைச் சுட்டி நம்பிரானது திருப்பெயரைக் குறித்துள்ளார்கள். மழபாடியுள் அண்ணலே! புறம்பயம் அமர்ந்தோய்!, ஒற்றியூர் உடைய கோவே! என்

பனவாக வழங்கினான்றி ஓரிடத்தும் அச்சிட்ட தேவாரப் பதிகங்களின் ஈற்றில் வரையப்பட்டுள்ள பெயர்கள் அப்பதிகங்களில் காணப்படவே இல்லை என்பது திருமுறை பயில்வார்க்கு நன்கு விளங்குவதாகும். இந்த முறையைப் பின்பற்றியே நம் சமயகுரவர்கள் காலத்துக்குப் பிற்பட்டு அரசர்களால் ஒவ்வோர் கோயில்களிலும் செதுக்கப்பட்ட கல்வெட்டுக்களில் நம்பிரானது பெயரைக் குறிக்குமிடத்துத் திருவலஞ்சுழியுடைய் மகாதேவர்க்கு, திருவையாறுடைய மகாதேவர்க்கு என்று அவ்வூரினைக் குறித்து நம்பிரானது திருப்பெயரைக் குறித்துள்ளார்கள். இம்முறையே திருவிசயமங்கை என்னும் கோயிற் பெயரால் நம்பிரானது திருப்பெயர் குறிப்பிட்டிருத்தலைக் கோவந்தபுத்தூர் ஆலயக் கல்வெட்டுக்களில் இன்றும் யாவரும் காணலாம். கோவந்தபுத்தூர் ஆலயக் கல்வெட்டுக்களில் விசயமங்கையுடைய மகாதேவர் என்றே குறிக்கப்பட்டிருக்கின்றது. இதனை யாரும் மறுப்பதற்கில்லை. மேற்காட்டிப் போந்தவாறு திருத்தொண்டர் புராணத்தாலும், கல்வெட்டுக்களாலும் ஆராயுமிடத்து திருவிசயமங்கை என்னும் பதிகம் பெற்றது கோவந்தபுத்தூரிலுள்ள சிவாலயமே என்பது வெள்ளிடைமலை போல் விளங்குவதாகும். மண்ணியாற்றங் கரையிலுள்ள சிவாலயத்தில் யாதொரு கல்வெட்டும் இல்லை.

இவ்வாராய்ச்சிக்குப் பயன்படும் கோவந்தபுத்தூர்ச் சிவாலயக் கல்வெட்டுக்கள்:—

இடம்:—கருப்ப இல்லின் (Central Shrine) மேல்புறச் சுவர்.

I

வரி. (1) ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேசரி பன்மற்கு யாண்டு கங (13) வது வடகரை பிர்மதேயம் பெ.

,, 2 ரிய ஸ்ரீ வானவன் மாதேவிச் சதுர்வேதிமங்கலத்து ஸ்ரீ விஜயமங்கலதே

,, 3 வற்கு இ ஸ்ரீ விமானம் கல்லால் எழுந்தருளுவிச்சேன். ஸ்ரீ உத்தம சோழ மாதேவர் பெரு

,, 4 ந்திறத்து குவளாலம் உடையான் அம்பலவன் பழுவூர் நக்கனை விக்கிரம சோழ

,, 5 ஸ்ரீமாராயனேன். இஸ்ரீ விஜயமங்கலத்து மஹாதேவர்க்கு.

II

இடம்:—ஸ்ரீ விமானத்தின் தென்புறம்.

வரி. (1) ஸ்வஸ்திஸ்ரீ திருபுவன சக்ரவர்த்திகள் ஸ்ரீராஜராஜ தேவர்க்கு யாண்டு ௩0௨ (32) ஆவது

,, 2 கன்னி ஞாயிற்று பூர்வபட்சத்து சதுர்த்தசியும் ஞாயிற்றுக்கிழமையும் பெற்ற உத்திரட்டாதி நாள்

,, 3 வடகரை விக்கிரம சோழவளநாட்டு இன்னம்பர்நாட்டு உடையார் திருவிசயமங்கையுடைய நாய-

,, 4 னார் திருமடை வளாகத்து திருத்தொண்டத்தொகையன் திருமடத்து ஸ்தானபதி சுப்பிரமணிய சிவனேன் இந்-

,, 5 நாயனார்க்கு திருப்பள்ளித் தாமம் ஆக்குவார்கு ஜீவனத்துக்கு உடலாக திருநந்தவன புறமாகக் கொண்டுவிட்ட நிலமாவது.

[விஜயமங்கலம் எனினும் விசயமங்கை எனினும் ஒக்கும். ஈண்டுக் காட்டப்பட்ட கல்வெட்டுக்களே இதனை வலியுறுத்தும்.]

திருத்தணி : சுப்பிரமணிய சுவாமி ஆலய அலுவலகக் கட்டிடத்தை திரு. எஸ் ரெங்கநாத முதலியார், பி.ஏ., பி. எல்., எம். எல். ஏ., அவர்கள் தலைமையில் சென்னை அறநிலையத்துறை அமைச்சர் திரு. எம். பக்தவத்சலம், பி. ஏ., பி., எல்., அவர்கள், 15—6—60-ல் திறந்து வைத்தார்கள்.

ஆவியூர் : நவநீதகிருஷ்ணசுவாமி கோயிலில் மகாகும்பாபிஷேகம் 6—6—60-ல் நடைபெற்றது.

பிரதோஷம்

சிவபெருமானிடம் பேரன்பு பூண்டவர் துருவாச முனிவர். ஒருநாள் விதிப்படி சிவ பெருமானை வழிபட்டு அருச்சித்த பூவொன்றைக் கையில் ஏந்திவந்தார். எதிரே தேவேந்திரன் ஐராவதத்தின் மேல் ஏறிவந்தான். முனிவர் கையிலுள்ள மலரை இந்திரனுக்குக் கொடுக்க நினைத்துப் பூவைப் நீட்டினர். யானைமேலிருந்தபடியே அங்குசத்தினல் அப் பூவை வாங்கி யானையின் மத்தகத்தின் மேல் வைத்தான். வெள்ளை யானை அந்த மலரை எடுத்துக் கீழே போட்டுக் காலால் மிதித்தது. துருவாசர் அதைக் கண்டு கடுஞ்சினம் கொண்டார். 'சிவபெருமான் திருவடிகளில் அருச்சித்த நிர்மாலியத்தை உனக்குக் கொடுத்தேன். அதை நீ அலட்சியமாக அங்குசத்தால் வாங்கி யானையின் மத்தகத்தின் மேல் வைத்தாய். மதங்கொண்ட உன் யானையும் அதைக் கீழே தள்ளி மிதித்தது. சிவபெருமான் நிர்மாலியத்தை எளிதாக எண்ணியது உன் செல்வச் செருக்கினலன்றோ? ஆதலால் காமதேனு, கற்பகமரம், சிந்தாமணி முதலிய எல்லாச் செல்வங்களும் உன்னைவிட்டு அகலக் கடவதாக'' என்று சாபமிட்டனர். அவையெல்லாம் இந்திரனைவிட்டு நீங்கித் திருப்பாற்கடலைச் சேர்ந்தன. இந்திரனும் தேவர்களும் பொலிவிழந்து வருந்தினர்கள்; வலிமையையும் இழந்தார்கள். அதையறிந்த அசுரர்கள் தேவர்களுடன் போர்புரிய வந்தார்கள். சண்டை செய்ய முடியாமல் தேவர்கள் பிரமதேவனுடன் சென்று திருமாலிடம் முறையிட்டார்கள். பரந்தாமனும் "பாற்கடலைக் கடைந்து அமுதத்தையெடுத்து உண்டால் வெற்றிபெறுவீர்கள்'' என்றார். தேவர்கள் அவுணர்களின் துணைகொண்டு மந்தரமலையை மத்தாகவும், வாசுகியென்ற பாம்பைக்கயிருகவுமகொண்டு திருப்பாற்கடலைக் கடைந்தனர். சிவபெருமானை நினைத்தார்களில்லை. வாசுகி நஞ்சை உமிழ்ந்தது. அதன் கொடிய வேகத்திற்கஞ்சி ஓடி, திருக்கயிலாயம் சென்று நந்திதேவரிடம் தெரிவித்தார்கள். அவரும் சிவ பெருமானிடம் விண்ணப்பித்தார். சிவபெருமான் தஞ்சமென்று வந்த தேவர்களை அஞ்ச வேண்டாம் என்று சொல்லி, அணுக்கத் தொண்டரான சுந்தரரை அந்த நஞ்சை எடுத்துவரப் பணித்தார். அவரும் அப்படியே செய்தார். பெருங்கருணைத் தடங்கடலான பெருமான் அந்த கொடிய நஞ்சை உண்டு தேவர்களின் துயரத்தை நீக்கினர்; உலகமக்களின் துன்பத்தையும் போக்கினர். அதனலேயே சிவபெருமானுக்கு **நீலகண்டன்** என்ற பெயரும் உண்டாயிற்று,

நஞ்சு உண்ட பின் எம்பெருமான் மௌனமாக வீற்றிருந்தார். எல்லோரும் உண வருந்தாது நஞ்சுண்ட கண்டனை வழிபட்டனர். அந்த நாளே **ஏகாதசியாம்**. மறுநாள் தேவர்கள் பூசையை முடித்து உணவருந்தினர். அந்த நாள்தான் **துவாதசியாகும்**. அதற்கடுத்தநாள் மாலை பொழுதுபோவதற்கு முன் மூன்றேமுக்கால் நாழிகைக்குள் **திரயோதசியோடு** கூடிய நாளிலே, துயருழந்தோர் இன்பம் அடையும் பொருட்டு உமாதேவியார் காண ஒரு சாமநேரம் (ஏழரை நாழிகை) சிவ பெருமான் திருநிருத்தம் செய்தருளினர். அந்தக் காலமே **பிரதோஷ காலமெனச்** சிவாகமங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

பிரதோஷம் மாதந்தோறும் சுக்கில பட்சம், கிருட்ணபட்சம் இரண்டிலும் வருகிறது. பிரதோஷத்தில் சனிக்கிழமையும் சேர்ந்து வந்தால் சிறப்பாகக் கருதப்படுகிறது. விரதம் அனுஷ்டிப்போர் சித்திரை, வைகாசி, ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் சனிக்கிழமையுடன் கூடிய பிரதோஷத்திலிருந்து நோற்க ஆரம்பிப்பது நல்லது. சிவாலயங்களில் அன்று சிவலிங்கமூர்த்திக்கும், நந்தியெம்பெருமானுக்கும் ஒரே காலத்தில் அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். பிரதோஷ நாயகர் இடபவாகனத்தில் எழுந்தருளுவர். அக்காலத்தில் சிவன் கோயிலில் சென்று இறைவனை வழிபடுவோர்கள் எல்லா நலன்களையும் அடைவார்கள்.

158341

செய்திகள்

திருப்புத்தூர்: திருத்தளிநாதர் கோயிலில் திருமுறை விழா 3-6-60 வரை நடைபெற்றது. சமயச் சொற்பொழிவுகளும் இன்னிசை அரங்குகளும் நடைபெற்றன. 7-6-60-ல் குன்றக்குடி விசாகப் பெருவிழாவும் நடைபெற்றது.

◆ ◆ ◆ ◆

விருத்தாசலம்: விருத்தகிரீசுவரர் கோயிலில் வசந்த உற்சவம் 29-5-60 முதல் 7-6-60 வரை நடைபெற்றது. சொற்பொழிவுகளும் இன்னிசை அரங்குகளும் நடைபெற்றன.

◆ ◆ ◆ ◆

கும்பகோணம்: ஆதிகும்பேசுவர சுவாமி கோயிலில் திருக்கல்யாணத் திருவிழா 4-6-60 முதல் 10-6-60-வரை நடைபெற்றது. இன்னிசை அரங்குகளும் நடைபெற்றன.

◆ ◆ ◆ ◆

அம்பாசமுத்திரம்: கிருஷ்ணசுவாமி கோயிலில் வைகாசி விசாகப்பெருந்திருவிழா 29-5-60 முதல் 7-6-60 வரை நடைபெற்றது. சமயச் சொற்பொழிவுகளும் இன்னிசை அரங்குகளும் நடைபெற்றன.

◆ ◆ ◆ ◆

சிதம்பரம்: சபாநாயகர் கோயில் கிழக்குக் கோபுரம் தென்பக்கம் அமைந்த யாகசாலையில் திரு. துரைசாமிரெத்தின தீட்சிதர் அவர்கள் தலைமையில் வித்வான் திரு சேதுசுப்பிரமணியம் அவர்கள் 23-6-60 அன்று "மாணிக்கவாசகர்" என்னும் பொருள் பற்றியும், 24-6-60 அன்று "திருநாவுக்கரசர்" என்னும் பொருள்பற்றியும் சொற்பெருக் காற்றினர்கள்.

◆ ◆ ◆ ◆

இராஜபாளையம்: மாயூரநாதசுவாமி கோயிலில் ஆனிப் பெருந் திருவிழா 28-6-60 முதல் 7-7-60 வரை நடைபெறும்.

◆ ◆ ◆ ◆

இராமேசுவரம்: இராமநாதசுவாமி கோயிலில் ஆடித்திருக்கல்யாணத் திருவிழா 18-7-60 முதல் 3-8-60 வரை நடைபெறும். 18-7-60ல் கொடியேற்று விழா. 23-7-60ல் ஆடி அமாவாசையன்று சுவாமி எழுந்தருளி சேதுவில் தீர்த்தம் கொடுத்தல். 24-7-60 வெள்ளி இரதத்தில் புறப்பாடு. 28-7-60ல் அம்பாள் தபசு-இரவு புஷ்பப் பல்லக்கு. 29-7-60ல் திருக்கல்யாணம்.

◆ ◆ ◆ ◆

அம்பாசமுத்திரம்: திருமூலநாதர் கோயிலில் ஆனிப்பெருந் திருவிழா 28-6-60 முதல் 8-7-60 வரை நடைபெறும். சமயச்சொற்பொழிவுகளும் இன்னிசை அரங்குகளும் நடைபெறும்.

◆ ◆ ◆ ◆

கருவூர்: பசுபதீசுவரப்பெருமானுக்கு திருக்குடமுழுக்கு விழா 6-7-60ல் நடைபெறும்.

Printed at Paari Achakam, 127, Broadway Madras-1
Edited and Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Administration) Department, Madras-6.

திருச்சிற்றம்பலம்

மாணிக்கவாசகசுவாமிகள் அருளிச்செய்த

திருப்பள்ளியெழுச்சி

அருணன் இந் திரன் திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயம்நின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணலங் கண்ணும்
திரளிரை அறுபத முதல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
அருணிதி தரவரும் ஆனந்த மலையே
அலைகட லேபள்ளி யெழுந்தரு ளாயே.

[கதிரவன் கீழ்த்திசையை நெருங்கிவிட்டான். இருள் நீங்க உதய ஒளி பரவிற்று. தாமரை போன்ற நினது திருமுகத்தின் அருளைப்போல பகலவன் மேலே செல்லச் செல்ல கண்கள் போன்ற வாசனையுள்ள தாமரைகள் மலர, வரிசையாக வண்டுக் கூட்டங்கள் ஒலிக்கின்றன. திருப்பெருந் துறையில் எழுந்தருளிய சிவபெருமானே! அருட்செல்வத்தைக் கொடுக்கவரும் இன்பமலையே! அலைகடலே! துயில் நீங்கி எழுந்தருள்க.]

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஆண்டாள் அருளிச்செய்த

திருப்பாவை

அங்கண்மா ஞாலத் தரசர் அபிமான
பங்கமாய் வந்துநின் பள்ளிக்கட் டிற்கீழே
சங்கமிருப் பார்போல் வந்துதலைப் பெய்தோம்
கிங்கிணி வாய்ச்செய்த தாமரைப் பூப்போலே
செங்கண் சிறுச்சிறிதே எம்மேல் விழியாவோ
திங்களும் ஆதித்தியனும் எழுந்தாற் போல்
அங்கணி ரண்டும்கொண்டு எங்கள்மேல் நோக்குதியேல்
எங்கள்மேல் சாபம் இழிந்தேலோ ரெம்பாவாய்.

[மாநில மன்னர் அகங்காரம் அடங்கிவந்து நீ துயிலும் கட்டிலண்டை திரண்டிருப்பதுபோல நாங்கள் வந்து கிட்டினோம். சிறிதேயலர்ந்த தாமரைமலர் போன்ற சிவந்த கண்கள் கொஞ்சம் கொஞ்சமாக எங்கள் மேல் விழிக்கலாகாதோ? சூரிய சந்திரர்கள் உதித்தாற் போன்ற அழகிய இரண்டு திருக்கண்களினாலும் எங்களைப் பார்த்தருள்வாயாக. எங்கள் பக்கமுள்ள பாவம் ஒழிந்துவிடும்.

அடியவர் திருநட்சத்திரங்கள்

சார்வரி—ஆடி

சைவம்

6உ—கூற்றுவநாயனார்
15உ—பெருமிழலைக் குறும்பநாயனார்
16உ—சுந்தரமூர்த்தி சுவாமிகள்
சேரமான்பெருமாள் நாயனார்
17உ—கலியநாயனார்
கோட்புலிநாயனார்
30உ—மூர்த்தி நாயனார்
புகழ்ச்சோழ நாயனார்

வைணவம்

12உ—ஆண்டாள்

திருவாரூர்



திருவாரூர்க்கோயிலும், கமலாலயத்திருக்குளமும்

"கோயில் ஐந்து வேலி, குளம் ஐந்து வேலி" என்று பழமொழி அதாவது ஒவ்வொன்றும் முப்பது ஏக்கர் பரப்புடையது.